# என் கோடையில் மழையானாவள்

அபிநேத்ரா

# அத்தியாயம் 1

அதிகாலை பனிக்காற்று மேனியை தழுவிச் செல்ல, நிதானமாய் மூச்சை உள்ளிழுத்தபடி கண்களை மூடித் திறந்தாள் வெண்பா. அந்தக் குளிர் காற்று உடலின் எல்லா உறுப்புக்களையும் உஷ்னமாக்கிக் கொண்டு திரும்பியது. போர்வையை மீண்டும் இழுத்துப் போர்த்திய வண்ணம் உறங்கப் போனவளை உறங்க விடாமல் அழைத்தது சித்தி இளமதியின் குரல்.

“குட்டிம்மா… எழுந்திரு ஆறு மணியாகிருச்சு… ” என சித்தி கூற சட்டென மஞ்சத்தில் எழுந்து அமர்ந்து கொண்டாள்.

சுற்றும் முற்றும் தனது கைப்பேசியை தேடியவளுக்கு நேற்று இரவு பாட்டு கேட்டு விட்டு சார்ஜில் போட்டு விட்டுத் தூங்கியது அப்போது ஞாபகத்தில் வந்தது. சித்திக்குத் தெரிந்தால் அவ்வளவு தான் என்று தோன்றிய மறுகணம் மஞ்சத்தை விட்டும் தாவி எழுந்தவள் சுவிட்சை ஆஃப் செய்து கைப்பேசியை சார்ஜரை விட்டும் கழற்றி வைத்து விட்டு குளியலறைக்குள் புகுந்தாள்.

யாரோ ஒருவன் தன் கைப்பேசியை இரவில் சார்ஜ் போட்டுவிட்டு உறங்கியதில் அந்த செல்போன் வெடித்து அவனும் செத்துப் போய் விட்டானாம் என்ற செய்தியை எப்போது

கேள்வியுற்றாரோ அன்றிலிருந்து வீட்டில் இரவு ஒன்பது மணிக்கு மேல் யாரும் செல்போனை சார்ஜ் செய்யக் கூடாது என்பது சித்தியின் எழுதப்படாத சட்டம். சித்தப்பா ரத்தினவேலுக்கும் கூட.

காலைக் கடன்களை முடித்து விட்டு கல்லூரி செல்வதற்காக தயாராகி வந்தவளை வரவேற்றது சித்தியின் மணக்கும் ஏலக்காய் தேநீர். அதை வாங்கி மூச்சை உள்ளிழுத்து மோப்பம் பிடித்தவள் ரசித்துப் பருகினாள். கண்டியின் குளிர் கால நிலைக்கு சித்தியின் தேநீர் இதமாக தொண்டைக்குள் இறங்கியது.

“குட்டிம்மா… ” என்றவர் அவளருகில் அமர்ந்து கொள்ள, தேநீரை பருகிக் கொண்டே என்ன என்பதை போல் பராத்தாள்.

“இன்னைக்கு பிப்ரவரி 14 மறந்துட்டியா?” என்று அவர் கேட்கையில் தான் இன்று அவளது தாயார் இலக்கியாவின் பிறந்த நாள் என்று.

“அச்சோ… சித்தி அம்மா பர்த்டே இன்னைக்கு… அம்மா வேற நான் பேசலைனு பார்த்துட்டு இருப்பாங்க… ”என்றவள் அந் நிமிடமே ஊரில் இருக்கும் தன் தாய்க்கு அழைப்பெடுத்து வாழ்த்து கூறியவள் அடுத்த விடுமுறைக்கு வருவதாக கூறி சித்தியிடம்

செல்போனை கொடுக்க சித்தி, கவின் இருவரும் அவர்களது வாழ்த்தை தெரிவித்தனர்.

கல்லூரி செல்ல நேரமாவதை உணர்ந்தவள் தன்னைறைக்குள் சென்று சைட் பேக்கை எடுத்து மாட்டிக் கொண்டு பள்ளி செல்ல தயாராகி இருந்த சித்தி மகன் கவினையும் அழைத்துக் கொண்டு பேரூந்து நிலையம் நோக்கி நடந்தாள்.

வெண்பா பிறந்து வளர்ந்தது எல்லாமே ஹட்டன் பிரதேசத்தில் ஓர் ஊரில் தான். தாய் இலக்கியா உயர்தர தமிழ் பாட ஆசிரியையாக பணியாற்றுகிறார். தந்தை குமாரகுரு இலங்கை மின் வாரியத்தில் பணி புரிந்து வருகிறார். வெண்பாவின் தாயும் தந்தையும் அவளது சிறு வயதிலேயே விவாகரத்து செய்து பிரிந்து வாழ்ந்து வருகின்றனர.

உயர் தரத்தில் வணிகத்துறையை தேர்வு செய்து சிறந்த முறையில் சித்தயடைந்தவள் பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகவே கண்டியில் இருக்கும் தனது தாயின் உடன் பிறப்பான இளமதியின் வீட்டில் தங்கியிருந்து மேற்படிப்பை தொடர்ந்தாள். தனது தாயின் குடும்பத்திற்கு அவள் தான் ஒரே பெண் வாரிசு என்பதால் அவளது இரு சித்தி மார்களுக்கும் வெண்பா மீது பாசம் அதிகம்.

# என் கோடையில் மழையானவள்

அன்றும் பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்தவளது விழிகள் வழமை போல தன் மனங்கவர்ந்தவனையே தேடிக் கொண்டிருந்தன. அந்நேரம் தூரத்தில் கையிலிருந்த புத்தகத்தை ஒரு கையால் சுழற்றிய வண்ணம் ஸ்டைலாக நடந்து சென்று கொண்டிருந்தவனை கண்ட மறு நொடி அவள் கால்கள் தானாக அவன் இருக்கும் திசை நோக்கி நகர்ந்தது.

"குரூஊஊஊஊ… டேய் குரூ… கொஞ்சம் நில்லுடா… " என்று கத்தியவள் அவளது சுருள் அளகக் கூந்தல் காற்றில் அங்குமிங்கும் அசைந்தாட தனது சைட் பேக்கின் வார்ப்பட்டியை பிடித்த வண்ணம் அவனை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தாள் அவள்.

அவள் தன்னை கத்தி அழைப்பது கேட்டாலும் அதை சட்டை செய்யாதவன் முன்னேறி நடந்தான்.

அவனது வேக நடைக்கு ஈடு கொடுக்க முடியாமல் வேகமாக மூச்சிறைக்க ஓடி வந்து அவனை வழி மறைத்தவள் தன் இரு கைகளாலும் முழங்காலை குனிந்து பிடித்த வண்ணம்,

"குரூஊஊஊ… நான் கத்துறதுஹ் உனக்கு கேட்கலையாடாஹ்… ஃபூல்? உன் காது என்ன செவிடாஹ்… ?" என ஆழ மூச்சுக்களை இழுத்து விட்ட வண்ணம் கேட்க, அதில்

எரிச்சலடைந்தன் அவளை நோக்கி,

“நீ கூப்பிட்டா நான் நிற்கனுமா? நான் இந்த காலேஜ் சீனியர்ங்குற மரியாதை கொஞ்சம் கூட இல்லாம எப்போ பாரு டேய், வாடா, போடான்னு பேசுற… உன்னை ராக்கிங் பண்ண விடாம விட்டது தப்பாப் போச்சு… சரி என்ன விஷயம்? சீக்கிரம் சொல்லிட்டு இடத்தை காலி பண்ணு… ” என்று அதே எரிச்சல் மீதூறும் குரலில் கேட்டான்.

நீண்ட பெரு மூச்செறிந்த வண்ணம் நிமிரந்தவள், தன் பையில் இருந்து டீ சர்ட் ஒன்றை எடுத்து அவன் முகத்துக்கு நேர நீட்டிய வண்ணம்,

“ஓகே… சீனியர் சார்… இன்னைக்கு வாலண்டைன் டேய்ல்ல அதான் ப்ரபோஸ் பண்ணிட்டு… அப்படியே இந்த டீ சர்ட்டையும் உனக்கு கிஃப்ட்டா கொடுக்கலாம்னு எடுத்துட்டு வந்தேன்… ஐ லவ் யூ குரு… ” என்று கூற அவளது செய்கையில் கடுப்படைந்தவன், புருவங்களை சுருக்கி அவனை நோக்க அவளோ எதையும் கண்டு கொள்ளாமல் டீ சர்ட்டை முகத்துக்கு நேரே ஆட்டிக் கொண்டிருந்தாள்.

“ஏய் லூசாடி நீ? எப்போ பாரு லவ் பண்ணு பண்ணுனு என்னை இப்படி டார்ச்சர் பண்ணிக்கிட்டு என் பின்னாடியே சுத்திக்கிட்டு இருக்க? உன்க்கு வ்வேற வ்வேலையே இல்லையா?” என ஏகத்துக்கும் பல்ஸ் எகிறக் கத்த அவளோ தன் முத்து மூறல்கள் தெரிய புன்னகைத்த வண்ணம் அதே போஸில் நின்று கொண்டிருந்தாள் அவள்.

அவளை பார்க்க பார்க்க கோபமடைந்தவன் புத்த தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும் பொருட்டு புத்தகம் இருந்த கையை இடுப்பில் வைத்த வண்ணம் மறுகையால் தலையை அழுந்தக் கோதினான்.

“சகலக பேபி… சகலபேபி லுக்கு விட தோணலையா… ” என்ற பாட்டை பாடிய வண்ணம் தலையை ஆட்டி ஆட்டி நடனமாடிக் கொண்டே அந்த வாகை மரத்தை நோக்கி வந்து கொண்டிருந்தான் குருவின் நண்பன் சுகீர்த்தன் என்னும் சுகீ.

தூரத்திலே அவர்கள் இருவரையும் கண்டு கொண்டவன், அவள் ஏதோ அவன் முகத்துக்கு நேரே நீட்டிய வண்ணம் இருக்க குரு அவளை கோபமாக திட்டுவதும் தெரிந்தது. இப்படி அவள் ஏதாவது கிறுக்குத்தனமாக செய்து வாங்கிக் கட்டிக் கொள்வது

வழக்கமான ஒன்று தான்.

"ஓஓ... வாலண்டைன் டேய்ல்ல? அதான் அந்த மேகி மண்டை அவனை தேடிக்கிட்டு இருந்து இருக்காப்புல... சிக்கிட்டான்யா சித்தப்பு... "என்று தனக்குள்ளேயே கூறி சிரித்துக் கொண்டவன், “சுகீ இந்த நல்ல சான்ஸை விட்டுறாதே அவனை போய் கலாய்ச்சிடு” என்று தன் மனசாட்சி கூறு அதை செயல்படுத்த எண்ணி அவ்விடத்தில் ஆஜரனான்.

“மச்சி என்னாச்சுடா? ஏன் இவளை திட்டுக்கிட்டு இருக்க?” என்று அவனருகில் வந்து நின்று வினவ, குருவை முந்திக் கொண்டு அவளே பதில் சொன்னாள்.

“அதை நான் சொல்றேன் சுக்குண்ணா... ” என்று ஏதோ பெரிய அதிசயத்தை சொல்வதை போல விழியகல அவனை நோக்க,

“அதுக்கு யேன்மா என் பேரை கொல்லுற? சுகீன்னு கூப்பிடு இல்லைன்னா சுகீர்த்தன்னு என் முழு பெயரை சொல்லி கூப்பிடு அதை விட்டுட்டு எப்போ பாரு சுக்கு சுக்குன்னு ஏதோ வீட்டு வேலைக்காரனை கூப்பிட்ற மாதிரி கூப்பிட்றியே மா. இது

உனக்கே நல்லா இருக்கா?” என தன் முகத்தை பாவமாய் வைத்துக் கொண்டு கேட்க,

"உங்க மூஞ்சியே அப்படி தானே சுக்குண்ணா இருக்கு... "என்று கூலாக கூற இவளுடன் வாதாடி பிரயோஜனமில்லை எனத் தோன்ற மார்புக்கு குறுக்கே கையை கட்டிய வண்ணம் அவளை மேலே பேசுமாறு சைகை செய்தான்.

“உங்களுக்கு தான் தெரியுமே சுக்குண்ணா இந்த குருவை லவ் பண்றேன்னு... ஆனா இந்த லூசு அக்செப்ட் பண்ணிக்கவே மாட்டேங்குறான்.” என அவள் இவனுக்கு காதலை சொன்னதையும் பரிசாக வழங்க டீ சர்ட் வாங்கிய கதையையும் அடுக்கிக் கொண்டே போனாள்.

அவன் முகத்துக்கு நேரே கையை நீட்டிக் கூற அவனை லூசு என்று கூறியதில் மேலும் கடுப்பான குரு தன் கையிலிருந்த புத்தகத்தால் அவளது தலையில் நங்கு நங்கென்று அடித்த வண்ணம், “நான் லூசாடி உனக்கு? செய்யுற லூசுத்தனத்தை எல்லாம் நீ செஞ்சிட்டு என்னை லூசுன்னு சொல்றியா?. டீ சர்ட்டை சுருட்டி கசக்கி அழுக்குத்துணி மாதிரி பேக்ல போட்டுக்கிட்டு வந்து இப்படியே எடுத்து நீட்டுற? இது தான் நீ ஒருத்தருக்கு

கிஃப்ட் கொடுக்குற லட்சணமா? ஒருத்தருக்கு கிஃப்ட்டை எப்படி கொடுக்கனும்னு கூட தெரியாது இதுல என்னை லூசுன்னு சொல்ற. நீ தான்டி லூசுஊஊ… ” என்று கூற அவள் தலையை பிடித்த வண்ணம் குனிந்து கொண்டே போனாள் அவள்.

இதை கேட்டுக் கொண்டிருந்த சுகீர்த்தனுக்கு அவனை கலாய்க்க ஒரு வாய்ப்பு கிடைக்க, குருவின் ஒரு புற தோளைத் தொட அவனை திரும்பி கேள்வியாய் நோக்க,

“உனக்கு அவ கிஃப்ட் கொடுத்ததுக்கு தான் கோவப்படுறியா? இல்லை அவ ஒழுங்கா கொடுக்கலைன்னு கோவப்படுறியா?” என புரியாமல் கேட்க, அவன் கேட்ட கேள்வியை தன் காதுகளுக்குள் உள் வாங்கிக் கொண்டவள், சட்டென நிமிரந்து குருவை நோக்கி,

“அப்போ உனக்கு இந்த கிஃப்ட் பிடிச்சிருக்கு. அதை அழகா பேக் பண்ணி கொடுக்கலைன்னு தான் கோவமா இருக்க கரெக்ட்?..” என தன் கரு விழிகளை உருட்டிய வண்ணம் கூற, அவள் கூறிய விதத்தில் சுகீர்த்தனுக்கு குபீர் சிரிப்பொன்று எட்டிப் பார்த்தது.

தன் நண்பன் தன்னைப் பார்த்து கேலியாக சிரிப்பதை

உணர்ந்தவன் அவனை ஏகத்துக்கும் முறைத்து வைக்க கப்பென்று வாயை மூடிக் கொண்டான் சுகீ.

“ஓ அதுவா குரு… அதை யேன் கேக்குற… அன்னைக்கு சித்தி கூட ஷாப்பிங் போனேனா… சோ சித்திக்கு தெரியாம இதை வாங்கிட்டு வந்துட்டேன். அப்புறம் தான் யோசிச்சேன் இதை எப்படி பேக் பண்றதுன்னு… அதான் இப்படியே பேக்ல போட்டுகிட்டு வந்துட்டேன். சித்தி பார்த்தால்அவ்வளவு தான் அம்மா கிட்ட போட்டு கொடுத்துடுவாங்க… அப்புறம் நம்ம லவ் மேட்டர் வெளியே தெரிஞ்சிடும்… ” என சோகமே உருவான குரலில் சொன்னவளை முறைத்தவன்,

“நம்ம லவ் மேட்டர்? நான் எப்போ உன்னை காதலிச்சேன்… நீயா கற்பனை பண்ணிக்கிட்டு உளறாதே… இந்த காலேஜ் பூரா இதையே தான் சொல்லி வச்சிருக்க… உன்னை… ” என்று மீண்டும் அடிப்பதற்காக சுற்றிலும் தேட,

“டேய் குரு இவ தான் உளறிக்கிட்டு இருக்கான்னு நீ வேற… ” என வெண்பாவின் பக்கம் திரும்பி, “யேன்மா தாயே… பேசாம கிளாஸூக்குப் போமா… ” என்று கூற அவளோ அதையெல்லாம்

கண்டு கொள்ளாமல் தன் மார்புக்கு குறுக்கே கைகளை கட்டிய வண்ணம் நின்ற விதம் குருவின் கோபத்தை மேலும் தூண்டியது.

கண்கள் சிவக்க கோபமாக அவளை நோக்கி,

“ஏய்… உன்னையும் பிடிக்கலை. உன் கிஃப்ட்டையும் பிடிக்கலை. மூடிட்டு படிக்கிற வேலையை மட்டும் பாரு… இன்னொரு தடவை லவ் பண்றேன் கிஃப்ட்டு கொடுக்குறேன்னு என் பின்னாடி வந்த உன் மொகறையை பேத்துடுவேன்… மைன்ட் இட்… சரியான இம்சைடி நீ” என்றவன் தன் சுட்டு விரலை நீட்டி எச்சரித்து அவ்விடத்தை விட்டும் நகர்ந்தான்.

“கோவத்துல கூட ரொம்ப அழகாக இருக்கான்ல சுக்குண்ணா… ” என அவன் சென்ற திசையை பார்த்த வண்ணம் புன்னகையுடன் கூறியவளைப் பார்த்த சுகீர்த்தனுக்கு தலையில் அடித்துக் கொள்ளலாம் போல இருந்தது.

“என்னடா இவ அவன் எவ்வளவு திட்டினாலும் அவன் பின்னாடியே சுத்திக்கிட்டு இருக்கா?” என்று தனக்குள்ளேயே அவளை நோக்கி,

“ஏன்மா அவன் தான் லவ் பண்ண மாட்டேன்னு சொல்றான்ல. பின்னே ஏன் இப்படி தினம் தினம் திட்டு வாங்குற?” எனக் கேட்க,

“காதல்ல இதெல்லாம் சகஜமப்பா… ” என்று கண்ணடித்து சிரித்தவள், “இதை என் டோரோகொய்க்கு அழகாக பேக் பண்ணி நீங்களே கொடுத்துடுங்கண்ணா… ” என தன் கையிலிருந்த டீ சர்ட்டை அவனது கைகளில் திணித்துவிட்டு அவனது பதிலையும் எதிர்பாராது தன் அலை அலையான கூந்தல் காற்றில் அசைந்தாட துள்ளி ஓடினாள்.

“அடிப்பாவி அவன் கிட்ட இதைக் கொடுக்க சொல்லி என்னை கோர்த்து விட்றாளே… ம்ம்… அதென்ன புதுசா டோரோகோய்… ?” என அதற்கு அர்த்தம் என்னவாக இருக்கும் என யோசித்த வண்ணமே விரிவுரை அறையை நோக்கி நடந்தான்.

# அத்தியாயம் 2

“எத்தனை தடவை சொல்றது… இதுக்கு மேலேயும் என்னை டிஸ்டர்ப் பண்ணாதீங்க… ”

“… ”

“என்னால அந்தாளு கிட்ட பேச முடியாது… நீங்களே சொல்லிடுங்கனு சொல்றேன்ல… ” என்று தன் உட்சபட்ச தொனியில் இரைந்து கத்தியவன் தனது கைப்பேசியை தூக்கித் தரையில் அடிக்க அவன் அடித்த வேகத்தில் துண்டாக்கப்பட்டது.

பக்கத்தில் அவனையே பார்த்தபடி கை கட்டிய வண்ணம் அமைதியாக நின்று கொண்டிருந்தான் சுகீர்த்தன். தன் நண்பனை பற்றி முழுவதுமாக தெரிந்து வைத்திருக்கும் ஒரே ஜீவனாயிற்றே.

கீழே சிதறிக் கிடந்த அவனது ஸ்மார்ட் போனின் பாகங்களை பொறுக்கிக் கொண்டே,

“இது ஒன்பதாவது… இன்னும் எத்தனை போன் இவன்

கோபத்துக்கு பலியாகப் போகுதோ?.. கடவுளே இந்த போனை எல்லாம் இவன் கிட்ட இருந்து காப்பாத்துப்பா… ” என வாய்க்குள் முனுமுனுத்த வண்ணம் குருவை நோக்கினான்.

தலையை கைகளால் தாங்கிய வண்ணம் மஞ்சத்தில் அமர்ந்திருந்தவனை ஏதேதோ பல நினைவுகள் வந்து அவனை அலைக்கழித்தது. குருவின் தற்போதைய மனநிலையை ஊகித்தவன் அவனருகில் அமர்ந்து கொண்டவன்,

“குரு இன்னும் எவ்வளவு நாளைக்கு தான்டா இதையே நினைச்சிக்கிட்டு இருப்ப? இதில் உன்னோட தப்பு எதுவுமே இல்லையேடா… ” என்று ஆறுதலாக தோளில் தட்டியவன் குருவை கூர்ந்து நோக்க இன்னும் அவன் முகம் தெளியாமல் இருப்பதை கண்டு,

“டேய் உன் தாத்தாக்கு கோல் பண்ணி பனம் அனுப்பச் சொல்லுடா.” என்று அவனது போனை நீட்ட,

“எதுக்குடா… ” என முதலில் புரியாமல் கேட்க,

“வேற எதுக்கு பத்தாவது புது போன் வாங்க தான்…

வழமையா நடக்குறது தானே…

எங்க வீட்டு ஹிட்லர் இந்த டப்பா செல்லை வாங்கி கொடுத்ததுக்கே என்னா பில்டப் தெரியுமா? இனி படிச்சு முடியுற வரைக்கும் போனே கேட்க கூடாது… அப்படி தேவைன்னா வேலைக்கு போய் நீயே வாங்கிக்கோன்னு சொல்லிட்டாருடா… உனக்கெல்லாம் பாரு ஒரு வருஷத்துக்கே நாலு அஞ்சு போன்… எனக்கு இப்படி ஒரு தாத்தா இல்லாம யோயிட்டாரே… ” என்று முகத்தில் போலிக் கவலையை பூசிக் கொள்ள, சுகீர்த்தனின் முகம் போன போக்கை பார்த்து குருவின் உதடுகள் தானாக மலர்ந்தன.

நண்பனின் முகத்தில் புன்னகையை கண்டு கொண்டவன் “ஹப்பாடா சிரிச்சிட்டான்… ” என்று நெஞ்சின் மத்தியில் கை வைத்து பெருமூச்செறிய அவனை நோக்கி,

“மச்சி தண்ணி அடிக்கலாமா… ?” என்று கேட்க அதன் அர்த்தம் புரிந்து கொண்டவன் முகத்தில் மீண்டும் ஒரு குறு நகை எட்டிப் பார்த்தது.

நீங்க நினைக்கிற மாதிரி நம்ம ஹீரோவுக்கு எந்த விதமான கெட்ட பழக்கமும் இல்லைங்க. குரு ஒரு டீடோட்டலர். சுகீர்த்தன் மாத்திரம் எப்போதாவது குடிப்பான்.

# என் கோடையில் மழையானவள்

குருவுக்கு எப்போதெல்லாம் ஒருத்தரை திட்டத் தோன்றுகிறதோ அப்போதெல்லாம் தன் நண்பனுக்கு ஒரு ஃபுல்லை வாங்கிக் கொடுத்தால் போதும். கலர்கலராக அவன் வாய்க்கு வந்ததை எல்லாம் சொல்லி தன் நண்பனின் சோகத்திற்கு காரணமானவர்களையெல்லாம் திட்டித் தீர்த்து விடுவான் சுகீ. இவனது செய்கை குருவிற்கு சுவாரசியமாக இருக்கும். காலையில் அவனிடம் இரவில் பேசியதெல்லாம் கூறினால் அவனாலேயே நம்ப முடியாது போகும். அந்த அளவுக்கு அவனது வார்த்தைகள் ஒவ்வொன்றும் பவர் ஃபுல். குருவின் மனதை புரிந்து நடப்பதில் சுகீர்த்தனை மிஞ்ச முடியாது. அந்தளவுக்கு தன் நண்பனை பற்றி அங்குல அங்குலமாக அறிந்து வைத்திருக்கிறான்.

குருப்பிரகாஷ் வேதநாயகம். இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சர் திரு.வேதநாயகத்தின் ஏகப் புத்திரன். இத்தனை நேரம் தன் வெறுப்பை கக்கியது தனது தந்தையின் பி.ஏ ரவிக்குமாரிடம் தான். பேராதனை பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை இறுதியாண்டில் படித்துக் கொண்டிருக்கிறான். குருவின் தாய் இவனது பதிநான்காம் வயதில் ஆக்ஸிடன்டில் தாய் பானுப்பிரியாவை இழந்து நின்றவனுக்கு அவனது தாத்தா பாட்டியே உலகமாகிப் போனார்கள்.

தற்போது சுகீர்த்தனும் அவனுமாக ஒரு அறையை

வாடகைக்கு எடுத்து அதில் தங்கி வருகின்றனர். பல்கலைக்கழக விடுமுறை நாட்கள் அவனுக்கு பொலன்னறுவை தாத்தா வீட்டில் தான்.

பல்கலைக்கழக வளாகத்தின் புற் தரைக்கு அப்பால் இருந்த மனற் தரையில் குச்சியால் எதையோ கிறுக்கிய வண்ணம் வெண்பாவும் அவளை சூழ அவளது தோழிகள் குழாமும் நின்று கொண்டிருந்தனர்.

“ஏய் திவி… பாரு சரியா தான் கவுண்ட் பண்ணிக்கிட்டு இருக்கேனா… ? என தரையை கூர்மையாக ஆராய்ந்தவாறு தன் தோழி திவ்யாவிடம் வினவ,

“ம்… ஆமாடி… சீக்கிரம் பண்ணு… ” என அவளும் பதற்றமாகவே இருந்தாள். சுற்றி இருந்த மற்ற மூவருக்கும் கூட அதே பதற்றம்.

அதே நேரம் தன் பைக்கை பார்க்கிங் ஏரியாவில் நிறுத்தி விட்டு சுகீர்த்தனுடன் கதை அளந்த வண்ணம் வந்து கொண்டிருந்தவன் அங்கே வெண்பா ஏதோ குச்சியை வைத்துக் கொண்டு தரையில் ஏதோ கிறுக்கிக் கொண்டிருப்பதும் அதன் பின் துள்ளிக் குதித்ததையும் அவனது லேசர் கண்கள் கண்டு

கொண்டன. சுற்றியிருந்த அவளது தோழிகள் வேறு நிரம்பி வழிந்த புன்னகையுடன் அவளுக்கு கை குலுக்குவதும் தெரியவே அவனுக்கு ஏதோ வித்தியாசமாய் பட்டது.

அதையே சுகீர்த்தனும் அவதானித்துக் கொண்டிருக்க அவனுக்கும் அங்கு என்ன நடக்கிறது என்பது மட்டும் புரியவே இல்லை. மெதுவாக குருவின் பக்கம் தலையை திருப்பி நோட்டம் விட அவனது பார்வையும் அதே திசையில் நிலைத்திருந்தது.

சும்மா விடுவானா சுகீர்த்தன்... “மச்சி... அதுங்க என்னடா பண்ணிக்கிட்டு இருக்குதுங்க? அந்த மேகி மண்டை வேற இந்த குதி குதிக்குறா. நீ வேற அவளையே லுக்கு விட்டுக்கிட்டு இருக்க... சம்திங் சம்திங்... ” என ஏதோ தீவிரமான யோசனை குரலில் நாடியை அழித்த வண்ணம் அங்கேயே பார்த்தபடி கேட்க, அதை வைத்து தன் நண்பன் தன்னை கலாய்க்க முனைவதை உணர்ந்தவன் அவன் முதுகில் படாரென்று ஒரு அடியை போட,

“என்னடா பட்டுனு அடிச்சுட்ட?.. வா என்ன நடக்குதுனு அங்கே போய் பார்க்கலாம்” என சுகீ முன்னேற அவனை காலரால் பிடித்து பின்னோக்கி இழுத்தவன் தன் ஒரு கையால் தனது வாயை பொத்திக் காட்டி மூடிக் கொண்டு போகுமாறு கூற

நீண்ட பெருமூச்சொன்றை வெளியேற்றியவன் பேசாமல் குருவோடு நடந்தான்.

வெண்பாவும் அவளது தோழியரும் இருந்த வழியை தாண்டி செல்ல முற்பட யாரோ “உனக்கும் குருவுக்கும்… ” என குருவின் பேரை உச்சரிப்பது அவன் காதுகளுக்கு விழ சட்டென திரும்பி அவர்களை நோக்கி வந்தான்.

அவன் வந்தது கூட தெரியாமல் அவளது கவணம் தரையிலே பதிந்திருந்தது. சுற்றியிருந்த அவளது தோழியர் கும்பல் விறைப்பாக நின்ற குருவை கண்டதும் வெலவெலத்து போய் “ஐயோ சீனியர்டி மாட்டினா அவ்வளவு தான்” என தங்களுக்குள் முனுமுனுத்தவாறு அங்கிருந்து ஓட்டம் பிடித்தனர்.

“திவி இப்போ சொல்லு… இ… ” என்றவாறு தலையை உயர்த்திப் பார்க்க இடுப்பில் கையை வைத்த வண்ணம் அவளை முறைத்தான் அவன். குருவை கண்ட அவளது முகத்தில் கோடி பிரகாசம்.

“ஐ… குரு டைமிங்ல வந்துட்ட… இங்கே பாரு பாரு… “ என தரையை காட்ட, அதை பார்த்தவனது கோபம் இரு மடங்கானது.

குருப்பிரகாஷ், வெண்பா என இருவரது பெயரையும் எழுதி ஃப்ளேம்ஸ் (FLAMES) பார்த்திருக்க அதன் பக்கத்தில் ஒரு ஹார்ட் வரைந்து அதனுள் ஜீவீ (GV) என எழுதப் பட்டிருந்தது. இவளது சிறு பிள்ளைத் தனமான செயலை எண்ணி அழுவதா? சிரிப்பதா? என சுகீர்த்தன் குழம்பிப் போயிருக்க குருவோ அவளை என்ன செய்தால் தகும்? என தன் கோபத்தை அடக்கப் பெரும்பாடு பட்டுக் கொண்டிருந்தான்.

“லூசு என்ன பண்ணி வச்சிருக்க?” என கோபத்தை கடினப்பட்டு கட்டுப்படுத்திய குரலில் வினவ, தன் ஒரு கையை இடுப்பில் வைத்த வண்ணம் மறு கையில் இருந்த குச்சியை நீட்டிக் கொண்டே,

“ஹாஹா… இது கூட தெரியலையா? ஃப்ளேம்ஸ் பார்த்து இருக்கேன்… பாரு சூப்பர் ஜோடிப்பா” என்றவள் அவன் முகத்துக்கு நேரே சற்று எம்பி, “உனக்கும் எனக்கும் மேரேஜ்னு வந்து இருக்கு… ” என மெல்லிய குரலில் இயம்ப அவனுக்கோ அவளது செய்கை பெரும் அவஸத்தையாய் போயிற்று.

“லூசாடி நீ… உனக்கு வ்வேற வ்வேலையே இல்லையா…

எந்தக் கேனையன் சொன்னான் உனக்கு இதெல்லாம்… உனக்கு எத்தனை தடவை சொன்னாலும் புரியாதா? ச்சே.” என்று பெரும் சினம் கொண்டு கத்த அவளோ இது அவனது வழமையான டயலொக் தானே என சிறிதும் பொருட்படுத்தாது கை கட்டி நின்று கொண்டிருந்தாள்.

“ஐயோ ஆரம்பிச்சுட்டான்யா… இந்த மேகி மண்டை வேற இந்த மாதிரி ஏதாவது பண்ணி கடைசியில நம்மளை மாட்டி வச்சிடுமே இப்போ என்ன பண்ணலாம்… ? என தீவிர யோசனையில் இறங்கியிருந்தான் சுகீர்த்தன்.

ஆனால் அங்கே குருவின் திட்டல் தொடர்ந்து கொண்டிருந்தது.

“நான் தான் உன்னை பிடிக்கலைனு சொல்றேன்ல பின்னே ஏன் உயிரை வாங்குற? எப்போதும் இப்படி பொறுமையாவே பேசிக்கிட்டு இருப்பேன்னு நினைச்சிட்டு இருக்காதே… இதோ… ” என தரையை காட்டி “ இதோ இதெல்லாம் கனவுல கூட நடக்காது… ” என தன் ஷூக் கால்களால் தாறுமாறாக அதனை அழித்து விட்டு நிமிர்ந்தவன்,

“உன் காதலும் இப்படி தான் அழிந்து போயிடும்... ” என்று கூறி அவன் திரும்பி நடந்தான்.

இத்தனை நேரம் வாங்கிய திட்டுக்களை ரசித்துக் கொண்டிருந்தவளுக்கு அவன் இறுதியில் உதிர்த்துச் சென்ற வார்த்தைகள் காயப்படுத்தவே வேதனையில் அவளது முகம் கூம்பிப் போனது. அவளது முக வாட்டத்தை பார்த்த சுகீர்த்தனுக்கே என்னவோ செய்தது.

மறு கணம் புன்னகையுடனே நிமிர்ந்தவள் அவனருகே ஓடிச் சென்று,

“அப்போ அழிக்க முடியாத மாதிரி இருந்தா ஓகே தானே... ?” என அவனைப் பார்த்து வினவ, எரிப்பதை போல அவளை முறைத்து தன் கையை அவள் முகத்துக்கு நேரே நீட்டி ஏதோ கூற வாயை திறந்தவன் பின் ஏதும் பேசாமல் வேகமான எட்டுக்களுடன் அவ்விடம் விட்டும் நகர்ந்தான்.

அவன் ஏன் ஒன்றும் பேசாமல் போய் விட்டான்? எனப் புரியாமல் திரும்ப அவளை முறைத்த வண்ணம் நின்று கொண்டிருந்தான் சுகீ. இவளோ என்ன என்பதைப் போல் பார்த்து வைக்க,

“உனக்கு நிஜமாவே கிறுக்கு பிடிச்சிருச்சா… ? அவன் தான் இவ்வளவு திட்டுறானே ஏன்மா இப்படி பண்ணுற?” என பரிதாபமாய் கேட்டான்.

அவளோ தன் ஷிபான் துப்பட்டாவை காற்றில் ஆட விட்ட வண்ணம் அவனை நோக்கி,

“ஏன்னா நான் குருவை காதலிக்கிறேன்… அவ்வளவு தான் சிம்பிள்… ”

“அப்புறம் சுக்குண்ணா… இப்போ குரு கொஞ்சம் அப்செட்டா இருப்பான்… ” என தன் பையை திறந்து சாக்லேட் ஒன்றை எடுத்து அவன் கையில் திணித்து விட்டு,

“இதை மை மலிங்கிக்கு கொடுத்துடுங்க… ” என மறுபடியும் தன் துப்பட்டாவை காற்றில் பறக்க விட்ட வண்ணம் நடந்தாள்.

அவள் பேசிச் சென்றது அவன் மூளைக்கு சரிவர புரியாமல் “என்னது மங்கீயா… ? என சற்று குரலை உயர்த்தி கேட்க,

"மங்கி இல்லை சுக்குண்ணா மலிங்கீஈஈஈஈ… "என் திரும்பிப் பாராமலே கத்திக் கொண்டே ஓடினாள். இம்முறையும் குழம்பிப் போனது என்னவோ சுகீ தான்.

# அத்தியாயம் 3

பூஜை அறையிலிருந்து வந்த சாம்பிராணியின் நறுமணம் வீட்டை நிறைத்துக் கொண்டிருந்தது. தியாணத்தை முடித்துக் கொண்டு எழுந்த வெண்பா சூடம் ஏற்றி ஆரத்தி காட்டினாள். அம்மனின் திருவுருவப் படத்தை உற்று நோக்கி வணங்கிக் கொண்டிருந்த சித்தி இளமதியின் அருகில் வந்து நிற்க ஆரத்தியை தொட்டு கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

ஹாலில் அமர்ந்திருந்த சித்தப்பாவிடமும் கவினிடமும் ஆரத்தியை காட்ட அதை தொட்டு ஒற்றிக் கொண்டே,

“அக்கா… உங்களுக்கு என்னாச்சு.?” என கண்களை அகலத் திறந்து வியப்புடன் கேட்க, ஒற்றை கையுயர்த்தி கொஞ்சம் இரு என்பதை போல சைகை செய்தவள் ஆரத்தி தட்டை சித்தியின் கையில் கொடுத்து விட்டு கவினை நோக்கி,

“ஏன்டா… ” என்று கேட்டுக் கொண்டே அவனருகில் வந்த நிற்க,

“இல்லைக்கா… நீங்க சும்மாவே இங்கே குளிருதுனு

குளிக்கவே மாட்டீங்க... இன்னைக்கு என்னடான்னா காலையிலே குளிச்சு... சேலை எல்லாம் கட்டி, பூஜை எல்லாம் பண்ணிருக்கீங்களே... எனி ஸ்பெஷல்... ” என வெண்பாவின் காதருகில் கிசுகிசுத்தான் கவின்.

“எல்லாம் ஒரு வேண்டுதல் தான் என் அருமை தம்பியே... ” என இழுவையாக கூறி அவன் காதருகே, “இதுக்கு மேல கேட்ட அடி வாங்குவ... ” என மெல்லிய குரலில் கூறிவிட்டு இதற்கு மேல் அங்கிருந்து இவன் ஏதாவது கேட்டு வைத்து சித்தி சித்தப்பா இருவருக்கும் ஏதேனும் சந்தேகம் வந்து விடுமோ என்ற பயத்தில் அவனது தோளில் கையிட்டு அணைத்த வண்ணம் வெளியே அழைத்து வந்தாள்.

தன்னை வெளியே அழைத்து வந்த காரணம் புரியாமல் மீண்டும் அதே கேள்வியை கேட்க, அவனை முறைத்த வண்ணம்,

“யேன்டா இதையே கேட்குற நான் புடவை கட்டி பார்த்ததே இல்லையா? ஒரு நாள் காலையிலே குளிச்சேன்னு இவ்வளவு கேள்வி கேட்குற? ம்ம்... நீ சின்ன பையன் இந்த டிசம்பர் எக்ஸாம் இருக்குல்ல? போ போய் படி” என்று அவனை விரட்டியவள்

நீண்ட பெரு மூச்சுடன் வீட்டினுள் நுழைந்தாள்.

காலை உணவை முடித்தவளுக்கு எப்படியாவது வீட்டிலிருந்து வெளியேற வேண்டிய அவசியம். இன்று வார இறுதி என்பதால் கல்லூரி விடுமுறை நாள் வேறு. சித்தியிடம் என்ன கூறி வெளியேறுவது என சித்தித்துக் கொண்டே தன் அறைக்குள் நுழைந்தவளுக்கு மேசை மேல் இருந்த திவ்யாவின் புத்தகத்தை கண்டதும் ஓர் எண்ணம் உதிக்க நேரே தன் சித்தியிடம் சென்றாள்.

மடித்து வைத்த துணிகளை அடுக்கிக் கொண்டிருந்த சித்தியின் அருகில் சென்று,

“சித்தி… ” என மெதுவாக அழைக்க,

“என்னம்மா… ?” என திருமபாமேலே கேட்டார்.

“நம்ம திவி இருக்காள்ல… அவளோட புக் ஒன்னு என்கிட்ட இருக்கு… அது அர்ஜன்ட்டா வேணும்னு கேட்டா நான் அவ வீடு வரை போய் கொடுத்துட்டு வரட்டுமா சித்தி?” என தட்டுத் தடுமாறி ஒருவாறு கேட்டு முடிக்க,

“நீ ஏன்மா அவ்வளவு தூரம் போகனும்? அதான் கவின்

இருக்கானே அவன் கிட்ட சொன்னா கொடுத்துட்டு வந்துட போறான்... ” என அவர் சாதாரணமாக கூற இவளுக்குத் தான் உள்ளே பக்பக்கென்றது.

“இல்லை சித்தி குரூப் அசைன்ட்மன்ட் இருக்கு... அதான் அவ வீட்டுக்கு போனா செய்ய ஈஸியா இருக்கும்ல நானே போறேன் சித்தி... ” என சமாளித்துக் கூறி முடித்தவளை வித்தியாசமாக நோக்கினார் இளமதி.

வெண்பா இதுவரை எந்தத் தோழியையும் சந்திக்க அனுமதி கோரியதேயில்லை. அவளது தோழி திவ்யாவை மாத்திரம் தான் வீட்டுக்கு அழைத்து வந்திருக்கிறாள். இவரே கூறினால் கூட “அவ்வளவு தூரம் எல்லாம் என்னால நடக்க முடியாது... ” என்று விடுவாள். பொதுவாக வெளியே எங்கேயும் போவதை அவள் அவ்வளவாக விரும்புவதில்லை. இன்று காலை முதல் அவளது செயல்கள் யாவும் சற்று வித்தியாசமாய் தான் அவருக்குத் தோன்றியது. இருந்தாலும் மறுப்பேதும் கூறாது சம்மதமாக தலையாட்டினார்.

தனக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொண்டு வெளியேறியவளை அழைத்த இளமதி,

“அன்னைக்கு சமன்குமாரி அக்கா வெலித்தலப்பை கொண்டு வந்து கொடுத்தாங்க... நம்ம திவிக்கு ரொம்ப பிடிக்கும்ல போய் இதை அவளுக்கு கொடுத்துடு... ” என்று ஒரு டப்பாவை அவள் கைகளில் கொடுக்க அதையும் தன் பையினுள் போட்டுக் கொண்டு கிளம்பினாள்.

வெலித்தலப்பை என்பது அரசி மா மற்றும் தேங்காய் கலந்து செய்யப்படும் ஒருவித இனிப்புப் பண்டம். இது இலங்கை சிங்கள மக்களின் பிரசித்தமான உணவு வகைகளில் ஒன்று.

“ஐயையோ இவ எதுக்கு இப்போ கோல் பண்ணிக்கிட்டு இருக்கா? இவன் பார்த்தா என்னை தானே வச்சு செய்வான்... ” என எண்ணியவன் வைப்ரேட் மோட்டில் இருந்த செல்லை எடுத்துப் பார்த்தவன் அழைப்பை ஏற்காமல் தன் பேண்ட் பாக்கெட்டினுள் போட்டு விட்டு அமைதியாக நின்றான் சுகீர்த்தன்.

மீண்டும் மீண்டும் அவனது செல்போன் அதிர ஒரு கட்டத்தில் பொறுமையிழந்தவன் குருவின் காதருகே,

“குரு... நீ சாமி கும்பிட்டு வெயிட் பண்ணு. ஒரு அர்ஜன்ட் கோல் பேசிட்டு வந்துட்றேன்... ” எனக் கூற அவனது

தலையசைப்பை பதிலாக பெற்றவன் கோயிலை விட்டும் வெளியே வந்தான்.

“இவ வேற… ” என அழைப்பை ஏற்றவன், “எதுக்கு இப்போ கோல் பண்ணிக்கிட்டே இருக்க? எடுக்கலைனா பிசியா இருக்கேனு தெரியலையா… ? நீ தான் கோல் பண்றனு தெரிஞ்சா என்னை தான் திட்டுவான் நிலமை புரியாம நீ வேற… யேன்மா???”என ஆரம்பத்தில் கத்தியவன் இறுதியில் அமைதியாகவே வினவினான்.

“சுக்குண்ணா இன்னைக்கு குருவோட பிறந்த நாள்ல?” என்று கேட்டவளது குரலில் மகிழ்ச்சி நிறைந்திருந்தது.

அவளது குரலில் தெரிந்த மகிழ்ச்சியை தானும் உள்வாங்கிக் கொண்டவன், “ஆமா அவன் பர்த் டே தான்… ஏன் ஏதும் கிஃப்ட் வச்சிருக்கியா மா? நீ கிஃப்ட் கொடுக்கலைனா தான் ஆச்சர்யம். ஹூம்… ” என புன்னகையுடனே கூறினான்.

“ஆமாண்ணா… சரி நான் இப்போ குருவை பார்த்தாகனுமே… எங்கேண்ணா இருக்கீங்க நீங்க ரெண்டு பேரும்… ?எனக் கேட்டதும் அவனுக்குப் புரிந்து விட்டது இன்று குருவிடம் தனக்கு

அடி வாங்கித் தராமல் விடப்போவதில்லை என்று.

அவர்கள் இருக்கும் இடத்தை சொல்ல மறுத்தவன் அவர்களை தேடி வர வேண்டாம் என எச்சரிக்க அதற்கெல்லாம் அசருபவளா வெண்பா? அவனை இன்று சந்தித்தேயாக வேண்டும் என பிடிவாதம் பிடித்து ஒரு கட்டத்தில் கெஞ்சியவளை மறுக்க மனமின்றி வேறு வழியில்லாமல் அவர்கள் கோயிலில் கோயிலில் இருப்பதை தெரிவிக்க உடனே புறப்பட்டு வந்தாள்.

கண்கள் மூடி தன் மனதில் இத்தனை நாட்கள் அரித்துக் கொண்டிருந்ததை கடவுளிடம் முறையிட்டுக் கொண்டிருந்தான் குரு. வேண்தலை முடித்தவன் கை கூப்பிய வண்ணம் தன் கண்களை திறக்க இதழ்களில் புன்னகை பூசிய வண்ணம் அவன் முன்னே நின்றிருந்தாள் வெண்பா.

அவளது அலை அலையான நீண்ட கூந்தலின் ஒரு பகுதியை தன் ஒரு பக்க மார்புக்கு மேலே போட்டப்பட்டிருக்க, முன் நெற்றியில் விழுந்த சிறு சுருள் கூந்தல் காற்றில் அசைந்தாடிய வண்ணம் இருக்க ,முதல் முறை புடவையில் அன்னப் பதுமை போல் நின்றவளை பார்த்தவன் ஒரு கணம் சித்தம் தடுமாறித் தான் போனான்.

அவன் இமைக்க மறந்து நிற்க, அவளோ மாறாத

மென்னகையுடன் தன் மன்னவனையே பார்த்து நின்றாள். குரு தன்னை மறந்து நிற்கும் நிலையை கண்டு கள்ளச் சிரிப்பை சிந்திய சுகீ தன் நண்பனின் காதருகில் கிசுகிசுத்து உணர்வு பெற வைத்தான்.

தன் மனம் சென்ற போக்கை எண்ணி தன்னையே கடிந்தவன், முடிந்தவளவு தன் முகத்தை விறைப்பாய் வைத்துக் கொண்டான்.

“ஹேப்பி பர்த்டே குரு… ” என வாழ்த்தி தன் சித்தி திவ்யாவிற்காக கொடுத்தனுப்பிய இனிப்பு அடங்கிய டப்பாவை நீட்ட, இன்று ஏனோ அவனுக்கு மறுக்கத் தோன்றவில்லை. சிறு புன்னகையுடனே நன்றி கூறியவன் அதை வாங்கிக் கொண்டான். முதல் முறையாக எந்த வாக்குவாதமுமின்றி தான் கொடுத்ததை வாங்கியது மட்டுமன்றி அவன் சிரித்ததையும் எண்ணி மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினாள் வெண்பா.

தன் நண்பனின் பார்வையில் வித்தியாசத்தை உணர்ந்து கொண்ட சுகீர்த்தனது முகத்தில் தானாக புன்னகை அரும்பியது.

“என்னம்மா வெண்பா என்னென்னவோ கிஃப்ட் கொடுத்துட்டு அவன் பர்த்டேக்கு இப்படி சில்வர் டப்பாவை கொடுக்குறியே?” என கேலி செய்ய,

“என்னண்ணா இப்படி சொல்லிட்டீங்க? இது ஸ்பெஷல் ஸ்வீட் சூப்பரா இருக்கும்… ” என்றவாறு சுகீயுடன் பேசியபடியே கோயிலை விட்டும் வெளியே வந்தனர். குருவின் பார்வை அடிக்கொருதரம் அவளை பார்த்து மீண்டது. இதை சரியாக கண்டு கொண்டது சுகீர்த்தனே.

எப்போதும் சிடுசிடுவென இருக்கும் விறைப்புப் பேர்வழி குரு இன்று அமைதியாக இருப்பது வெண்பாவிற்கே ஆச்சரியமாக இருந்தது. அவளை கண்டாலே துரத்துபவன் இன்று மட்டும் இப்படி மௌனம் சாதிக்க காரணம் புரியவில்லை அவளுக்கு.

“ஆமாண்ணா நீங்களும் குருவும் அடிக்கடி இப்படி தான் கோயிலுக்கு வருவீங்களா?” என்று குருவின் முகத்தில் பார்வையை பதித்த வண்ணம் சுகீர்த்தனிடம் வினவினாள்.

“அப்படியெல்லாம் இல்லை… குருவோட ஒவ்வொரு பிறந்த நாளுக்கும் கோயில் வருவது வழக்கம்… எங்கிருந்தாலும் அவனோட பிறந்த நாளைக்கு கோயிலுக்கு போகாம மட்டும் இருக்க மாட்டான்… ” என்று கோயில் வந்ததற்கான காரணத்தை விளக்கினான் சுகீ.

அவளும் குருவிடம், “அப்படியா… ?” எனக் கேட்க ஆமாம் என்பதை போல் தலையசைத்தவன்,

“இது என் அம்மாவுடைய ஆசை. எல்லா பிறந்த நாளைக்கும் கண்டிப்பா கோயில் போகனும்னு சொல்லுவாங்க.அவங்க இருந்த வரைக்கும் என்னோட ஒவ்வொரு பிறந்த நாளைக்கும் அவங்க கூட தான் கோயிலுக்கு போவேன்… ” என்றவனது குரலில் இழையோடியிருந்த வருத்தமும் கண்களில் தெரிந்த சோகமும் அவளை தாக்கியது.

குருவின் மனநிலையை மாற்ற எண்ணி,

“அப்புறம் குரு… நம்ம எப்போ லவ்வர்ஸ் ஆக போறோம்? ஆல்ரெடி நீ என் லவ்வர் தான்… ” என தரையை பார்த்து குனிந்த வண்ணம் கூற இத்தனை நேரம் அமைதியாக இருந்த குரு அவளது பேச்சில் கடுப்பானான்.

“ உன்னை திருத்தவே முடியாதுடி… ”என்று சிடுசிடுத்துக் கொண்டே தனது பைக்கை நிறுத்தியிருந்த இடம் நோக்கி நடக்க அவளும் அவன் பின்னாலேயே வேகவேகமாக நடந்தாள்.

“ஐயோ மறுபடியும் வேதாளம் முருங்கை மரம் ஏறிடுச்சே… இவனை… ”என மனதால் குருவை அர்ச்சித்தபடியே அவனும் சென்றான்.

“சுகீ பைக்ல ஏறு… ” என்றவன் தானும் ஏறி வண்டியை ஸ்டார்ட் செய்தான். சுகீர்த்தனும் ஒன்றும் பேசாமல் பைக்கில் ஏறி அமர்ந்தான்.

அவன் எதிர்பாராத நேரம் சட்டென பைக் சாவியை இழுத்தெடுத்தாள் வெண்பா. தன் கைகளை பின்னால் கட்டிய வண்ணம் புன்னகைக்க அவளை முறைத்தவன்,

“விளையாடாம கீயை கொடு… ” எனச் சீற சுகீர்த்தனோ தலையில் கைவைத்த வண்ணம் நடப்பதை அமைதியாக வேடிக்கை பார்க்கலானான்.

அவன் கேட்டதும் கொடுத்தாள் அது வெண்பாவே இல்லையே… “முடியாது” என தலையை ஆட்டி வைக்க, அவனது கோபம் எல்லையை கடந்தது.

“டோன்ட் ப்ளே வித் மீ… கீயை கொடு… ” எனக் கத்த சுற்றி

இருந்தவர்கள் ஒரு நிமிடம் நின்று அவர்களையே திரும்பிப் பாரப்பதை உணர்ந்தவன், சற்று குரலை தாழ்த்தி,

" உன் கிறுக்குத் தனத்துக்கு அளவேயில்லையா? காலேஜ்ல தான் என் மானத்தை வாங்குறன்னு பார்த்தா இப்போ வெளியிலேயும் ஆரம்பிச்சிட்டியா? நான் இங்கே இருக்கேன்னு உனக்கு யாரு சொன்னது?" என அடிக்குரலில் சீற, அவளது அமைதியே இது சுகீயின் வேலை என காட்டிக் கொடுத்தது.

திரு திருவென விழித்துக் கொண்டிருந்த தன் நண்பனை திரும்பி பார்த்தவன் அவனை ஏகத்துக்கும் முறைத்து வைத்தான். "எப்போ பாரு இந்த பொண்ணு என்னையே கோர்த்து விட்றாளே… " என்று எண்ணியவன் தன் நண்பனின் தாறுமாறான திட்டுக்களை வாங்கிக் கொண்டு அமைதியாய் இருந்தான்.

"ஏன் குரு சுக்குண்ணாவை திட்டுற? நான் தான் அண்ணாவை தொல்லை செஞ்சு கேட்டேன். நீ உன் நம்பர் கொடுத்திருந்தா நான் ஏன் அவரை தொந்தரவு பண்ண போறேன்?தான் உன் நம்பர் தர மாட்டேங்குற… ஹூம்" என ஓர் நெடிய பெருமூச்செறிய அவளது செய்கை அவனது பொறுமையை ரொம்பவே சோதித்தது.

“நீ உன் லிமிட்டை க்ராஸ் பண்ணிக்கிட்டு இருக்க… மரியாதையா கீயை கொடுத்துடு இல்லைனா நடக்குறதே வேற… ” என மீண்டும் கடுப்புடன் மொழிய அவனை நோக்கி அழகான புன்னகையை சிந்தியவள் அவனருகில் வந்து,

“அப்படீன்னா… நீ… ”

“நான்… ?”

“நீ என்னை”

“நான் உன்னை?”

“நீ என்னை ஒரே ஒரு தடவை என் பேரை சொல்லி கூப்பிடு பார்க்கலாம்… ” என்று அவள் சொன்ன தோரணையில் சுகீ சத்தமாகவே சிரித்து விட்டான். திரும்பி அவனை முறைக்க கடினப்பட்டு சிரிப்பை கட்டுப்படுத்த முயன்றான்.

“முடியாது… ” என்று அவன் கோபமாய் மறுக்க,

“அப்போ கீயை கொடுக்க மாட்டேனே… ”என கூலாக சொன்னவளை நோக்கி,

“வெண்பா… போதுமா இப்போ கீயை கொடு… ” என்றவன் அவள் கையில் இருந்த சாவியை பறித்து எடுத்து வண்டியை கிளப்பினான். கல்லூரி சென்று ஒன்பது மாதங்களாகியும் இது வரை ஒரு நாள் கூட குரு அவளது பெயரை கூறியதே இல்லை. தன் மனம் கவர்ந்தவன் முதல் முறையாக தன் பெயரை உச்சரித்த நொடி முதல் சிறகின்றி ஆகாயத்தில் பறப்பதை போல் உணர்ந்தாள் வெண்பா.

# அத்தியாயம் 4

நீர் சலசலத்து ஓடும் நதிக்கரையில்... பொன்னிறமான பூக்கள் பூத்துக் குலுங்கும் மரத்தடியில்... பெண்ணோவியமாய் கையில் ஒரு மலர்க்கொத்துடன் நின்றிருந்தாள் வெண்பா... மாமருதம் அவளது தாழம்பூ மேனிதொட்டு தழுவியது.

அவளது நீண்ட சுருள் அளக்கக் கூந்தலை அப்படியே காற்றில் அசைந்தாடியபடியே இருக்க இளம்பச்சை நிற சில்க் புடவையில் தந்தச் சிற்பமாய் நின்றிருந்தவளின் பின்னால் வந்து நின்ற குரு “வெண்பா” என்று கிசுகிசுத்த குரலில் அழைத்தான்.

மறுகணம் திரும்பி மலர்கொடியாய் இவனது மார்பில் சாய்ந்து விட்டாள். இதற்காகவே தவம் கிடந்தவனை போல வேகமாய் அவளை இறுகத் தழுவியவன், சிறிது நேரத்தில் தன்னிலிருந்தும் விளக்கி அவள் விழிகளை நேருக்கு நேராக நோக்கி,

“ஐ லவ் யூ வெண்பா” என முதல் தடவையாக தன காதலை வெளிப்படுத்துகிறான் குருப்ரகாஷ்.

அவன் பார்வை வீச்சை இதற்கு மேலும் தாங்க மாட்டாமல் நாணித் தலை குனிய அவளது கன்னங்கள் அந்தி வண்ணமாய்

வெட்கத்தால் சிவந்து போகின்றன. ஆசையுடன் தனது தளிர் கரங்களை அவனது கழுத்தில் மாலையாக்கி மார்பில் முகம் புதைத்தாள் அவனவள்.

அந்நேரம் சுகீர்த்தனது ஃபோன் அலாரம் அடிக்க சட்டென்று கனவு கலைந்து விழித்தெழுந்தான் குரு. அதிகாலை ஐந்து மணி.

நடந்ததெல்லாம் கனவா? நிஜமில்லையா? மனதில் ஏக்கம் பிறந்தது. “என்ன இது வைராக்கியமாய் மனதில் எடுத்துக் கொண்டு தானே தூங்கினேன். பின்பு எப்படி இப்படி ஒரு கனவு வந்தது? என்னதான் உறுதி பூண்டாலும் உள்ளத்தின் அடித்தளத்தில் இருப்பதால் தான் கனவாய் பரிணமித்து விட்டதோ? அதிகாலையில் கண்ட கனவு பலிக்கும் என்பார்களே… இந்தக் கனவு பலித்தால்… ? உள்மனம் தவித்ததும் குருவுக்கோ திக்கென்றிருந்தது.

இது வெறும் கனவு தான். இதை நினைத்து மனதை குழப்பிக் கொள்ளக் கூடாது… என்ன அவள் தினமும் செய்யும் காதல் தொல்லைகளை இந்த மூன்று மாதத்திற்கு பொறுத்துக் கொள்ள வேண்டும். இன்னும் மூன்று மாதங்களில் படிப்பு முடிந்து விடும் அதன் பிறகு நான் என் வேலையை பார்த்துக் கொண்டு போய் விடுவேன். அதன் பிறகு அவள் எங்கே என்னை காண்பது? சில

நாட்களில் என்னை மறந்து விடுவாள். இது அவளுக்கு ஏற்பட்டிருக்கும் வெறும் இனக்கவர்ச்சி தான்… எனக் கூறி தனக்குத் தானே சமாதானம் கூறிக் கொண்டவன் அங்கே புரண்டு படுத்துக் கொண்டிருந்த சுகீர்த்தனையும் அடித்து எழுப்பி விட்டு அன்றைய நாளை துவங்கினான்.

தன் வண்டியை பார்க் செய்து விட்டு நண்பனோபு பல்கலைக்கழக வளாகத்தினுள் நுழைந்தான் குரு. தினமும் அவன் வருவதற்கு முன்பாகவே வந்து நின்று அவனை கடுப்பேற்றும் வெண்பாவை இன்று காணவில்லை. தாமாகவே அவன் விழிள் சுழன்று அவளை தேட அதை சரியாக கண்டு கொண்ட சுகீ, "யாரை மச்சான் தேடுற?" எனக் கேட்க, நண்பன் தான் தேடுவதை கண்டுகொண்டானே என்பது ஒருபுறமிருக்க என்ன பதில் சொல்வது என புரியாமல் தடுமாறினான். அவனது தடுமாற்றை புரிந்து கொண்டவன் தனக்குள் சிரித்த வண்ணம்,

"என்னடா… இன்னைக்கு அந்த மேகி மண்டைய காணோம்? தினமும் நமக்கு முன்னாடியே வந்து உன்னை ஒரு வழி பண்ணிடுவா… ஒரு நாள் கூட காலேஜ் கட் பண்ண மாட்டாளே… ஹூம் பஸ் மிஸ் பண்ணிட்டாளோ என்னவோ… " என பலத்த யோசனையுடன் தன் நாடியை அழித்த வண்ணம் சுற்றும்

ஆராய்ந்து கொண்டே நடந்தான் சுகீர்த்தன்.

அவனுள்ளும் அதே கேள்விதான் இருந்தாலும் அதை வெளிக் காட்டாமல் தன் நண்பன் தோளில் கையிட்டவாறு நடந்து கொண்டே,

“ஹப்பாடா... இன்னைக்கு ஒரு நாளாவதுஅந்த பிசாசுகிட்ட இருந்து தப்பிச்சேனே இல்லைனா காலையிலேயே வந்து லவ் டோக்ஸ் விட்டு என்னை கடுப்பேத்திக்கிட்டு இருப்பா... ” எனக் கூறிக் கொண்டிருந்தவனது தோளை அழுந்தப்பற்றி, “குருஊஊ... ” என அழைக்க, “ என்னடா... ?” என்றவாறு அவன் பக்கம் திரும்பினான்.

அவன் தோள் மேலிருந்த தன் கையின் அழுத்தத்தை மேலும் அதிகரித்தவாறே அவனை அந்தப் பக்கம் பார்க்குமாறு குருவின் பக்கம் திரும்பாமலே கூற பார்த்தவனுக்கு அவன் அங்கே கண்ட காட்சியில் அதிர்ச்சி ஒருபுறமிருக்க கோபமும் அவனை சூழ்ந்து கொண்டது.

அந்த பெரிய மரத்தின் நிழலில் மரபெஞ்சொன்றில் வெண்பாவும் குருவின் வகுப்பைச் சேர்ந்த சிவாவும் ஏதோ

சிரித்துப் பேசிய வண்ணம் அமர்ந்திருப்பதை பார்த்தவனுக்கு கைமுஷ்டி இறுகி இதயம் தாறுமாறாக துடிக்க, உஷ்னப்பார்வையுடன் நின்றிருந்தான் குரு.

குருவின் முகமாற்றத்தை வைத்தே குருவின் மனநிலையை கணித்தவன், “அந்த மேகி மண்டை சிவா கூட என்னடா செய்யுறா? பாரு அவளும் இருக்குற பல்லு பூரா வெளியில தெரியுற மாதிரி கெக்கபெக்கேனு சிரிச்சிட்டு இருக்கா… அவளை கூப்பிட்டு மண்டைல ரெண்டு கொட்டினா தான் அவளுக்கு புரியும்… ” என்றவன் குருவின் பக்கம் திரும்பிப் பார்க்க அவனோ இருவரையும் வெறித்து பார்த்த வண்ணம் அப்படியே நின்றான்.

இதற்கு மேல் சும்மா இருந்தால் ஆபத்து என்றெண்ணியவன்,

“ஹேய் மேகி… மேகி மண்டை… ” எனக் சத்தமிட, அப்போது தான் குருவும் சுகீர்த்தனும் அங்கு நிற்பதை கண்டு முகம் பூவாய் மலர,

“என்ன சுக்குண்ணா… ?” என கூச்சலிட்டுக் கேட்ட வண்ணமே சிவாவின் பக்கம் திரும்பி, “நாம அப்புறம் மீட் பண்ணலாம்.” என்றவள் அவனது பதிலையும் எதிர்பாராது ஓட சிவாவுக்கோ

குருவை கண்டதும் தன்னை மதிக்காமல் ஓடுபவளை பார்க்க உள்ளே பற்றிக் கொண்டு வந்தது.

வேகவேகமாக ஓடி வந்தவள் சுகீர்த்தனை நோக்கி, “என்ன அண்ணா என்னை தேடி இங்கேயே வந்துட்டீங்களா?”என்று கூறிக் கொண்டே ஓரக் கண்ணால் குருவை பார்க்க அவனோ இறுகிய முகத்துடன் எங்கேயோ பாரத்துக் கொண்டிருந்தான். அவனது இந்த முகபாவனை அவளுக்கு புதிதாய் தோன்றியது.

“என்னம்மா அவன் கூட எல்லாமு உட்கார்ந்து பேசிக்கிட்டு இருக்க?” என்று கோபமாக வினவ,

“அதுவா அண்ணா… இன்னும் கொஞ்ச நாள்ல உங்க ஃபேர்வெல் வருதில்லையா… அதை பத்தி ஏதோ டிஸ்கஸ் பண்ணும்னு சிவாண்ணா கூப்பிட்டாறு… என்றவள் நிறுத்தி, “நோ நோ… சிவா கூப்பிட்டான்… ” என்று கூறிக் கொண்டே போக ஒரு கணம் குருவின் பார்வை அவள் முகத்தில் கூர்மையாய் படிந்து விலகியது.

இது நாள் வரை தன்னை மட்டுமே ஒருமையில் அழைத்துக்

கொண்டிருந்தவள் இன்று அந்த சிவாவை அவ்வாறு அழைத்ததில் அவனது கோபம் இருமடங்கானது. சிவாவை முதலில் அண்ணா என்று கூறி விட்டு மீண்டும் திருத்தி ஒருமைக்கு தாவிய வெண்பாவின் பொல்லாத கோபம் வரவே, வெகு சிரமத்துடன் அவள் முன் நின்று கொண்டிருந்தான்.

“என்னாது… சிவாவா? குருவைத் தவிர மத்த எல்லாரையும் அண்ணானு தானே சொல்லுவ? அவனும் உனக்கு சீனியர் தானே?..” என இடுப்பில் கை வைத்த வண்ணம் அவளிடம் கேட்க,

“நான் சிவாண்ணா தான் சொன்னேன்… அவன் தான் இனி என்னை அப்படி கூப்பிட கூடாது… குருவை மட்டும் தான் பேர் சொல்லி அழைப்பியா? இப்போ நாம ஃபிரண்ட்ஸ் சோ என்னையும் பேர் சொல்லியே கூப்பிடுனு சொல்லிட்டான். அதான் அப்படி… ஈவ்னிங் காலேஜ் முடிஞ்சதும் வெயிட் பண்ண சொன்னான் இன்னும் அதை பத்தி டிஸ்கஸ் பண்ண இருக்குனு” என அவள் விளக்கமளிக்க குருவுக்கு சுகீர்த்தனுக்கும் புரிந்து விட்டது இது ஏதோ சிவாவின் குள்ள நரித் திட்டம் என்று.

“அதுக்காக யேன்மா அவன் கூட… ” என்று சுகீ பேச்சை தொடரவே,

அதற்கு மேலும் பொறுக்க மாட்டாதவனாய், சுகீர்த்தனை நோக்கி,

“அதான் உங்க தொங்கச்சி சொல்றாங்கள்ல. அவங்களுக்கு இப்போ சிவா அண்ணா இல்லையாமே… அந்தப் ப்பொறுக்கி சிவா தான் இவங்க ஃபிரெண்ட் இவங்க கூட டிஸ்கஸ் பண்ணனும்னு சொல்லிருக்கான்ல… நீ விடு சுகீ அவங்களுக்கு லேட்டாகும் அந்த ஸ்ஸிவாவையே போய் பாரத்துக்கட்டும் நமக்கென்ன… ” என்றவன் அவளை ஓர் பார்வை பார்த்து விட்டு அதற்கு மேலும் நிற்காமல் அவ்விடம் விட்டு வேக எட்டுக்களுடன் நடந்தவன் வழியில் ஓரமாக கிடந்த குப்பைத் தொட்டியை பலங்கொண்ட வரை உதைந்து விட்டு போனான்.

குருவின் செய்கையில் சுகீர்த்தன் மௌனமாக சிரிக்க, ஏதேதோ பேசி விட்டு வேகமாக செல்லும் அவனையே வித்தியாசமாக நோக்கிக் கொண்டிருந்தாள் வெண்பா.

“அண்ணா குருவுக்கு என்னாச்சு? ஏன் இப்படி சொல்லிட்டு

போறாரு? எனக்கு எதுவுமே புரியைலையேண்ணா… ”என தன் தலையை சொறிந்த வண்ணம் சுகீயை பார்க்க,

“ஆமா இதெல்லாம் உனக்கு எங்கே புரிய போகுது… ?” என்று மனதால் எண்ணிக்கொண்டே அவள் பக்கம் திரும்பி,

“உனக்கு தான் தெரியும்ல… சிவாக்கும் குருவுக்கும் ஆகாதுன்னு… நீ அவன் கூடயே பேசிக்கிட்டு வந்து இருக்க… அதான் கோவம் அவனுக்கு… யேன்மா நீ அந்த பொறுக்கி கூட பேசுற?” எனப் நிதானமாய் கேட்டான்.

“அதான் சொன்னேனே அண்ணா… அப்போ அவன் கூட பேசினதால தான் குரு என் மேல கோவமா போறானா?” என பரிதாபமாய் வினவ, அவளது முகபாவனையில் அவனுக்கு பக்கென்று சிரிப்பு மூண்டது.

“ஆமா அதே தான்” என்று அவன் கூற, “அப்போ இனி சிவா கூட பேச்சு வச்சிக்க கூடாது… ” என பதிலுக்கு கூறி விட்டு அவ்விடம் விட்டு நகர்ந்தாள்.

மாலையில் கல்லூரி முடிந்ததும் வீடு செல்வதற்காக பஸ் நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்தாள் வெண்பா. அந் நேரம் பைக்கில் அவ்விடம் வந்த சிவா அவள் முன்னே நிறுத்தி வண்டியை இறங்காமல் அவளை பார்த்தவன்,

“ஏன் வெண்பா நீ வெயிட் பண்ணலை? நான் தான் உன்னை வெயிட் பண்ண சொன்னேனே?” என அவளிடம் கேட்க, திடீரென பொய் கூறத் தெரியாமல் மலங்க மலங்க விழித்தாள்.

“அது… அது… நம்ம ப்ரொஃபஸர் மேகலா மேம்… ஒரு புக் கொடுக்குறேன்னு சொன்னாங்க அவங்களை பார்த்துட்டு வர்றதுகுள்ள நேரமாயிடுச்சு… இதுக்கு மேல இங்கிருந்தா வீட்டுக்கு போக லேட்டாகும் அதான்… ” என்று இழுவையாக தட்டுத் தடுமாறி ஒரு பொய்யை வரவழைத்துக் கூறி முடித்தாள்.

“ஹூம் ஓகே வண்டியில ஏறு நான் உன்னை ட்ராப் பண்றேன்… ” என்று சாதாரணமாக அவளை அழைக்க, “இவனுக்கென்ன லூசா… ” என்பதை போல் பார்த்து வைக்க, அவள் முகத்தை கூர்மையாக ஆராய்ந்தவன்,

“அந்த வீணாப்போன குருவும் அவன் கூடவே சுத்திக்கிட்டு இருக்குமே வால் இல்லாத குரங்கு சுகீயும் உனக்கு என் கூட பேச வேணாம்னு ஏதாவது சொன்னாங்களா?” என்று அவளிடம் கோபமாக வினவான்.

“என் குரு உனக்கு வீணாப்போனவனா?? நீ தான்டா வீணாப்போன முண்டம்… ” என்று மனதால் சிவாவை அர்ச்சித்துக் கொண்டிருக்க,

“யாருக்கு யாரும் எதுவுமே சொல்லித் தரத்தேவையில்லை. சுயமா யோசிக்க அவங்களுக்குன்னு மூளை இருக்கு… அது மூளைனு ஒன்னு இருக்குறவங்களுக்கு மட்டும் தான் பொருந்தும்” என்று குத்தலாய் கூறிக்கொண்டே தன் பைக்கை அவனது முன்னால் நிறுத்தி, அவளை பார்க்காமலே,

“வெண்பா வண்டியில ஏறு… ” என்று கூற தான் கேட்பது நிஜம் தானா? என்பது போல விழியகல அவனையே உற்று பார்த்த வண்ணம் நின்று கொண்டிருந்தாள். அவள் வண்டியில் இன்னும் ஏறாமல் இருப்பதை பார்த்தவன்,

“வெண்பா வண்டியில ஏறுன்னு சொன்னேன்… ” என்று சற்று குரலை உயர்த்தி அதட்டும் குரலில் கூறிய அடுத்த நொடியே ஓடிச்சென்று அவன் பின்னால் ஏறி அமர்ந்து கொள்ள வண்டியை கிளப்பினான் குரு. ஜோடியாக செல்லும் அவர்களையே எரிக்கும் பார்வையுடன் வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான் சிவா.

# அத்தியாயம் 5

வளைவுகள் கொண்ட பாதையில் குருவின் பைக் சற்று வேகமாகவே பயணித்தது. இத்தனை நெருக்கமாக தன்னவனுடனான பைக் பயணம் அவளுக்கு ஏதோ கனவுலகத்தில் மிதப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தியது. பளீரிட்ட புன்னகை முகத்துடன் அவன் பின்னே அமர்ந்திருந்தவளுக்கு அந்நேரம் குருவை சீண்டும் எண்ணம் உதிக்க, அவனை சற்று நெருங்கி அமர்ந்து அவன் இடுப்பை கிள்ளினாள்.

அவளது தொடுகை அவனை மின்சாரமாய் தாக்கியது. ஒரு கணம் துள்ளி எழுந்து அமர்ந்தவன், வண்ணடியை ஓரமாக நிறுத்தினான்.

“ஏய் சும்மா வர மாட்டியா? இப்படியே ஏதாவது பண்ணிக்கிட்டு இருந்த ரெண்டு பேரும் பரலோகம் தான் போய்ச் சேரணும்… ஒழுங்கா வருவதா இருந்தா எங்கூட வா இல்லைனா இங்கேயே உன்னை இறக்கி விட்டுடுவேன்… “ என சிடுசிடுக்க,

“ஓகே ஓகே… ஒன்னும் பண்ண மாட்டேன்… இப்போ

போகலாமா?” என்று கூற அவளை ஒரு பார்வை பார்த்து விட்டு வண்டியை கிளப்பினான்.

வெண்பாவின் சித்தி வீட்டுக்கு செல்வதற்கான வழியை கூட இவள் கூற வேண்டிய தேவையே இல்லாமல் அவனது வண்டி சரியான பாதையிலே சென்றது. ஒரு கணம் குருவை ஆச்சரியமாக பார்த்தாலும் இவள் ஏதையாவது கேட்கப் போய் அவன் கோபம் கொண்டு விட கூடாது என அமைதியாகவே வந்தாள்.

அந்தத் தெருமுனையில் வண்டியை நிறுத்தியவன், அவளை அங்கே இறங்குமாறு சைகை காட்ட இங்கே ஏன் ? என புரியாமல் எதுவும் கூறாது இறங்கினாள்.

அவள் இறங்கியதும், “உன் வீடு அங்கே தானே இருக்கு இந்த கொஞ்ச தூரத்தை நடந்தே போ… ” என்று கூறிக் கொண்டே பைக்கை ஸ்டார்ட் செய்ய அவனை கூர்ந்து நோக்கி,

“ஏன் குரு… இவ்வளவு தூரம் வந்துட்டு எங்க வீட்டுக்கு வராம போறீங்களே… ?” என்று அவனிடன் கேட்டாள்.

“ஏன் அங்கேயும் வந்து என்னை தான் லவ் பண்றனு என்

மானத்தை வாங்கவா... பேசாம வீடு போய் சேரு" என எரிச்சல் குரலிலேயே பதிலளித்தான்.

"வாவ்... சூப்பர் ஐடியா குருஊஊஊ... எங்க சித்திக்கு எப்படியும் உன்னை பார்த்ததுமே பிடிக்கும்... அப்புறம் அவங்களே எங்க அம்மா கிட்ட பேசி நம்ம லவ் மேட்டரை ஓகே செஞ்சிடுவாங்களே... வா குரு... " என குதூகலமான குரலுடன் அவன் கையை பிடித்து இழுக்க, அவள் செய்கையில் அதிர்ந்தவன், சுற்றும் முற்றும் பார்த்து விட்டு கைகளை உதறி விட்டான்.

"லூசா வெண்பா நீ? நீ இப்படி செய்யுறதை யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க? மரியாதையா முதல்ல இங்கிருந்து கிளம்பு... " என்று கடிந்தவன் அதற்கு மேலும் தாமதிக்காமல் அங்கிருந்து கிளம்பிச் சென்றான்.

பைக்கை ஓட்டிச் செல்லும் குருவையே நோக்கிக் கொண்டிருந்தவளின் இதழ்கள் மலர்ந்தே இருந்தன.

மறுநாள் காலை எழுந்ததும் கல்லூரி செல்ல தயாரானவள் கவின் வரும் வரை ஃபோனை குடைந்த வண்ணம் ஹாலில்

அமர்ந்திருந்தாள். அவளுக்கு பிடித்த ஏலக்காய் காபியை அவளிடம் கொடுத்து விட்டு பக்கத்திலேயே அமர்ந்து கொண்டார் இளமதி.

“குட்டிம்மா… அடுத்த மாசம் லீவுக்கு உன்னோட இந்திரா அக்கா பசங்க கூட வர்றேன்னு சொல்லி இருக்காங்க… ”

“என்னது இந்திரா சித்தியா… ?” என்று ஒரு நொடி திகைத்து விழித்தாலும் மறு நொடியே, “அடுத்த மாசம் தானே… ” என எண்ணியவள் ஒரு பெரு மூச்சுடன் கவினையும் அழைத்துக் கொண்டு கிளம்பினாள்.

வெண்பாவின் அன்னை இலக்கியாவின் தங்கைகளே இந்திரா, இளமதி. இந்திரா பொலன்னறுவை பிரதேசத்தில் தனது இரு பிள்ளைகள் மற்றும் கணவருடன் வசித்து வருகிறார். இந்திரா என்றாலே எப்போதும் வெண்பாவுக்கு சிறு உதறல் எடுக்கும். இளமதியை போலல்ல இவர் கொஞ்சம் கண்டிப்பானவர். அவர் இருந்தால் இப்போது இருப்பது போல் அவளால் சுதந்திரமாக இருக்க முடியாது. அதற்கு பயந்தே அதிகமாக பொலன்னறுவைக்கு போவதில்லை.

கல்லூரி வளாகத்தில் நுழைந்தவள், “நேற்று இல்லாத மாற்றம் என்னது… ” என்ற பாடலை ஹம் செய்து கொண்டே துள்ளல் நடையுடன் சென்று கொண்டிருக்க, திடீரென கால் இடறி விழ, அவளை விழ விடாமல் கையை பிடித்து இழுத்தான் சிவா.

சிவா தன் கையை பற்றி இழுப்பதை உணர்ந்தவள் தீச் சுட்டதை போல கையை உதற முயல, அவன் பிடியை மேலும் இறுக்கினான். சற்று முன் அவள் விழ நேர்ந்ததை எண்ணிப் பார்த்தவளுக்கு வேண்டுமென்றே அவன் கால்களை தட்டி விழச் செய்தது அப்போது தான் அவளது ஏழாம் அறிவுக்கு எட்டவே, கைகளை உறுவிக் கொள்ள முயன்றவாறே,

“சிவா கையை விடு… ” என அவனுக்கு மட்டுமே கேட்கும் குரலில் அழுத்தமாக கூறினாள்.

மேலும் அழுத்தத்தை அதிகரித்தவன் அவளை நோக்கி, “ஓ… அப்படியா? அந்த குருவோட கையை நீ பிடிக்கும் பேது உனக்கு இனிச்சுதுல… இப்போ நான் பிடிச்சா மட்டும் எதுக்கு சும்மா சீன் போடுற… ?” என பதிலுக்கு அவனும் கடுப்பாய் வினவினான்.

என்ன… நேற்று அவனது கையை பிடித்ததை இவன்

பார்த்தானாமா? அப்படியென்றால் இவன் எங்களை பின் தொடர்ந்திருக்கிறான். அவன் முகத்தை ஆராயந்தவள் , தன் மறு கையின் ஆட்காட்டி விரலை அவள் முகத்துக்கு நேரே நீட்டி,

“அபப்டீன்னா… நீ எங்களை ஃபாலோ பண்ணி வந்திருக்கல்ல… ” என கேள்வியாய் வினவ நக்கலாய் சிரித்தான்.

“ஆமா… நான் அவ்வளவு சொல்லியும் எங்கூட வராம அவன் கூப்பிட்டதும்… இழிச்சிக்கிட்டே போயிட்டல்ல… ” என்று நிறுத்தி, மீண்டும் தொடர்ந்து,

“இப்போ சொல்றேன் இதோட அவன் பின்னாடி சுத்துறதை விட்டுடு… இனி நீ என்னை தான் லவ் பண்ணனும்… ” என்றவன் அவன் பற்றியிருந்த கையின் மேல் வேண்டுமென்றே அழுத்தத்தை கூட்டினான்.

அவன் அழுந்தப் பற்றியிருப்பது வலித்தாலும் கோபத்தில் சிவந்து போனவள் ,

“உன்னை மாதிரி பொம்பளை பொறுக்கியை நான் லவ்

பண்ணனுமா? உங்கப்பா மினிஸடர்னா பெரிய இவனா நீ?” என கோபமாக அதே சமயம் அலட்சியம் நிறைந்த குரலில் கூற அவனது கோபம் பன்மடங்கானது.

அவளது கையை உடைத்து விடுவது போல் பிடிக்க வலியில் கத்தியவாறே உதவிக்கு யாராவது வருவார்களா என சுற்றியும் நோட்டம் விட, சற்று தொலைவில் குருவும் சுகீர்த்தனும் இவர்களை நோக்கி ஓடி வருவது தெரிந்தது.

புயல் வேகத்தில் அவளருகில் வந்தவன் அவளது கையை பற்றியியிருந்த சிவாவின் கையை பிடித்து இழுத்து முறுக்கியவன் அப்படியே அவன் முகத்துக்கு ஓங்கி ஒரு குத்து விட்டான். அவன் அடித்ததால் சிவாவின் முன் கடைவாய் பல் உடைந்து குபுகுபுவென இரத்தம் வழிய முகத்தை கையால் தாங்கிய வண்ணம் இரண்டாக மடிந்து அமர்ந்தான்.

மேலும் அடிக்க முன்னேறியவனை பிடித்து தடுத்தான் சுகீர்த்தன்.அதற்குள் கூட்டம் கூடியிருந்தது.

ஒருவாறு குருவை அமைதிப்படுத்தி விட்டு சுற்றியிருந்த கூட்டத்தையும் அனுப்பி வைத்தான். அவன் பற்றிய இடம் கன்றிச் சிவந்திருக்க அதை அழுந்தத் தேய்த்தவாறு நின்றவளது கண்கள் வலியில் கலங்கியிருந்தன.

என்னாச்சு… சைகாயால் சுகீர்த்தன் அவளிடம் வினவ கீழே விழுந்திருந்த சிவாவை காட்டி சைகையின் மூலம் நடந்ததை விளக்கினாள் வெண்பா.

தன் தலையை அழுந்தக் கோதி தன்னை சிறிது ஆசுவாசப்படுத்திக் கொண்டவன் கீழே கிடந்த சிவாவை நோக்கி, “ஸ்சிவ்வா… இந்த மாதிரி நடக்குறது இது தான் கடைசி தடவையா இருக்கனும் இதுக்கப்புறம் வெண்பாவை தொந்தரவு செய்தனு வச்சிக்க… அடுத்த அடி இதை விட பலமா இருக்கும்… மைன்ட் இட்… ” என கர்ஜித்தவன் அந்நேரம் தகிக்கும் தனலாய் எரிந்து கொண்டிருந்தான்.

அதே கோபத்துடன் அவளை திரும்பிப் பார்க்க அந்த அனல் பார்வையை சந்திக்க தைரியமற்று தலை கவிழ்ந்து நின்றவளிடம்,

“இப்போ சந்தோஷமா? இதே மாதிரி பைத்தியக்காரத்தனமான வேலை செய்து சும்மா வம்பை விலை கொடுத்து வாங்காதே… உனக்கும் இது தான் லாஸ்ட் வார்ணிங்… லவ்வு கிவ்வுன்னு வந்த நடக்குறதே வேற… ” என கடுமையான குரலில் எச்சரித்துச் சென்றான்.

அந்த சம்பவத்தின் பின் மூன்று தினங்களாக குருவையும் சுகீர்த்தனையும் காணவேயில்லை. அவர்களது சக தோழர்களிடம் வினவிய போது கூட தெரியாது என்றே பதில் கிடைத்தது. அந்த மூன்று நாட்களும் அவனை பாராமல் ஏதோ ஒன்றை இழந்ததை போல் உணர்ந்தாள் வெண்பா. சுகீர்த்தனது ஃபோனும் அணைத்து வைக்கப்பட்டிருக்க ஒன்றும் புரியாமல் குழம்பிப் போனாள்.

அன்று அவளை எச்சரித்துச் சென்ற பின் இனி தன்னைப் பார்க்கவே கூடாது என இங்கிருந்து போய்விட்டானா? என பலவாறு யோசனையில் ஆழந்திருந்த வேளை அவளது செல்போன் அலறியது.

திரையில் சுக்கு அண்ணா என்ற பெயரை பார்த்ததும் மறுநொடி, “ஹலோ அண்ணா… குருவுக்கு என்னாச்சு? ஏன் காலேஜ் வரலை? நான் உங்களுக்கு எத்தனை தடவை கால் பண்றது… உங்க ஃபோன் வர்க் ஆகலை… ஏன் அண்ணா?” என அவன் பேசத் துவங்கும் முன்னரே கேள்விகளை அடுக்கிக் கொண்டே போனாள்.

“வெண்பா லிஸன்… கொஞ்சம் சொல்றதை கேளு… நீ அவனை காணாமல் டென்ஷனா இருப்பனு தான் உனக்கு கால்

பண்ணனேன் அதுக்காக இங்க வந்துடாதேமா… ” என்றவன் தொடர்ந்து குருவுக்கு அன்று என்ன நேர்ந்தது என்பதை கூற அவள் அதிர்ந்து போனாள்.

"அ… அண்ணா… எ… என்… ன சொ… ன்னீ… ங்க… "என தன் பதற்றத்தை மறைக்க முயன்றவாறு வினவியளுக்கு இது பொய்யாக இருக்கக் கூடாதா? என்றிருந்தது.

மீண்டும் அதே விடயத்தையே அவன் சற்று அழுத்தமான குரலில் கூறக்கேட்டு திக்பிரமை பிடித்தவள் போல பேச்சின்றி நின்றாள் வெண்பா.

“வெண்பா… வெண்பா… ” என்று அவன் இருமுறை அழைக்கவும் தன்னுணர்வு திருமுபினாற் போல் அவள் புலன்கள் செயல்பெற்றன.

“நான் இப்பவே வருகிறேன் அண்ணா… ” என்று கலக்கம் நிறைந்த குரலில் கூற, “வேண்டாம்மா… இப்போ வராதே… ” எனத் தடுத்தான் சுகீர்த்தன்.

"ஏன்… அண்ணா?"என மீண்டும் அதே குரலில் வினவ, சுகீர்த்தனுக்கு அவளது நிலை புரிந்தாலும் கூட தற்போது அவள்

இங்கே வந்தால் தேவையில்லாத பிரச்சினைகளை சந்திக்க நேரிடும். அத்தோடு நில்லாது குருவிடமும் நன்றாக வாங்கிக் கட்டிக் கொள்ள வேண்டி வரும் என வெண்பாவை வர வேண்டாம் எனத் தடுத்து விட்டான்.

இக்கணமே குருவை காண வேண்டுமென அவள் மனம் துடிக்க போனை அணைத்து தன் பையில் போட்டுக் கொண்டவள் இயந்திரதியில் செயல்பட சித்தியிடம் கூட கூறத் தோன்றாது இதயம் தாறுமாறாக துடிக்க கலங்கிய விழிகளுடன் வீட்டிலிருந்து வெளியேறினாள். அவள் நேரம் அத் தருணம் வீட்டில் யாரும் இல்லாமல் போனது.

மூன்று நாட்கள் கல்லூரிப் பக்கமே வரவில்லையே இதனால் தானா? பின்னர் ஏன் யாரும் தனக்குத் தெரியப்படுத்தவே இல்லை? நடந்தவற்றை சுக்கு அண்ணா கூட மறைத்து விட்டாரே? என சுகீர்த்தன் மேல் இன்ஸ்டன்ட்டாய் ஒரு கோபம் முளைத்தாலும்... ஏற்பட்ட களேபரத்தில் என்னிடம் கூறவா தோன்றியிருக்கும்? பாவம் அவர் என சுகீர்த்தன் நிலையை எண்ணி பரிதாபம் கொண்டாள்.

கடந்த இரு தினங்களாக தன்னைப் பார்த்து வித்தியாசமாக புன்னகைத்துச் சென்ற சிவாவின் முகம் நினைவில் வந்தது.

இதற்காகத் தானா? இப்படி செய்து விட்டானே பாவி… அன்று சுகீர்த்தன் சொன்ன போதே அவள் கேட்டு நடந்திருக்க வேண்டும்… விளையாட்டுத்தனமாக தான் செய்த செயல் இன்று விபரீதமாகி விட்டதே… அவளால் தானே தன் குருவுக்கு இந்த நிலைமை என அவளையே நொந்து கொண்டாள்.

ஓட்டமும் நடையுமாக தெரு முனைக்கு வந்தவள் ஓர் ஆட்டோவை பிடித்து வைத்திய சாலைக்கு விரைந்தாள்.

# அத்தியாயம் 6

பயமும் பதற்றமுமாக மருத்துவமனை வளாகத்தை அடைந்தவள் வரவேற்பு பெண்ணிடம், குரு இருக்கும் அறை இலக்கத்தை கேட்டுக் கொண்டு அந்த தளத்தை நோக்கி விரைந்தாள்.

குருவின் அறையின் முன்னே கறுப்பு உடையணிந்த இருவர் விறைப்பாய் நின்று கொண்டிருக்க அவர்கள் நின்ற தோரணை அவளுக்கு சிரிப்பை வரவழைத்தது. இவர்கள் யாராக இருக்கும்? என எண்ணியவாறு அவர்களை கடந்து செல்ல எத்தனிக்க குறுக்கே கை நீட்டி தடுத்து,

“சமாவென்ன மிஸ்... ஒயாட எதுலட்ட யன்ன பே... ” (சாரி... உங்களுக்கு உள்ளே போக முடியாது) என்றான் விறைப்பாக.

“இந்த கறுப்பு பூனை என்னை ஏன் குருவை பார்க்க வேணாம்னு சொல்றான்?” எனப் புரியாமல் அவனை நோக்கி,

“எக்ஸ்கியூஸ்மீ சார்... குரு மகே யாலுவெக்... எயாவ பலன்ன ஆவே மங்... கருணாகரலா மட யன்ன இட தெனவத?”

(எக்ஸ்கியூஸ்மீ சார் குரு என் நண்பன் அவனை பார்க்கத் தான் இங்கே வந்திருக்கிறேன். தயவு செய்து தள்ளி நிற்க முடியுமா?) என அதிகாரத் தொணியில் வினவ அவன் முடியவே முடியாது என மறுத்து விட இருவருக்கிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது.

அறையினுள்ளே குருவின் அருகே நாற்காலியில் அமர்ந்து செல்போனைக் குடைந்து கொண்டிருந்தவனுக்கு வெண்பாவின் குரல் கேட்க, “மேகி மண்டையின் குரல் மாதிரியே இருக்கே… ஐயையோ இங்கே வந்துட்டாளா?” என்றெண்ணியவன் சட்டென எழுந்து கதைவை திறந்து கொண்டு வெளியே சென்றான்.

அங்கே நின்ற இருவரையும் சமாதானம் செய்து விட்டு கூடப் படிக்கும் நண்பி என அவளை அறிமுகம் செய்து விட்டு உள்ளே அழைத்துப் போனான்.

அங்கிருந்த படுக்கையில் படுத்திருந்தவனின் ஒரு கையில் ட்ரிப்ஸ் ஏற்றப்பட்டிருக்க, இடது கையின் தோள் முதல் முழங்கை வரை போடப்பட்டிருந்த கட்டே அவளை கொஞ்சம் பயமுறுத்தியது. எல்லாம் அவளால் தான் நேர்ந்தது என்ற குற்றவுணர்வு அவளை வெகுவாகத் தாக்க உறங்கிக் கொண்டிருந்த குருவையே பார்த்த வண்ணம் நின்றிருந்தாள்.

அன்று கல்லூரியில் வெண்பாவிடம் வம்பு செய்த சிவாவை அடித்து எச்சரித்து விட்டு குரு சென்று விட அவனை இதற்காக பழி தீர்த்தே ஆக வேண்டுமென்ற வெறி அவனுள் தீயாய் எரிந்து கொண்டிருந்தது. அன்று இரவே அதற்கான சந்தர்ப்பம் கிட்டவே தன் தந்தையின் செல்வாக்கை பயன்படுத்தி அடியாட்களை ஏற்பாடு செய்தான்.

அந்நேரம் சுகீர்த்தனுக்கும் தனக்குமான இரவுணவை வாங்குவதற்காக வீட்டிலிருந்து நடந்தே வந்தான். அதுவே சிவாவிற்கு வசதியாக இருக்க ஆள் நடமாட்டமில்லாத அந்த தெருவில் அவனை சரமாரியாக தாக்கினர். தன்னால் முயன்றளவு அவர்களுடன் சண்டையிட்ட குருவிற்கு அந்த ஐந்து பேரை சமாளிக்க முடியாமல் போனது.

சாப்பாடு வாங்கச் சென்ற தன் நண்பன் நீண்ட நேரம் வராமல் போகவே அவனுக்கு அழைப்பெடுக்க பதிலேதுமில்லை. ஏற்கனவே குருவின் உயிருக்கு ஆபத்து இருப்பதை அறிந்திருந்தவன் உடனே பைக்கில் விரைந்தான். அதன் பிறகு அங்கே கண்ட காட்சியில் ஒரு கணம் பதறியவன் மறு கணமே அவனை மருத்துவமனையில் சேர்த்தான்.

குரு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு இன்றோடு

நான்கு நாட்கள் ஆகியிருந்தன.

“ஏய் மேகி… உனக்கு வர வேணாம்னு தானே சொன்னேன் பின்னே ஏன் வந்த? சீக்கிரமா போ அவன் கண் முழிச்சி பார்த்தா என் உயிரை வாங்குவான்… ” என கோபமாக அதே சமயம் குருவுக்கும் கேட்காத குரலில் சொன்னான்.

“நானே பதறிப்போய் வந்திருக்கேன்… குருவுக்கு என்னாச்சோ ஏதாச்சோன்னு… ஏன் சுக்குண்ணா நீங்க வேற… ” என்றாள் கவலையாக.

அச்சமயம் குருவுக்கும் விழிப்புத் தட்டியது. மெல்ல கண்களை திறந்து பார்த்தவன் கண் முன்னே நின்றிருந்தவளை கண்டதும் பதறிப் போய் எழுந்தமர்ந்தான். காண்பது கனவா? நனவா? என்பது போல் கண்களை மீண்டும் மூடித் திறக்க அவள் அவனருகே வந்து நின்று கொண்டு,

“குரு உனக்கு இப்போ எப்படி இருக்கு? உனக்கு ஒன்னும் பிரச்சினையில்லையே… ?” என குரலில் சோகம் இழையோட வினவினாள்.

“ம்ம்… இப்போ கொஞ்சம் ஓகே… நீ ஏன் இங்கே வந்த?”

“என்ன குரு இப்படி கேட்குற? காதலனுக்கு அடிப்பட்டு ஹாஸ்பிட்டல்ல இருக்கான்னு சொன்னதுக்கப்புறம் எந்த காதலியால பார்க்காம இருக்க முடியும் சொல்லு… ? நாலு நாளா காலேஜ்ல உன்னை காணாம எவ்வளவு டென்ஷன் ஆகிட்டேன் தெரியுமா?” என்று முகத்தை பரிதாபமாய் வைத்துக் கொண்டு அவனிடம் கூற சுகீர்த்தனை ஏகத்துக்கும் முறைத்து வைத்தான் குரு…

“ம்ஹூம்… இதுல ஒன்னும் குறைச்சல் இல்லை. செய்றதெல்லாம் அவ திட்டு எல்லாம் எனக்கா? கடவுளே எனக்கு ஏன் இந்த சோதனை… ?” என தன் மனதால் புலம்பியவன் மறந்தும் கூட குருவின் பக்கம் திரும்பாமல் மும்முரமாக ஃபோனில் எதையோ குடைந்து கொண்டிருந்தான்.

அங்கிருந்த குட்டி மேசையின் மேல் ஆரஞ்சை கண்டவள் குருவிடம் திரும்பி,

“குரு… உனக்கு ஆரஞ்சு ஜூஸ் போட்டு எடுத்து வர்றேன்… ” என அவன் பதிலையும் எதிர்பாராமல் அதை செய்யத்

துவங்கினாள்.

அவளிடம் தன்னால் இந்த நிலைமையில் வாயாட முடியாது என நன்கறிந்த குரு முகத்தை மட்டும் விறைப்பாக வண்ணம் மௌனம் காத்தான். அவன் கோபமெல்லாம் சுகீர்த்தனின் பக்கமே திரும்பியது.

“என்னடா என்னை பார்த்து முறைக்குற? சத்தியமா இவளை இங்கே வராதேனு தான் சொன்னேன். சொன்னதை கேட்காம இந்த மேகி மண்டை வந்துருச்சிடா… ” என்று தன் நிலைமையை எடுத்துக் கூற முயல அவனை முறைத்தான் குரு.

“அப்போ நான் ஹாஸ்பிட்டல்ல இருக்கேன்னு நீதான் இவளுக்கு சொல்லியிருக்க? ம்ம்… ?” என அவன் முகத்தை கூர்ந்து கவனிக்க சுகீர்த்தனின் திருட்டு முழியே அவனை காட்டிக் கொடுத்தது.

அங்கே ஜாலியாக பாட்டொன்றை பாடிய வண்ணம் குருவிற்காக ஆர்ஞ்சு ஜூஸ் தயாரித்துக் கொண்டிருந்தாள். அவள் பக்கம் பார்வையை திருப்ப அவள் பாடிக் கொண்டிருப்பது இவனது கோபத்தை கிளற சுகீர்த்தனை ஒரு பார்வை பார்த்து

விட்டு அமைதியாக இருந்தான்.

"இங்கே என்னை மாட்டி விட்டதும் இல்லாம எவ்வளவு ஜாலியா பாடிக்கிட்டு இருக்கா… என்னமோ உயிரே போன மாதிரி பதறியடிச்சுக்கிட்டு இவனை பார்க்க ஓடி வந்தா… இப்போ என்னடான்னா ஜாலியா பாட்டு… ஹூம் இந்த மேகி மண்டையை புரிஞ்சுக்கவே முடியலையே… " என்று சுகீ தனக்குள்ளேயே எண்ணிக் கொண்டிருந்த நேரம் அவள் தயாரித்த ஜூஸை மூன்று கப்களில் ஊற்றி எடுத்து வந்து குருவிடம் நீட்டினாள் வெண்பா.

எதுவும் பேசாமல் ஒரு கப்பை எடுத்துக் கொண்டவன், அவளை நோக்கி,

"எனக்கு ஒரு கப் போதும்… எதுக்கு மூனு கொண்டு வந்திருக்க… ?" என எரிச்சலுடன் கேட்க,

"ஐயோ குரு… ஒன்னு தான் உனக்கு… நீ கேட்டாலும் மத்த இரண்டையும் கொடுக்க மாட்டேன் ஏன்னா… ஒன்னு சுக்குண்ணாவுக்கு மத்தது எனக்கு… " என்று தன் முத்து பல்வரிசை தெரியும் வண்ணம் சிரித்துக் கொண்டே ஒன்றை அவனுக்கு

கொடுத்து விட்டு தானும் ஒன்றை எடுத்துக் கொண்டு அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

“என்னம்மா நீ… அவன் தான் பேஷன்ட்… அவனுக்குத் தான் அடிப்பட்டிருக்கு… அப்போ அவனுக்குத் தானே கொடுக்கனும்… ” என்று அவளிடம் கூற ஒரே அந்த ஆரஞ்சு ஜூஸ் முழுவதும் ஒரே சிப்பில் பருகி முடித்தவள்… பெருமூச்சொன்றை வெளியிட்ட வண்ணம்,

“ஹப்பாடா… இப்போ தான் இதமா இருக்கு… ” என்றவள் மேலும் , "போங்கண்ணா நீங்க வேற… இவனா பேஷன்ட்? நீங்க என்னமோ பெருசா கைல பலமா அடிபட்டிருக்குனு சொன்னீங்க… நானும் என்னமோ ஏதோன்னு பதறியடித்து ஓடி வந்து பார்த்தா இந்த சின்ன கட்டுக்கு இவ்வளவு பெரிய சீனா… ?

இந்த தளம் முழுக்க காவலுக்கு கார்ட்ஸ் இருக்காங்க . இவன் பக்கத்து ரூம்ல யாரும் மினிஸ்டர்ஸ் அட்மிட் செஞ்சி இருக்காங்களா என்ன? பட் குரு டோன்ட் வொரி என்னையும் அந்த பிளாக் கேட்ஸையும் மீறி உன்னை யாரும் தொட முடியாது " என்றவள் சத்தமிட்டு சிரித்தாள் அவள்.

அவளது செய்கை அவனை கடுப்பேற்ற சுகீர்த்தனை மீண்டும்

முறைக்க, அவனுக்கோ தன் நிலையை எண்ணி சிரிப்பதா? இல்லை அழுவதா? என்றே தெரியவில்லை. வெளியே கார்ட்ஸ் இருக்கிறார்களா? என்று அவள் கூறியதை கேட்டு ஒரு கணம் குழம்பியவன் சுகீர்த்தனை நோக்கி,

“சுகீ வெளியில கார்ட்ஸ் இருக்காங்களா? யாருக்கு?” என்று கேட்டான் அவனிடம்.

சற்று தடுமாறியவன், “அது… அது வந்து குரு உங்கப்பா தான்… ” என்று அவன் இழுக்க அவன் கண்கள் அனலை சிந்தின.

"உங்கப்பாவுக்கு எப்படியோ மேட்டர் தெரிஞ்சு போச்சுடா… திடுதிப்புனு இவனுங்க வந்து நின்னுட்டாங்க… உங்கப்பா வேற இந்த கொஞ்ச நாளா ஸ்ரீலங்கால இல்லை… நேத்து தான் ஸ்ரீ லங்கா வந்தாராம். அவர் வரும் வரை உன்னோட பாதுகாப்புக்காக அனுப்பியிருக்காரு… என்று ஒருவாறு தட்டுத்தடுமாறி கூறி முடித்தான்.

குருவின் விழிகள் சினம் கொண்டு சிவந்திருக்க இவர்களது உரையாடல் புரியாமல் குழப்பத்துடன் இருவரையும் மாறி மாறி பார்த்த வண்ணம் நின்றிருந்தாள் அவள்.

"என்னது குரு அப்பாவா?? அவர் என்ன பெரி டானா அண்ணா… ?" என்று வியந்து விழி விரியக் கேட்ட விதம் சுகீர்த்தனுக்கு சிரிப்பை ஏற்படுத்த, குருவின் முறைப்பை கண்டு தன்னை அடக்கிக் கொண்டவன்,

"இல்லைமா… அவர் பெரிய டான்லாம் இல்லை… ஆனால்… " என்று ஏதோ சொல்ல வந்தவனை பார்வையாலேயே தடுத்தான் குரு. இந்தப் பேச்சில் அந்த பாதுகாவலர்களைப்பற்றி கேட்க மறந்து போனாள்.

அவன் சொல்ல வந்ததை புரிந்து கொண்டவள் போல, "ஓஓஓ… அப்போ நானும் ரவுடி தான் விஜய் சேதுபதி போல… பெரிய டாஆஆஆஆஆன் இல்லை டான்… அப்படியாண்ணா?" என அவனை பார்த்து கேட்க, இம்முறை சுகீர்த்தனோ அடக்கமாட்டாமல் சிரித்து விட்டான்.

"சுகீஈஈஈஈ… " என அவனை ஓர் உஷ்னப் பார்வை பார்க்க அந்த பார்வையின் அர்த்தம் புரிந்தவனாய் அமைதியானான்.

மீண்டும் மீண்டும் அவள் அதையே கேட்க அதில் கடுப்பான

குரு,

“ஒரு இளவும் இல்லை அந்தாளு… நீ இதை இப்போ நிறுத்துறியா?” என்றவன் அவளை திரும்பியும் பார்க்கவில்லை.

மறுபடியும் அதைப்பற்றி தன்னிடம் கேட்டு விடுவாளோ? என்ற பயத்தில் சுகீர்த்தனும் அவள் புறம் திரும்பாது யாருடனோ ஃபோனில் பேசுவது பாசாங்கு செய்து கொண்டிருந்தான்.

“என்ன இவன் அப்பாவை பத்தி பேசுனா அந்தாளு இந்தாளுன்னு கொஞ்சம் கூட மரியாதையே இல்லாம பேசுறான். இதுல இவனுக்கு கோபம் வேற… ” என குழம்பிப்போய் தன்னுள்ளேயே புலம்பிக் கொண்டிருக்க அந்த அறையின் தட்டப்பட்டு திறக்கப்பட்டது.

மூவரும் யாரென நிமிர்ந்து பார்க்க வெளியே குருவின் பாதுகாப்புக்கென நியமிக்கப்பட்டிருந்த ஒருவன் உள்ளே நுழைந்து, “சார்… மந்த்ரீதுமா தவ வினாடி தஹயகின் மெதனட்ட என பவ ஆரஞ்சியக் லெபுனா சார்… (சார்… அமைச்சர் அவர்கள் இன்னும் பத்து நிமிடங்களில் இங்கே வருவதாக தகவல் வந்திருக்கு சார்.) என்றவன் குருவின் தலையசைப்பை பதிலாக பெற்றுக் கொண்டு

வெளியேறினான்.

“அமைச்சரா அவர் ஏன் இங்கே வரணும்? ஆமா யாருண்ணா அந்த கார்ட்ஸ்? ஏன் குருவுக்கு பாதுகாப்பா இருக்கனும்... ? என தலையை சொறிந்தபடி சுகீர்த்தனிடம் வினவ அவளுக்கு என்ன பதில் சொல்வதெனத் தெரியாமல் குருவைப் பார்க்க அவனோ கழுத்து நரம்புகள் புடைக்க, கோபத்தில் கண்கள் சிவக்க சுவரை வெறித்த வண்ணம் அமர்ந்திருந்தான்.

# அத்தியாயம் 7

“அந்தாளு இப்போ ஏன் இங்க வரணும்? நான் இருக்கேனா இல்லை செத்துட்டேனானு பார்க்க வர்றாராமா? ச்சே… ” என்று தலையணையொன்றை விசிறியடிக்க, அதை எடுத்து மீண்டும் கட்டிலில் வைத்த சுகீ ,

“குரு… ஏன்டா இப்படி பேசுற? அவர் உன்னை பார்க்க தானே வர்றாரு… ” என்றவன் அவனருகில் வந்து தோளைத் தொட்டு, “ப்ளீஸ் குரு… அவர் முன்னாடி இப்படி கோவப்படாதே… அவர் என்ன சொன்னாலும் பொறுமையா இருடா… ” என்று அவனிடம் கெஞ்சுவது போல் கூறினான் அவன்.

அந்நேரம் அவ்வறையின் கதவு திறக்கப்பட வெள்ளை நிற உடையில் பக்கா அரசியல்வாதி தோற்றத்துடன் உள்நுழைந்தார் குருப்பிரகாஷின் தந்தை வேதநாயகம். அவர் வந்ததும் அவரை வரவேற்று நாற்காலியில் அமர வைத்தான் சுகீர்த்தன். அவரை வரவேற்க வேண்டியவனோ வேண்டுமென்ற ஃபோனில் புதைந்திருந்தான் இல்லை அப்படி பாவ்லா செய்து

கொண்டிருந்தான்.

இத்தனைக்கும் அவனை பார்க்க வந்திருப்பது அவனை பெற்ற தந்தை. ஓர் சிரிப்புக்குக் கூட பஞ்சமா? இவன் ஏன் இப்படி நடந்து கொள்ள வேண்டும்? அவரை பிடிக்காமல் இருக்கலாம் ஆனால் வந்தவரை மரியாதை நிமித்தமாக கூட வரவேற்காமல் இருப்பது முறையல்லவே. குருவின் செய்கை அவள் மனதை ஏனோ முரண்டியது.

அந்த அறையை சுற்றி நோட்டம் விட்டவர் ஓர் ஓரமாக நின்று கொண்டிருந்த வெண்பாவை அப்போது தான் கவனித்தார். அதை கண்டு கொண்ட சுகீர்த்தன் அவர் கேட்கும் முன்னரே முந்திக் கொண்டு, கல்லூரியல் தங்களோடு கற்கும் ஜூனியர் மாணவி என அறிமுகப்படுத்த, புருவ முடிச்சுடன் அவளை பார்த்து விட்டு சுகீர்த்தனின் பக்கம் திரும்பினார். அதை அறியாதவளோ தன் தலையை தட்டியபடி ஏதோவொன்றை நினைவில் கொண்டு வர முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

“என்னப்பா சுகீ எப்படி இருக்க? படிப்பெல்லாம் எப்படி போகுது?” என்று அவனுடன் சகஜமாக தொடர அவனும் அதற்கேற்றாற் போல பதிலளிக்க, குரு அவரிடம் பேசவில்லை.

தொடர்ந்து சுகீர்த்தனே பேச ‘என்ன நினைத்துக் கொண்டிருக்கிறான் இவன்? பெற்ற தந்தை வந்திருக்கிறேன் என்னை அவமானப்படுத்துவதே இவன் வேலையாகி விட்டது.’ என்யெண்ணியவர் குருவை நோக்கி,

“குரு… ” என்று அழைக்க ,

“ம்… சொல்லுங்க… ”

“ உனக்கு இப்போ எப்படி இருக்கு?” என அவன் நலம் குறித்து விசாரிக்க,

“நான் இன்னும் சாகலை. நல்லா தான் இருக்கேன். ஏன் என்னையும் கொல்ல முயற்சி செய்துகிட்டு இருக்கீங்களா? உங்க வழக்கம் அது தானே” என்று வெடுக்கென பதிலளித்தான் குரு.

அவனது பதிலில் சிறிது கோபமடைந்தவர், “குரு… உன்னோட அப்பா நான். நீ இப்படி பேசுறதால உன் அப்பா இல்லைனு ஆகாது. என்னோட பல வேலைகளை புறம் தள்ளிட்டு தான் உன்னை பார்க்க வந்திருக்கேன்.” என்று கூற,

“நீங்க என்னை வந்து பார்க்கனும்னு எந்த அவசியமும் இல்லை. என்னை வந்து பாருங்கனு உங்க கிட்ட நான் கெஞ்சவுமில்லை. உங்களுக்கு தாராளமாக இங்கிருந்து போகலாம்” என்றான் அலட்சியமாக.

“குரு” என்று அவனை பேச வேண்டாமென்று தடுக்க வந்த நண்பனை பார்வையாலேயே நிறுத்தியவன், வெண்பாவை பார்க்க அவளோ மலங்க மலங்க விழித்த வண்ணம் இருவரையும் மாறி மாறி பார்த்துக் கொண்டு நின்றாள்.

அவனது பார்வை சென்ற திசையை கண்ட வேதநாயகம் குருவிடம்,

“குரு உங்கூட நான் தனியா பேசனும்” என்றார் அமைதியாக.

“உங்க கூட தனியா பேசுற அளவுக்கு ஒரு ரகசியமும் இல்லை.” என்றவன் சுகீர்த்தனையும் வெண்பாவையும் பார்த்து விட்டு, “இவங்க இரண்டு பேருமே எனக்கு என் வாழ்க்கையில் ரொம்ப முக்கியமானவங்க… உங்களை விட… ” என்று கூறியவனது பார்வை விரும்பினால் சொல்லலாம் இல்லையென்றால்

செல்லுங்கள் என்ற செய்தியை தாங்கியிருந்தது.

“சரி… சரி சுகீ இருக்கட்டும் ஆனால் இந்தப் பொண்ணு… ” என்று இழுத்தவரின் பார்வை அவள் மேல் இருக்க,

“அவளும் தான் எனக்கு முக்கியவமானவள்னு சொன்னேன் தானே… ” என்று குரலுயர்த்திக் கூற,

அவருள் பொங்கியெழுந்த கோபத்தை வெகு பிரயத்தனம் செய்து கட்டுக்குள் கொண்டு வர வேண்டியதாய் போயிற்று வேதநாயகத்திற்கு. இருந்தாலும் குருவின் குணமறிந்து முகத்தில் எதையும் காட்டிக் கொள்ளாமல் அவனிடம் தான் கூற வந்த விடயத்தை கூறத் துவங்கினார்.

“இன்னும் ஒரு மாதத்தில் உன்னோட படிப்பு முடிஞ்சிடும் அதுக்கப்புறம் நீ கலம்போ (Colombo) வந்து நம்ம பிசினஸ் எல்லாம் நீ வந்து நிர்வாகம் பண்ணனும்… எனக்குப் பிறகு நீ தானே இந்த சொத்து… ” என்று அவர் கூறி முடிப்பதற்குள் இடையிட்டவன்,

“உங்க சொத்துக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு

எனக்கில்லை. என்ன உரிமையில நான் அதெல்லாம் கட்டிக் காக்கனும்னு சொல்றீங்க? அந்த பாவப்பட்ட சொத்துக்கள் எனக்கு தேவையுமில்லை. உங்களோட இந்த உறவும் எனக்கு வேணாம்.

உங்களோட இந்த பதவி, சொத்து இதெல்லாம் தான் உங்களுக்கு உயிர் மூச்சு அதை நீங்களே கட்டிக் காக்க வேண்டியது தானே? இதை சொல்லத் தான் இவ்வளவு தூரம் வந்தீங்கனா இப்பவே கிளம்புங்க... ” என்று கோபம் கொண்டு கத்தியவன் வாசலை கைகாட்ட, அவரை அவமதிக்கும் விதமாக பேசும் குருவின் மேல் கோபம் உச்சமடைய நாற்காலியை விட்டும் எழுந்து நின்றார் வேதநாயகம்.

அவர் நின்ற தோரணை சுகீர்த்தனையே கிலி கொள்ளச் செய்தது. சிவா வெண்பாவிடம் வம்பு செய்த அன்று இதே மாதிரியான தோற்றத்தில் நின்ற குரு அவன் கண்முன் தோன்றி மறைந்தான்.

வெண்பாவோ என்ன நடந்து கொண்டிருக்கிறது என்றே புரியாமல் வெளவெளத்துப் போய் நின்றிருந்தாள். வேதநாயகத்தை பலமுறை தொலைக்காட்சி செய்திகளிலும், பத்திரிகைகளும் பார்த்திருக்கிறாள் . அமைச்சர் வேதநாயகம் குருவின் தந்தையா? இலங்கையின் முக்கிய புள்ளிகளில் ஒருவரின் மகன் இங்கே

சாதாரண அறையில் சாதாரணமாக வாழ்ந்து வருகிறானே… இது வரை அவன் காட்டிக் கொண்டதேயில்லையே ஏன்? இப்படி பல கேள்விகள் அவள் மண்டையை குழப்பானாலும் , அவர்கள் இருவருக்கிடையில் ஏதோ சரியில்லை என்று மட்டும் அவர்களது உரையாடல் மூலம் தெரிந்து கொண்டாள்.

“குரு நீ உன் லிமிட்டை தாண்டி பேசிக்கிட்டு இருக்க… பணம்,பதவி எதுவும் வேணாம்னு சொல்றீயே என்னோட இந்த பதவியும் பணமும் தான் இன்னைக்கு இந்த இடத்தில இருந்து இருக்க மாட்ட… ” என்று அந்த அறையை சுட்டிக்காட்ட குரு அவரை புரியாத பார்வை பார்த்தான்.

“என்ன அப்படி பார்க்குற? கவர்ண்மென்ட் ஹாஸ்பிடல்ல உன்னைப் போல சாதாரண ஒருத்தனுக்கு இந்த மாதிரி தனியறை அதுவும் ஏசி ரூம் கொடுப்பாங்களா?” என்று நக்கலாக மொழிந்தவர்,

“நீ என்னோட பையன் அந்த ஒரே காரணத்துக்காக உனக்கு இத்தனை வசதிகளும் கொடுத்திருக்காங்க. பணமும் பதவியும் இருந்தா நமக்கு மதிப்பையும் மரியாதையும் தானாக தேடி வரும்…

பணம் இருந்தா என்ன வேணும்னாலும் செய்ய முடியும். அதோடு பதவியும் இருந்தா இந்த நாட்டை மட்டும் என்ன உலகத்தையே ஆளலாம். அந்த பட்டிக்காடு, உன் அம்மா மாதிரியே நீயும் முட்டாளா தான் இருப்ப... " என்று இளக்காரமாக கூற, "அம்மா" என்ற வார்த்தையை கேட்டதும் வெள்ளந்தியாக சிரித்து வைக்கும் அன்பே உருவாய் கொண்ட அவனது ஆசை அன்னையின் முகம் மனக்கண் முன் வந்து போனது.

இறுகிப் போயிருந்த அவன் முகம் ஒரு நொடி ஒரே ஒரு நொடி இளகினாலும் மறு நொடியே கண்கள் இரத்த நிறம் கொள்ள, எழுத்து நரம்புகள் புடைக்க, உஷ்ன மூச்சுக்கள் வெளியேற, ருத்ர மூர்த்தியாய் மாறியிருந்தான் அவன்.

"ஸ்டாப் இட்" என்று சீற ,

அவர் பேசிய வார்த்தைகளில் ஏற்கனவே பெரும் சினங்கொண்டு இருந்தவன் அவரது தற்போதைய இளக்காரமான பேச்சில் உட்சபட்ச கொதிநிலையை அடைந்திருந்தான். இத்தனை நேரம் இழுத்து வைத்த பொறுமை காற்றில் பறக்க, வெறி கொண்ட வேங்கையாய் மாறிப் போனான்.

அவனது இத் தோற்றம் கண்டு அரண்டு போனாள் வெண்பா.

இதுவரை இப்படி ஒரு கோலத்தில் அவனை கண்டதேயில்லை. சுகீர்த்தன் ஒரு நொடி திகைத்தாலும் நண்பனின் மனநிலையறிந்து அமைதியாக நின்றான். அவன் பார்த்த பார்வை வேதநாயகத்தையே மிரள வைத்தது.

“பத்தி பேச உங்களுக்கு எந்த உரிமையும் கிடையாது. கேவலம் இந்த அரசியல் வாழ்க்கைகாக என் அம்மாவையே கொலை செய்தவருக்கு என் அம்மாவை பத்தி என்ன தெரியும்? உங்க பணம்,பதவி, அந்தஸ்த்து எதுவுமே வேணாம்னு தானே இந்த பத்து வருஷமா உங்க முகத்தை கூட பார்க்க கூடாதுன்னு இருக்கேன்.

உங்களை மாதிரி கேவலமான ஒருத்தரோட மகன்னு சொல்லிக்க தான் வெட்கப்படுறேன்… ” என்று அவன் கத்த,

“குரூஊஊஊ… ” என பதிலுக்கு சீறினார் வேதநாயகம்.

அதற்கு சிறிதும் அசராதவனாய், அவரை நோக்கி, “உங்களை மாதிரி அரசியல் வாதிங்குற போர்வைக்குள்ள ஒழிஞ்சுக்கிட்டு தப்புக்கு மேல தப்பு பண்றது மட்டுமில்லாமல் பதவிக்காக என் அம்மாவையே கொலை செய்தவரு தானே நீங்க… “ ஏகத்துக்கும்

பல்ஸ் எகிற கத்தியவனை கண்டு வெண்பாவும் சுகீர்த்தனும் திகைத்து, அவன் சொன்ன விடயத்தை கேட்டு அதிர்ந்து போய் நின்றார்கள் இருவரும்.

அவனது தந்தை அதிர்ந்தாலும் கூட இது ஒன்றும் அவருக்கு புதிதல்ல. இந்த பத்து வருடங்களில் குருவின் வாயால் பல முறை இதையே கேட்டுப் பழகியவர் தானே. உள்ளுக்குள் சிறிது வலித்தாலும் அவரால் நடந்து முடிந்தவற்றை மாற்ற இயலாதே. தன் இயலாமையை எண்ணி வருந்தினாலும் முகத்தில் கடுமையை பூசி நின்றவர் அவனை நோக்கி,

“உன் முடிவு இது தானா?” என்று நிதானமாகவே கேட்டார்.

“இந்த முடிவுல இருந்து நான் பத்து வருஷமா மாறவும் இல்லை. இனி மாறவும் மாட்டேன்.” என்றான் உறுதியுடன்.

“வெல்… நீயும் உன் அம்மா மாதிரி பிழைக்க தெரியாத முட்டாள் தான்… ” என்று கடுமையாக கூற, அம்மா என்ற வார்த்தை மீண்டும் அவனுள் கடுங் கோபத்தை கிளப்ப படுக்கையை விட்டும் சடாரென எழப்போனவன் நிலை தடுமாறவே , அதை கண்டு கொண்டவள் மற்றவர்களுக்கு

முன்பாக ஓடிச் சென்று குருவை தாங்கிப் பிடித்தாள் வெண்பா.

அந் நொடி இருவரது பார்வைகளும் ஒரே நேர் கோட்டில் சந்தித்துக் கொள்ள, அவள் அருகாமையில் ஒரு கணம் பேச்சிழந்து போனான் அவன். அவர்கள் இருவரையும் கலைத்தது வேதநாயகத்தின் குரல்.

“அப்போ நீ நிஷாவை கல்யாணம் பண்ணிக்க போறதில்லையா?” என்று கேட்டவரது பார்வை வெண்பாவில் நிலைத்திருக்க, அவர் கேட்ட கேள்வியில் அதிர்ந்தாள் வெண்பா.

“அந்த நிஷாவை நான் கல்யாணம் செஞ்சுக்கனுமா? நோ வே… ” என்றவனது உதடுகள் இகழ்ச்சியாக வளைந்தன.

தன்னை தாங்கியிருக்கும் வெண்பாவை திரும்பிப் பார்த்து, “கல்யாணம்னு ஒன்னு நடந்தா அது இவ கூட மட்டும் தான்… நான் வெண்பாவை காதலிக்கிறேன்.இப்போ புரிஞ்சதா? தயவு செய்து இந்த இடத்தை விட்டு கிளம்புங்க… ” என்றான் அடக்கப்பட்ட கோபத்துடன்.

அவன் சொன்னதை கேட்டு திகைத்தவர் அறையை விட்டும்

கோபமாக வெளியேற, வெண்பா மயங்கியே விழுந்து விட்டாள். குருவோ பதறி கீழே விழுந்தவளை எழுப்ப, சுகீர்த்தனோ நடப்பவற்றை சிரித்துக் கொண்டே பார்க்க கடுப்பானான் குரு.

“என்னடா சிரிச்சிக்கிட்டு இருக்க? அந்த தண்ணி கிளாஸை எடு… ” என்று கத்த, சிரித்துக் கொண்டே எடுத்து வர அதை வாங்கி அவள் முகத்தில் தெளித்து விட்டு எழுப்பினான்.

“என்னாச்சு… ?” என்று கொண்டே பதறி எழுந்தமர குபீரென்று சிரித்தவன்,

“வீர மங்கையே… உனக்கு என்னாச்சு? குரு உன்னை காதலிக்கிறேன்னு சொன்னதும் இப்படி மயங்கி விழுந்துட்டியே… ” என்று மீண்டும் சிரிக்கலானான்.

அப்போது தான் சற்று முன் நடந்தவை யாவும் அவள் நினைவில் வர, நம்ப முடியாதவளாய் சட்டென குருவின் பக்கம் திரும்பிப் பார்க்க அவனோ அவனது அரிதான ட்ரேட் மார்க் புன்னையுடன் அவளையே நோக்கிக் கொண்டிருந்தான்.

அவளை பார்த்து புன்னகைக்கும் இந்த குரு அவளுக்கு

புதிது. அவளது இதயம் தாறுமாறாக துடிக்க மீண்டும் மயங்கி விழுந்தாள்.

# அத்தியாயம் 8

“க்குரு… நோ கி… கிட்ட வரா… தே… ஹேய் நோ ப்ளீ… ஸ்… ” வார்த்தைகள் தந்தியடிக்க மலங்க விழித்தபடி பின்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தாள் வெண்பா.

அவள் வார்த்தையை சிறிதும் பொருட்படுத்தாதவன், அவளது மிரண்டு விழிக்கும் விழிகள் ரசித்த வண்ணம் அவளை நோக்கி முன்னேற, சுவரில் மோதி நின்றாள் அவள்.

கண்களில் குறும்பு மின்ன இருபுறமும் தன் கைகளால் அணை கட்டி மேலும் நெருங்க, இருவருக்குமிடையில் நூலளவு இடைவெளியே இருக்க, அவன் நெருக்கம் அவளுக்கு அவஸ்தையாகி போனது.

“வர வர ரொம்ப அமைதியாக இருக்கடி… என்னை காதலிக்கிறேன்னு பின்னாடியே சுத்துறப்போ இருந்த அடாவடி துறுதுறு வெண்பா எங்கே போனா?

இப்போ நானும் உன்னை லவ் பண்றேன் ஆனா நீ முன்ன மாதிரி இல்லையே ஏன்? இது உனக்கு செட் ஆகலையே…

ஃபோன்ல மட்டும் வாய் ஓயாம பேசுற ஆனால் நேரில் கண்டா இப்படி பம்முற… இதுக்கு உன்னை என்ன பண்ணலாம்?”

‘ஐயோ குரு… நீ வேற நீ திடீர் திடீர்னு ஏன்டா இப்படி பண்ணுற? நீ பக்கத்துல வந்தாலே எனக்கு வார்த்தை வரலைடா… ’ என்று மனதால் புலம்ப முடிந்ததே தவிர வார்த்தை வெளியே வரவில்லை.

இமைகள் இரண்டும் படபடக்க, இதயம் தடதடக்க அவனருகாமையில் பயமும் நாணமும் சூழ்ந்து கொள்ள தலை குனிந்து நின்றவளது முகத்தை ஒற்றை விரல் கொண்டு நிமிர்த்த இருவர் பார்வைகளும் சந்தித்துக் கொள்ள, உயிர் வரை ஊடுருவும் அவன் பார்வையில் இதயம் சில்லிட்டது அவளுக்கு.

அவள் கண்களில் தனக்கான காதலை கண்டு கொண்டவன்,

“இந்த உலகத்திலேயே என் அம்மாவுக்கு பிறகு உன்னை தான் உயிராக நேசிக்கிறேன் வெண்பா… என் அம்மாவின் அதே ப்ரவுன் கண்கள், அதே கர்ள் ஹேர் உனக்கும் இருக்கு… ” நெற்றியில் இதழ் ஒற்ற, விழி விரிய அவனையே நோக்கிக் கொண்டிருந்தாள் அவள்.

இருவரும் காதலித்து ஒரு மாதம் கடந்திருந்தது. இது வரை பல தடவை அவனால் கூறப்பட்டது. அவன் அப்பாவை பற்றி பேச்செடுத்தாலே எரிந்து விழுபவன் ,அம்மா என்றால் போதும் கண்களில் கனிவுடன் அவரை பற்றியே நாள் முழுவதும் பேசிக் கொண்டிருப்பான். ஆனால் மறந்தும் கூட அம்மாவின் இறப்பை பற்றிய பேச்சை அவன் பேச விரும்பவில்லை. அது அவன் மனதை மிகவும் வருத்தும் ஆகையால் அவளும் அதை பற்றி ஒரு நாள் கூட கேட்க முனையவில்லை.

அந் நேரம் பாடலொன்றை ஹம் செய்து கொண்டே வீட்டுக்குள் நுழைய அவன் வந்தது கூட தெரியாமல் அக் காதல் கிளிகள் காதல் வானில் சிறகடித்துக் கொண்டிருக்க, அங்கு அவர்கள் இருவரது நெருக்கத்தை கண்டு வந்த வேகத்திலேயே அபளொட் டர்ன் செய்து நின்று கொண்டே,

“அடப்பாவி வயசு பையனை வச்சிக்கிட்டு என்ன காரியம் பண்ற? இதுக்கு தான் என்னை டவுன்ல இருக்க ரெஸ்டூரன்ட் போய் சாப்பாடு வாங்கிட்டு வர சொன்னியா?” என்ற சுகீர்த்தனின் குரலில் தூக்கி வாரிப் போட, அவனிலிருந்தும் துள்ளி பாய்ந்து விடுபட்டு ஓடி சமயலறைக்குள் புகுந்து கொள்ள, குரு அவனிடம் மாட்டிக் கொண்டான்.

“அது… வந்து சுகீ… ” என்று பின்னந்தலையை சொறிந்த வண்ணம் தரையை பார்த்து கொண்டே தடுமாற,

“ஐயோ போதும்டா சாமி… நீ இப்படி பண்றது பார்க்க முடியலை… சரி வா சாப்பிடலாம் மேகியை கூப்பிடு… ”என்று சாப்பிட தயாராக அவளும் வந்து சேர்ந்தாள்.

இருவர் முகத்தையும் பார்க்கவே அவளுக்கு கூச்சமாக இருந்தது. இது போததென்று குரு வேறு அவள் பக்கத்தில் அமர்ந்து அவளை சீண்டிக் கொண்டே இருந்தான். அவளுக்குத் தான் பெரும்பாடாய் ஆனது.

உணவின் போது, “ ஏன் மேகி… நீ உன் அம்மா வயிற்றில் இருந்தப்போ உங்க அம்மா தினமும் மூனு வேளை மேகி நூடுல்ஸ் சாப்பிட்டு இருப்பாங்களோ… ?” என அவனது அரும்பெரும் சந்தேகத்தை கேட்டான் சுகீ.

அது புரியாதவள், “இல்லையே… ஏன் அண்ணா?”

“இல்லை உன் தலை மேகி நூடுல்ஸ் மாதிரியே இருக்கே… ” என்று அவளை கலாய்க்க, குருவும் அவனுடன் இனைந்து

அவளை கலாய்க்க, சளைக்காமல் அவர்களை இருவருடனும் வாயாடிய வண்ணம் உண்டு முடித்தனர்.

அன்று பல்கலைக்கழக பரீட்சைகளுக்காக ஸ்டடி லீவு வழங்கப்பட்டது. வழக்கம் போல வெண்பாவை அழைத்துக் கொண்டு கிளம்ப அன்று அவள் எதையோ பறி கொடுத்தது போல் அமைதியாகவே வர தன் பைக்கை ஓரமாக நிறுத்தினான்.

"ஹேய் பேபி… உனக்கு என்னாச்சு ஏன் அமைதியா இருக்க…?' என்றவன் அவள் முகத்தை பார்க்க அவள் கண்கள் ஏகத்துக்கும் கலங்கியிருக்க பதறித் தான் போனான் குரு.

“என்னாச்சுடா ஏன் அழுற ?”

“இனி ரெண்டு வாரத்துக்கு உன்னை பாக்கவே முடியாதே குரு… ” உதடுகள் பிதுங்க மீண்டும் அழுதாள்.

அவளது அழுகைக்கான காரணத்தை கேட்டதும் முன்னைய பதற்றம் மறைந்து உதடுகள் மலர்ந்தன. சிறு குழந்தையை ஒத்த அவளது செய்கை அவனை ரசிக்கவே செய்தது. தரையை பார்த்த வண்ணம் நின்றிருந்தவள் முன்னே வந்து இடும்பில் கை வைத்து குனிந்து அவள் முகம் நோக்கி,

"உன்னால் என்னை பார்க்காம இருக்க முடியாதா?' என்று ஹஸ்கி குரலில் கேட்க, மிக அருகாமையில் அவன் குரல் கேட்டதும் திடுக்கிட்டு தலையுயர்த்த அவன் முகமோ அவள் முகத்திற்கு வெகு அருகில் காணப்பட விழி விரிய நின்றவளின் கையை பற்றி அவன் கை வளைவுக்குள் கொண்டு நிறுத்தி மீண்டும் அதே கேள்வியை கேட்டான்.

அவன் அருகாமை அவளை அவஸ்த்தை கொள்ளச் செய்யும் அதே நேரம் தன்னை தெரிந்தவர்கள் யாரேனும் பார்த்து விடுவார்களோ என்ற பயமே மேலோங்கியது.

“குரு விடு டா... யாராவது பார்த்துட போறாங்க... ” அவன் பிடியிலிருந்து விடுபட முயல அவன் விடுவதாய் இல்லை.

“ஏன் பார்த்தா என்ன நாம லவ்வர்ஸ் தானே... ? இதுல என்ன இருக்கு... வா அப்படியே நாம காஃபி ஷாப் போகலாம்... ” என்றான் சாதாரணமாக.

அவளிருந்த மனநிலையில் அவளுக்கு எங்கும் செல்லத் தோன்றவில்லை. எனவே, அவன் விழிகளில் நோக்காமல் தரையை நோக்கி குனிந்தபடியே, “இப்போ என்னால் எங்கேயும்

வர முடியாது. ஏற்கனவே லேட்... நான் வீட்டுக்கு போகனும் குரு... ” என்று அவள் உறுதியான குரலில் கூற,

அதற்கு மேலும் அவளை வற்புறுத்த மனமற்று, முகத்தை தூக்கி வைத்துக் கொண்டு வண்டியில் ஏறினான். அவளின் மறுப்பு அவனில் ஓர் முகச்சுளிப்பை ஏற்படுத்தியது.

அவனுடைய முகத்தில் தெரிந்த ஒதுக்கம் வலித்தாலும், ஏனோ இதமாகவும் இருந்தது. தாயிடம் கோபப்பட்டு முகத்தை தூக்கி வைத்துக் கொள்ளும் குழந்தை போல அவன் இருந்த விதம் அவள் மனதில் இதம் பரப்பவே செய்தது.

வண்டி அவளுடைய இல்லம் நோக்கி விரைய, கண்ணாடி வழியே தன்னவனின் முகத்தையே பார்த்துக் கொண்டு வந்தாள்.

வழமையாக அவள் இறங்கும் இடத்தில் இறங்கி, “குருஊஊஊ... நான் போகட்டா?”என்று இழுவையாக கேட்க, அவனோ எந்த பதிலும் கூறாமல் நேர் பாரவை பார்த்தபடியே எக்ஸலேட்டரை முறுக்க அதிலேயே அவனது கோபத்தை உணர்ந்தாள்.

அவன் முன்னே போய் நின்று , வலுக்கட்டாயமாக முகத்தை

தன் பக்கம் திருப்பி, “டேய் குரு… என்னை பாருடா… நீ சிரிச்சா தான்டா என்னால நிம்மதியா போக முடியும்… கோபமாடா?” என்று கொஞ்சும் குரலில் கேட்டாள் அவள் .

இப்படி கேட்டால் அவனால் மறுப்பாக தலையசைக்க முடியுமா என்ன? ஆசைக்கமழ தன்னவளை நோக்கியவன், “உன் மேல கோபப்பட்டா அது என்னையே நான் வெறுக்குற மாதிரிமா… ” என்று உதடுகள் விரிய பதிலளித்து விட்டு சிறு தலையசைப்புடன் விடைபெற்றுச் செல்ல அவளும் சந்தோஷமாகவே வீடு நோக்கி நடந்தாள்.

இரு விழிகள் குரோதத்துடன் அவர்களையே நோக்கிக் கொண்டிருந்தது. அதை அறியாமல் போனது தான் விதி செய்த சதியோ?

# அத்தியாயம் 9

புன்னகை முகத்துடன் வீட்டினுள்ளே நுழைந்தவளை முறைத்த வண்ணம் வரவேற்றார் வெண்பாவின் சித்தி இந்திரா. அந்நேரம் அங்கு இந்திராவை எதிர்பாராவள் மிரண்டு விழித்தாள்.

“என்ன வெண்பா இவ்வளவு லேட்டா வர்ற? அஞ்சு மணியாச்சு எங்கே போயிருந்த?” என்று அதட்டும் குரலில் கேட்க, தடுமாற அவரது ஆராயும் பார்வை அவளை துளையிட சட்டென்று முகபாவனையை மாற்றியவள், அவரை நோக்கி,

“அது வந்து சித்தி... திவ்யாவுக்கு உடம்பு சரியில்லைனு இன்னைக்கு காலேஜ் வரலை. அதான் அவ வீட்டுக்கு போய் அவளை பார்த்துட்டு வர கொஞ்சம் லேட்டாகிருச்சு... ” என்று வாய்க்கு வந்ததை உளறி வைத்தாள்.

“தினமும் இப்படி தான் லேட்டா வரியா?” என்று அவளிடம் வினவ, இல்லையோ று தலையசைத்தாள்.அவளை நம்பாத பார்வை பார்த்தவர், தங்கை இந்துமதியை பாரக்க, அவரும் வெண்பாவின் கூற்றையே ஆமோதிக்க அதற்கு மேல் அவளிடம்

கேள்வி கேட்டு குடையவில்லை.

வெண்பாவின் தாயின் மூத்த தங்கை தான் இந்திரா. தன் பிள்ளைகள் இருவருடனும் அங்கே வந்திருந்தார். அவள் மேல் பாசம் எந்தளவு இருக்கிறதோ அந்தளவு கண்டிப்பானவரும் கூட. எனவே, வெண்பாவுக்கும் இந்திரா சித்தி என்றால் கொஞ்சம் பயம்.

விட்டால் போதும் என தன் அறைக்குள் சென்று கதவை சாத்தியவள், முதல் வேலையாக போனை எடுத்து குறுந்தகவல் ஒன்றை குருவிற்கு தட்டவிட, மறக்காமல் சைலண்ட் மோடிற்கு மாற்றி விட்டு, “சித்தி வந்துட்டாங்க இனி ரொம்ப கேர்ஃபுல்லா இருக்கனும்… ” என்றெண்ணியவாறு குளியலறைக்குள் நுழைந்தாள்.

தன் படுக்கையில் சாய்ந்திருந்தவன் நினைவுகள் முழுவதும் அவளே. எப்படி இருந்த என்னை இப்படி மாற்றி விட்டாளே என்று தனக்குத் தானே கூறி சிரித்துக் கொண்டான்.இந்த ஒரு மாத காலத்தில் அவனுக்கு சகலதுமாகி போனாள் வெண்பா.

இந்திரா சித்தியின் குடும்பமும் அங்கே இருந்ததால் அடுத்து வந்த நாட்களில் அவளால் குருவை சந்திக்க முடியாமல் போனது. முன்பு போல போனிலும் அவ்வளவாக பேசிக் கொள்ள முடியவில்லை. குருவும் இறுதியாண்டு பரீட்சைக்கு படித்துக்

கொண்டிருந்தமையால் இருவரும் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இப்படியே வாரங்கள் கழிந்தன. குருவின் பரீட்சைகளும் நிறைவடைந்து விட்டது. அன்று பல்கலைக்கழகத்தின் கடைசி நாள். அவர்கள் வழக்கமாக சந்தித்துக் கொள்ளும் பேராதெனிய தாவரவியல் பூங்காவின் வாகை மரத்தடியில் இருந்த மரபெஞ்சில் சோகமே உருவாய் அமர்ந்திருந்தாள் வெண்பா.

அவளது சுருள் அலகக் கூந்தல் காற்றில் அசைந்தாட அமர்ந்திருந்தவளை தூரத்திலேயே கண்டு கொண்டவன், புன்னகையுடன் தன் அழகுப் பதுமையை நோக்கி நடந்தான். அவள் பின்னே நின்று அவளது இரு கண்களையும் தன் கை கொண்டு மூட, அவளிடமிருந்து ஒரு அசைவுமில்லை. காதருகே குனிந்து,

“வந்து ரொம்ப நேரமாச்சா?” என்று கேட்க, அப்போதும் பதில் வராமல் போகவே, அந்த பெஞ்சின் சாயும் பகுதியை பிடித்து முன்னால் பாய்ந்து அவளருகில் அமர்ந்து கொண்டான். எங்கேயோ வெறித்துப் பார்த்த வண்ணம் அமர்ந்திருந்தவளை யோசனையாய் பார்த்தவனுக்கு அவள் அப்படி இருப்பதற்கான காரணமும் புரியவே, குறுநகையுடன்,

"டார்லிங் இங்கே பாரு... " அவள் இரு கண்ணங்களையும் பற்றி தன் புறம் திருப்ப, அவள் விழித்திரை இரண்டும் கலங்கி செந்நிறம் கொண்டிருக்க,

"ஹேய் ஏன் இப்படி அழுது இருக்க? என்னாச்சு?" என அவளது இந்த அழுகைக்கான காரணம் அறிந்தும் அறியாதவன் போல கேட்டான்.

"ஏன் எதுக்கு அழறேன்னு உனக்கு தெரியாதா குரு?" அவனிடமே திருப்பி கேட்க, அதை ஆமோதிப்பது போல் தலையசைத்து விட்டு புன்னகையுடன் அவளை ஏறிட்டான்.

தான் இருக்கும் நிலையில் அவனது புன்னகை அவளை கடுப்பேற்ற அவன் கையை தட்டி விட்டவள், மூக்கை உறிஞ்சியபடி,

"நீ இனி காலேஜ் வரவே மாட்ட... உன்னை பார்க்கவே முடியாதுனு நான் இங்கே ஃபீல் பண்ணிக்கிட்டு இருக்கேன்... ஆனால் நீ கூலா சிரிச்சிக்கிட்டு இருக்க... உனக்கு கொஞ்சம் கூட கவலையே இல்லைல... " என்று வாய்க்கு வந்ததை எல்லாம் கூறி ஆதங்கத்துடன் சத்தமிட அவனோ தன்னவளின் கோப

வதனத்தின் அழகை ரசித்தபடி மாறா புன்னகையுடன் பார்த்திருந்தான்.

பைத்தியகாரி போல தன்னை புலம்ப விட்டு வேடிக்கை பார்த்து சிரிக்கும் அவன் மேல் கட்டுக்கடங்கா கோபம் வரவே அவன் சட்டைக் காலரை பற்றி தன்னருகே இழுத்து குருவின் முகத்துக்கு நேரே தன் முகத்தை கொண்டு வந்தவள்,

“ ஏன் என்னை கழற்றி விட்டுட்டு அந்த நிஷாவை கல்யாணம் பண்ணிக்கலாம்னு ஏதாவது ஐடியா இருக்கா? ” என அமைதியான அதே சமயம் அழுத்தமான குரலில் கேட்டாள்.

அந்தக் கேள்வியில் சிறிது அவளை சீண்டும் எண்ணம் தோன்றவே அதை செயல்படுத்த எண்ணி,

“வாவ் வெண்பா நீ ப்ரில்லியண்ட் பா… நான் சொல்ல வந்ததை நீயே சொல்லிட்ட… இவ்வளவு நாள் டைம் பாஸூக்கு உன்னை லவ் பண்னேன்… காலேஜோட அந்த சாப்டர் இப்போ ஓவர்… இனி அந்த நிஷாவை கல்யாணம் பண்ணி ஜாலியா லைஃபை என்ஜாய் செய்ய வேண்டியது தான்… ” என்று உல்லாசமாய் கைகளை விரித்து கண்கள் மூடி அவன் கூறினான்.

அதில் ஏகத்துக்கும் கோபம் பொங்க சட்டை காலரை ஆவேசமாக பற்றி இழுத்து, கனல் தெறிக்கும் விழிகளுடன் அவனை விழிகளை நோக்கி ஆழமான பார்வையை செலுத்தியவள்,

“குரூஊஊஊ... உனக்கு அப்படி ஏதாவது ஐடியா இருந்தா இப்பவே அதை மறந்திடு... என்னை ஏமாத்திட்டு இன்னொருத்தி கூட சந்தோஷமாக வாழ விட்ருவேனா... நெவர்... யூ ஆர் மைன்... யூ ஆர் ஒன்லி மைன்... உன்னை யாருக்காகவும் எதுக்காகவும் விட்டுக் கொடுக்க முடியாது மைன்ட் இட்... ” என்று மிரட்டும் தொனியில் கூறினாலும் அதை கூறி முடிக்கும் தருவாயில் அவள் குரல் உடைந்ததோ... ? அவனை தள்ளி அவன் சட்டையை பற்றியிருந்த தன் கைகளை விலக்கிக் கொண்டாள்.

அவளது செய்கையில் அவனுக்கு கோபம் வரவில்லை. மாறாக தன்னவன் தனக்கு மட்டும் தான் என்ற அவன் மீதான அவளது உரிமை பேச்சில் அவன் நெஞ்சம் நெகிழந்து போனது. தன் மேல் அளவு கடந்த நேசம் வைத்திருக்கும் தன்னுயிரானவளை இன்னுயிர் மூச்சாய் கண்ணுக்குள் மணிபோல் காப்பேன் என அவன் மனம் உறுதிமொழி எடுத்துக் கொண்டது.

அதன் பின் அவளிடம் தாறுமாறான அடிகளை வாங்கி, அவளை சமாதனம் செய்து ஒரு நிலைக்கு கொண்டு வருவதற்குள் போதும் போதும் என்றானது. தூரத்திலிருந்த வண்ணம் அந்த அழகிய தருணத்தை மனம் நிறைய பூரிப்புடன் அவர்கள் இருவரும் அறியா வண்ணம் அழகாக படம் பிடித்துக் கொண்டிருந்தான் சுகீர்த்தன்.

வாரம் ஒரு முறை வந்து அவளை சந்திப்பதற்கான உறுதிமொழியுடன் அவளிடமிருந்து விடைபெற்றுக் கிளம்பினான்.

அதன்படியே அவனும் மறக்காமல் வாரம் ஒரு முறை அவளை சந்தித்து விட்டுச் சென்றான். வரும் போது அவளுக்கு பிடித்த ஏதாவது ஒன்றை மறக்காமல் வாங்கி வரவும் தவறவில்லை. இப்படியே இருவரது காதலும் மூன்று மாதங்கள் வரை எவ்வித தங்குதடையுமின்றி அழகாய் நகர்ந்தது.

ஊரில் அவனது ஒரே உறவாக கருதும் தாத்தா இறந்து விட அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை. ஏதோ தனிமைபடுத்தப்பட்டதை போன்ற உணர்வு அவனை முழுவதுமாக ஆட்கொண்டது. இத்தனை காலம் தாயாக தந்தையாக பார்த்து வளர்த்தவரின் இறப்பு அவனை பெரிதும் பாதித்தது.

அவன் வேதனைகளுக்கு ஒரே மருந்து வெண்பாவின்

ஆறுதல் வார்த்தைகள் தான். அவளால் முடிந்தவரை தனது வார்த்தைகள் மூலம் அவனை ஆறுதல்படுத்தவே எண்ணினாள். அவள் வார்த்தைகளே அவனுக்கு பலமும் கூட.

அவள் மடிசாய்ந்து சிறிது நேரம் பேசினாலே அவன் மனதின் கவலைகள் யாவும் மாயமாய் மறைந்து விடும். இதற்காகவே வாரம் ஒரு முறை தன்னவள் மதிமுகம் காண வேண்டி ஓடோடி வந்து விடுவான். தாத்தாவின் இழப்பிலிருந்து மீண்டு வர அவனுக்கு சில காலமானது. அதன் பிறகு வந்த நாட்கள் இருவர் வாழ்விலும் மறக்க முடியாத அழகிய பொன்னான நாட்களே...

சில நாட்களாகவே அவளுக்கு குரு தன்னிடம் சரிவர பேசாதது போல் ஓர் உணர்வு தோன்றவாரம்பித்தது. ஒரு நாளில் பல மணி நேரம் உறையாடியவன் சில தினங்களாக சில நிமிடங்கள் பேசி விட்டு வேறு வேலை இருப்பதாக கூறி வைத்து விட இதுவே தொடர்ந்தது. சில தினங்களில் ஓரிரு குறுந்தகவல் மட்டுமே. அதன் பின் இரண்டு நாட்கள் அவளது அழைப்பை ஏற்கவுமில்லை. அவன் அவளை அழைக்கவுமில்லை. சுகீர்த்தனும் அவனது குடும்ப திருமணம் ஒன்றிற்காக கனடா சென்றிருந்தான். அவனுக்கு என்னானதோ... ? ஏதானதோ என உள்ளம் பயத்தில் பதறியது.

மூன்று நாட்களுக்கு பின்...

குருவிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது. அதற்காகவே காத்திருந்தவள் போல அழைப்பை ஏற்றவள்,

“டேய் தடிமாடு... ஃபூல்... இடியட். எங்கேடா போயிருந்த? ஏன்டா இந்த மூனு நாளா எங்கூட பேசலை... ? உனக்கு என்னாச்சோ ஏதாச்சோனு இங்க ஒருத்தி துடிச்சிக்கிட்டுஇன இருக்கா... கொஞ்சம் கூட பொறுப்பே இல்லாம எங்கேடா போய் தொலைஞ்ச?” என தான் மூன்று நாட்களாய் அடைந்த தவிப்பு கோபமாக வெடிக்க அவனை திட்டித் தீர்த்தாள்.

தன் மீதான காதலையும் கரிசனையையும் எண்ணி அவன் கண்கள் கரித்தது. அவளை காயப்படுத்தி விட்டோமே என்று குற்றவுணர்வும் சேர்ந்து கொள்ள அவன் காதல் மனம் அவளுக்காக வேதனை கொண்டது.

“சாரிமா... தாத்தாவோட ப்ராபர்ட்டி விஷயமா ஒரே அலைச்சல் கலம்போ போயிருந்தேன்மா... அதுக்காக உங்கூட இருந்தது தப்பு தான் மண்ணிச்சுக்க என் செல்லமே... ” என்று கெஞ்ச அதற்கெல்லாம் அவள் அசருவாளா என்ன?

“ஜஸ்ட் ஒரு காலேஜ் பண்ணி இருக்கலாம்ல... என் தவிப்பு உனக்கு எங்கே புரிய போகுது . என்ன இருந்தாலும் நீ செஞ்சது தப்பு தப்பு தான் குரு... ” என்றாள் கோபமாக.

“ஓகே... நான் செஞ்சது தப்பு... ரொம்ப பெரிய தப்ப மா... நான் உன் காலில் விழுந்துட்டேன்... என்னை மண்ணிச்சிடு... என் செல்லம்ல... ” என்று குழையும் குரலில் கேட்க அதற்கு மேலும் அவள் கோபம் நீடிக்குமா என்ன?

எத்தனை பெரிய சண்டையிலும் ‘உன் காலில் விழுந்துட்டேன்’ என்ற வார்த்தையை சொன்னால் போதும் அதற்கு மேல் அவன் மீதான அவளது கோபம் காற்றில் பறந்து போய் விடும்.

அதன் பின் அவள் சமாதானமாகி விட வழக்கமாக அவர்கள் இருவரும் சந்திக்கும் பூங்காவில் சந்திக்க முடிவு செய்தனர். இந்த சந்திப்பு எத்தகையது என அவள் அப்போது அறிந்திருக்க வாய்ப்பில்லை.

மறுநாள் கல்லூரி விட்டதும் நேரே பூங்காவை அடைந்தாள். அவளுக்கு முன்பாகவே அவன் வந்திருக்க தன்னவனை கண்ட மகிழ்ச்சியில் உள்ளம் துள்ள ஓடிச் சென்று, “குரு இன்னைக்கு

ரொம்ப சீக்கிரம் வந்து இருக்கியே… ” என்று கொண்டே அவனருகில் அமர்ந்து உரிமையுடன் அவன் கைகோர்த்து தோளில் சாய்ந்து கொண்டாள்.

வந்ததிலிருந்து ஓயாமல் அவள் வளவளக்க அதற்கெல்லாம் “ம்ம்” கொட்டிக் கொண்டிருந்தான் அவன். வழமைக்கு மாறான குருவின் அமைதி அவளை குழப்ப அவனை நோக்கி,

“ஏன் குரு வந்ததிலிருந்து எதுவுமே பேசாம இருக்க? உடம்புக்கு ஒன்னும் இல்லையே… ?” என்று பதற்றத்துடன் கூடிய அக்கறையுடன் அவன் நெற்றி மற்றும் கழுத்தில் கை வைத்து பார்க்க, அவள் விழிகளில் தனக்கான தவிப்பை கண்டவனுக்கு அவள் தனக்கு மட்டுமே சொந்தமாக வேண்டும். தனக்கு மட்டுமே… என அவன் உள் மனம் உறுதி கொண்டது.

அவள் புறம் திரும்பி, “வெண்பா நாம கல்யாணம் பண்ணிக்கனும்… ”என்றான்.

அவன் பேச்சில் சிறிது திகைத்தாலும் , “அதுக்கென்ன குரு நாம கூடிய சீக்கிரமே கல்யாணம் பண்ணிக்கலாம். உனக்கும் அந்த

ஜாப் கன்பார்ம்ல இன்னும் ஒரு வருஷத்துல என்னோட படிப்பும் முடிஞ்சிடும்… அதுக்கப்புறம் கல்யாணம் பண்ணிக்கலாம்… ” என்று கூலாக கூறி புன்னகைக்க,

“நோ இன்னும் ரெண்டு நாளில் நமக்கு கல்யாணம் . அதுவும் ரிஜிஸ்டர் மேரேஜ்… ” என்றான் அழுத்தமான குரலில்.

“குரூஊஊ… என்ன சொல்ற? நாம ஏன் அப்படி யாருக்கும் தெரியாம கல்யாணம் செஞ்சுக்கனும்.? அதுவும் ரெண்டு நாள்ல எப்படி குரு… ?” என்று கலக்கத்துடன் வினவ,

“ரெண்டு நாள்ல உனக்கும் எனக்கும் கல்யாணம் வெண்பா . என் மேல உனக்கு உண்மையான லவ் இருந்தா இதுக்கு மேல எந்த கேள்வியும் கேட்காதே… ” என்று இது தான் என் முடிவு என்பது போல் அழுத்தம் திருத்தமாக கூறி நடந்தான்.

தன்னவனின் எதிர்பாராத இந்த திடீர் முடிவால் கல்லாய் சமைந்து போனாள் பெண்ணவள்.

# அத்தியாயம் 10

பதிவுத் திருமணம் இனிதே நடந்து முடிந்தது. தன் மனைவியின் கைகளை ஆதரவாய் பற்றிக் கொண்டான் குரு. முகம் மலர அவளை நோக்க அவளோ குழப்பத்துடன் கலங்கிய விழிகளுடன் தலையுயர்த்தி பார்க்க, அவளது கண்ணீரை வேறு விதமாக எடுத்துக் கொண்டவன்,

“எதுக்கு இப்போ அழுற? சஏன் உனக்கு என்னை கல்யாணம் செஞ்சது பிடிக்கலையா?” என்று கேட்டான் எரிச்சலுடன்.

“ஐயோ இல்லை குரு. உன்னை பிடிக்காம தான் நீங்க திடுதிப்புனு இரண்டு நாள்ல கல்யாணம்னு சொன்னப்போ ஏன் எதுக்குனு கூட கேட்காம யாருக்கும் தெரியாம கல்யாணம் பண்ண ஒத்துக்கி… ட்டேனா?” என்று கூறும் கூறி முடிக்கையில் குரல் உடைந்தது.

அந்தக் குரல் அவனை தாக்கியதோ ? அவளை தோளோடு அணைத்து வந்து சுகீர்த்தனின் காரில் அமரச் செய்தவன், அவள் இரு கண்ணங்களையும் தாங்கி,

“உனக்கு உன் குரு மேல நம்பிக்கை இருக்குல?” என்று கேட்க அவள் தலை மேலும் கீழுமாக ஆட, புன்னகையுடன் ,

“கொஞ்ச நாள் வெயிட் பண்ணுமா… அதுகப்புறம் உன் வீட்ல நானே வந்து பேசுறேன்… இந்த விஷயம் இப்போதைக்கு யாருக்கும் தெரிய வேண்டாம்மா… ப்ளீஸ் உன் குருவுக்காக. “ என்று கெஞ்சலாய் கேட்ட அவளால் அதை மறுக்க முடியவில்லை சரி என்று விட்டு அவன் தோளில் சாய்ந்து கொண்டாள் வெண்பா.

அங்கு நடப்பவை புரியாமல் பார்வையாளனாய் குழப்பத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் சுகீர்த்தன். முதல் நாள் கனடாவில் இருந்து வந்தவனிடம் ஒன்றையும் கூறாமல் கையோடு கூட்டிக் கொண்டு வந்து, “எனக்கும் வெண்பாவுக்கும் இன்னைக்கு கல்யாணம். நீ தான் சாட்சி கையெழுத்து போடனும்… ” என்று அவன் தலையில் பெரிய பாறாங்கல்லையே தூக்கிப் போட்டான் குரு.

பின்னே, குருவின் தந்தைக்கும் அவன் தந்தைக்கும் இந்த விடயம் மட்டும் தெரிந்தால் நடுவில் மாட்டிக் கொள்வது இவன் தானே. ஆனால் நண்பனின் இந்த காரியத்திற்கு பின்னால் ஏதாவது

ஓர் காரணம் இருக்கக் கூடும் இல்லையெனில் அவன் எடுத்தோம் கவுத்தோம் என்று எதையும் செய்யும் ஆளில்லை எனத் தோன்ற அவனும் ஒத்துக் கொண்டான்.

வெண்பாவின் நிலை குறித்து அவனுக்கும் கவலை தோன்ற அவளை தனியே அழைத்துப் பேசினான்.

அன்றிரவு விட்டத்தை வெறித்தபடி படுக்கையில் இருந்தவளை கலைத்தது அவளது கைப்பேசியின் ‘வைப்ரேட்’ ஒலி. படுக்கையில் படுத்திருந்தவாறே கைப்பேசியை எடுத்துக் பார்க்க அதில் குருவில் பெயர் விழவே, இத்தனை நேரம் சோகத்தில் மூழ்கியிருந்தவளது இதழ்கள் தானாக மலர அழைப்பை ஏற்றாள்.

“ஏய் மைடியர் பொண்டாட்டி… ” என்றான் உற்சாகம் பொங்கும் குரலில்…

“குரு… என்ன இந்த நேர்த்துல?” என்றாள் கிசுகிசுக் குரலில். அவள் சத்தமாக பேசி யாருக்கும் கேட்டு விடக் கூடாதே அதனால் தான் இந்த ஹஸ்கி குரல்.

அந்தக் குரல் அவனுள் பல ஹார்மோன் மாற்றங்களை விளைவிக்க, அவன் மனதில் பற்பல எண்ணங்கள் தோன்றினாலும்

சிரமப்பட்டு அதை கட்டுப்படுத்திக் கொண்டான்.

“உன்னை பார்க்கனும் வெளியே வா. உன் வீட்டுக்கு வெளியே தான் இருக்கேன்.” என்று அசால்ட்டாக அவன் கூற, மறு நொடி ஷாக் அடித்தது போல படுக்கையை விட்டும் படாரென்று எழுந்து அமர்ந்தாள்.

“குரு என்னடா சொல்ற? இங்கேயா இருக்க? என்னால இப்போ எப்படி வெளியே வர முடியும்? போ குரு நாம காலையிலே மீட் பண்ணலாம்… ” என்று பதற்றத்துடன் கூற, அவனோ அதை கேட்கும் நிலையில் இல்லை.

“நான் நாளைக்கு காலையிலேயே வேலை விஷயமாக கலம்போ (Colombo) போறேன்… எனக்கு இப்பவே உன்னை பார்க்கனும் வெளியே வா… ” என்று பிடிவதமாக இருக்க, வேறு வழியில்லாமல் எழுந்தாள்.

பெரிய சால்வை ஒன்றை எடுத்து தன் தலையோடு போர்த்தியவள், நிலத்திற்கு வலித்து விடுமோ… என்று தோன்றுமளவிற்கு ஒவ்வொரு அடியாக எடுத்து வைத்து திருட்டுப்

பூனை போல் ஹாலை கடந்து வந்து பின்பக்க கதவை மெது மெதுவாக திறந்து வெளியே வந்தாள்.

அந்த இருட்டில் குரு எங்கே இருக்கக் கூடும் கண்களை கூர்மையாக்கி சுற்றிலும் தேட, திடீரென அவள் இடையோடு பற்றியிழுத்து சுவரோடு சாய்த்தது இரு கரங்கள். அது குரு தான் என்று தெரிந்தாலும் அவன் திடீரென்று இழுத்த வேகத்தில் இதயம் தூக்கி வாரிப்போட நெஞ்சின் மத்தியில் கைவைத்து,

“டேய் லூசு... உனக்கு அறிவே இல்லையாடா? இந்த நேரத்துல வெளியே வா னு சொன்னது மட்டுமில்லாம... இப்படி எருமை மாதிரி பின்னாடி இருந்து இழுக்குறியேடா... எப்படி பயந்தேன் தெரியுமா?” என்று அவனது கைச்சந்தில் பலமாக அடிக்க, அவளது ஒவ்வொரு அடியையும் சிரித்தபடியே பெற்றுக் கொண்டான்.

“ஹேய் ஹேய் போதும்டி உங்கிட்ட இப்படி அடி வாங்குறதே என் பொழப்பா போச்சு... உங்க ஊர்ல கட்டின புருஷனை இப்படி தான் அடிப்பாங்களா?” என்று புருவமுயர்த்தி கேலியாய் வினவியபடி சிரித்துக் கொண்டே அந்த சால்வைக்குள் தானும் புகுந்து கொண்டான்.

தான் கொழும்பு செல்லும் காரணத்தை கூறி , அவளுடன் சிறிது நேரம் பேசிவிட்டு கிளம்ப எத்தனிக்க அவள் மனதில் ஏனோ ஓர் இனம் புரியாத ஓர் வலி, அதை என்னவென்று சொல்வது தெரியவில்லை அவளுக்கு.

மனம் ஏனோ படபடவென அடித்துக் கொண்டது. அவனை பார்ப்பது இதுவே கடைசி தடவையாக இருக்கக்கூடும் என அப்போதே அவள் மனதிற்கு தெரிந்திருக்குமோ… ? அவ்வாறு தெரிந்திருந்தால் போகத் தான் விட்டிருப்பாளா? அவள் சட்டையை இறுகப் பற்றியவள், அவனை நோக்கி,

“வேலையை முடிச்சிட்டு சீக்கிரம் வந்துடு குரு… உன்னை ரொம்ப மிஸ் பண்ணுவேன்… என்னை மறத்துட மாட்டேல்ல? ” என்று கலங்கிய குரலில் கூறியவளை பார்த்தவனுக்கு அவள் மேலான காதல் மேலும் பெருக, இறுக அணைத்தவன்,

“ஏய் லூசு பொண்டாட்டி… நீ என் உசுருடி உன்னை மறந்து என்னால வாழ முடியுமா? நான் அமெரிக்காவா போறேன்… இதோ இங்கேயிருந்து கலம்போக்கு மூனு மணி நேரம் தான். இதுக்கு போய் இப்படி மூக்க உறிஞ்சிட்டு இருக்க?

நான் ஒன்னும் அங்கேயே செட்டலாகிட போகலை நம்ம

ஃபியூச்சருக்கான வேலைகளை முடிச்சிட்டு என் பொண்டாட்டிய எங்கூடவே அழைச்சிட்டு போய் 24 மணிநேரமும் கூடவே வச்சிக்குறேன் போதுமா?..இப்போ சிரிமா அப்படியே ஒன்னு கொடு அதே எனர்ஜியோடு மாமா சீக்கிரமே வேலையை முடிச்சிட்டு வந்துட்றேன்… ” என்று குறும்புடன் கூற இத்தனை நேரம் மனதில் இருந்த சுணக்கம் மறைந்து, அவள் கன்னமிரண்டும் சிவக்க தலை நிமிராமல் நின்றிருந்தாள்.

ஆசையுடன் அவள் இதழ் நோக்கி குனிந்தவன் நீண்ட இதழ் முத்தத்தை வழங்க, அதில் புதையுண்டு போனாள் அவள்.

அன்றைய அழகிய காட்சி அவள் கண்முன்னே தத்ரூபமாய் தோன்ற, அவன் இல்லாத இன்றைய தனிமையில் அந்த நினைவுகள் அவளை உயிருடன் கொன்றது.

அந்த இரவில் இதழ் முத்தத்துடன் சென்றவன் தான் அதன் பிறகு அவன் திரும்பி வரவேயில்லை. பல முறை முயன்றும் அவனை தொடர்பு கொள்ள முடியவே முடியவில்லை. சுகீர்த்தனது அலைப்பேசி இலக்கமும் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் என்னவாயிற்றோ… என்று பதறினாள். அவனுக்கு எதுவும் ஆகியிருக்க கூடாது என கடவுளிடம் மன்றாடினாள். குரு வருவான் என நம்பினாள்.

இப்படியே மூன்று மாதங்கள் கடந்தன. அவள் பாட்டிற்கு கல்லூரி சென்று வந்தாள். அங்கும் குருவின் நினைவுகளே. கல்லூரி விடுமுறையில் வழங்கப்பட்டது. வெண்பாவுடன் கூடவே இந்துமதியும் கவினும் ஊருக்குச் சென்றனர்.

அவனை பற்றி யாரிடம் கேட்பது அவனை எப்படி அணுகுவதென்றே தெரியவில்லை.

ஒரு வேளை குருவின் தந்தை ஏதாவது செய்திருக்க கூடுமோ? அன்று வேதநாயகம் அவளை பார்த்த பார்வை நினைவில் வந்து அவளை கிலி கொள்ளச் செய்தது.

எப்படியோ வேதநாயகத்தின் வீட்டு தொலைபேசி இலக்கத்தை தேடிப் பெற்றுக் கொண்டாள். அவர் ஓர் முக்கிய புள்ளி என்பதால் அதை கண்டு பிடிப்பது ஒன்றும் அவ்வளவு சிரமமாக இருக்கவில்லை.

முயன்று வர வழைத்த தைரியத்துடன் வேதநாயகத்தின் வீட்டு தொலைபேசி எண்களை அழுத்தினாள். அந்தப் பக்கம் அழைப்பு எடுக்கப்பட பேசியது குருவோ வேதநாயகமோ இல்லை அந்த வீட்டு வேலைக்காரி.

“ஹலோ யாரு... ?”

“ஹ… ஹலோ அமைச்சர் வேநாயகம் வீடா?”

“ஆமாங்க நீங்க யாரு.? ஐயா இப்போ வீட்ல இல்லையே… ”

“வீட்ல யாருமே இல்லையா? எல்லாரும்… ” என்று அவள் கேட்க வந்ததை கேட்கும் பொறுமையற்ற அந்த பெண்மனி,

“குரு தம்பிக்கும் நிஷா மேடமுக்கும் நிச்சயதார்த்தம்… எல்லோரும் அங்கே போயிருக்காங்களே… “ மின்னாமல் முழங்காமல் அவள் தலையில் விழுந்தது பேரிடி.

அவள் கையிலிருந்து தானாக நழுவி விழுந்தது கைப்பேசி. குருவுக்கும் நிஷாவுக்கும் நிச்சயதார்த்தமா? அவன் மனைவி நான் இங்கே இருக்க அங்கே இன்னோருத்தியை மணப்பானா அவள் கணவன்? இல்லை இல்லை குருவால் என்னை ஏமாற்ற முடியாது என அவள் மனம் அடித்துக் கூறினாலும் பின்னே ஏன் அவன் இத்தனை காலம் தன்னுடன் பேசவில்லை?

குரு, சுகீர்த்தன் இருவரது கைப்பேசியும் அணைத்து வைக்கப்பட்டிருந்தது நினைவில் வந்தது. அப்படியானால் இத்தனை காலம் ஏமாற்றப்பட்டிருக்கிறோமா? குருவின் மீதான

நம்பிக்கை சுக்குநூறாக உடைந்தது போல அவள் மனமும் உடைந்து போனது. இலவு காத்த கிளியை போன்ற தன் நிலையை அறவே வெறுத்தாள். இதயத்தில் யாரோ சூட்டுக் கோலால் இழுத்தது போல் பச்சை ரணமாய் ஓர் வலி உண்டானது.

வாழ்க்கையில் சில தருணங்களை கடந்து செல்வது கடினம் தான். இருந்தாலும் சில காரணங்களுக்காக கடந்து சென்றேயாக வேண்டும். இதுவும் கடந்து போகும் ஆனால் எதுவும் மறந்து போகாது. சில நேரத்தில் நம் பார்வைகள் சிலதை தவறாக எடை போட்டு விடுகிறது. அந்த சில உண்மையில் நமக்குரியனவல்ல. அதை புரிந்துகொள்ள முயலும் போது வெகுவாக காலம் கடந்திருக்கும். ஏன் இப்படி நடந்தது? எதற்காக இப்படி நடந்தது? எதனால் இப்படி நடந்தது? என்ற பல கேள்விகளுக்கு விடை தெரியாமல், தலையை இரு கைகளாலும் தாங்கிய வண்ணம் “ஐயோ… !” எனக் கத்தி விட்டாள் வெண்பா.

அவள் கத்திய சத்தம் கேட்டு பதறி அவளறைக்குள் ஓடி வந்தார் வெண்பாவின் அம்மா. தலையை அழித்துப் பிடித்த வண்ணம், கண்கள் அமரந்திருந்த கோலத்தை கண்டு திகைத்தவர் அவளருகில் வந்து,

“என்னச்சுமா? ஏன் கத்தின? சொல்லுமா? காலேஜ் லீவ்

விட்டதிலிருந்து நீ ஒரு மாதிரி தான் இருக்க? உனக்கு என்னனச்சுடா? ஏன் இப்படி இருக்க? ” என்று அவர் கேட்க கேள்விகளுக்கு, “தலை வலிக்குதுமா” என்ற பதிலோடு நிறுத்திக் கொண்டாள்.

“டாக்டர் கிட்ட போகலாமா?” என்று கேட்டவர் அவள் நெற்றியை தொட்டுப் பார்த்து, “லேசா சுடுது.காய்ச்சல் மாதிரி இருக்கே வெண்பாமா... கிளம்பு டாக்டரை பார்த்துட்டு வரலாம்... ” என்று அழைத்தார்.

அதை பொருட்படுத்தாதவள் வேண்டாம் தலை வலி மாத்திரை போட்டு தூங்கினால் சரியாகி விடும். என்று கூறி விட்டு ஒரு மாத்திரையை விழுங்கியவள் அதற்கு மேல் எதுவும் பேசாமல் படுத்துக் கொண்டாள்.

வெண்பா கொஞ்ச நாட்களாக ஆளே மாறிப் போயிருந்தாள். அழுதழுது சிவந்து போன கண்கள், காய்ந்து வரண்டு போன இதழ்கள், சோகம் இழையோடும் முகம் என கழையிழந்து போயிருந்தாள் வெண்பா.

அவளது தாய்க்கும், சித்தி மாருக்கும் கூட தம் செல்ல

மகளின் தோற்றம் கண்டு உள்ளே கவலை தோன்றவாரம்பித்தது. அவளிடம் போய் ஒவ்வொருவராய் போய் “என்ன தான் உன் பிரச்சினை வெண்பா?”என்று அன்பாய் கேட்டாலும், அதட்டிக் கேட்டாலும் அவளது பதில் ஒன்று தான். மௌனமாய் இல்லையென்று தலையாட்டி விட்டு, வெறித்தப் பார்வையுடன் மீண்டும் தன் துக்க இரங்கலை துவங்கி விடுவாள்.

அவளது நிலை கண்டு இளமதி வெகுவாக கலங்கிப் போயிருந்தார். முப்பொழுதும் சோகமாய் கடத்துமளவுக்கு இவளுக்கு நேர்ந்தது என்ன? கல்லூரியில் ஏதேனும் நடந்திருக்கக் கூடுமோ? ஒரு வேளை காதல்… “ச்சேச்சே… நம்ம குட்டிம்மா இதெல்லாம் பண்ண மாட்டா? அப்படியே இருந்தாலும் அதை மறைக்கிற அளவுக்கு தைரியமில்லாத பொண்ணு இல்லையே… என்ற ஓர் சந்தேகம் கூட எட்டிப் பார்த்த மறு கணம் காணாமல் போனது.

அன்றும் இரவு தூங்காமல் தன் அறையின் ஜன்னல் வழியே வானத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு அவனை காணாத பொழுதுகள் சிரமமாக கழிந்தன.

அவள் மனதில் அப்படி என்ன சோகம்? அதை இன்று

எப்படியாவது தெரிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் அவளறைக்குள் நுழைந்தார் இளமதி. வானத்தை வெறித்த வண்ணம் அமர்ந்திருந்த வெண்பாவின் நிலை அவரை கவலை கொள்ளச் செய்ய அவளருகில் போய் அமர, அதை கூட உணராமல் இருப்பவளை என்ன செய்தால் தகும்?

“குட்டிம்மா... ” என்று தோள் தொட்டு அழைக்க ,

“என்ன சித்தி?”

“உனக்கு என்னமா கவலை? ஏன் இப்படி இருக்க? உன் மனசுல அப்படி என்ன கவலை இருக்குனு தெரியலை. ஆனால் உன்னை பார்த்தாலே தெரியுது ஏதோ மனக்குழப்பத்துல இருக்கனு... காலேஜ்ல ஏதும் பிரச்சினையா? எதுவா இருந்தாலும் சித்தி கிட்ட சொல்லுமா? என்று வருத்தத்துடன் கேட்க,

“ஒன்னுமில்லை சித்தி... ”

“இந்த ஒன்றுமில்லை எத்தனை தடவை சொல்லிட்ட ஆனா உன் மனசுல ஏதோ ஒன்னு இருக்குனு தெரியும். அதை சொல்றதால உனக்கு கஷ்டம்னா நீ சொல்லவே வேணாம். ஆனால்

எந்த கவலையும் கஷ்டமும் நிரந்தரம் இல்லை. நம்மை விடாம துரத்துர அந்த கஷ்டத்தில் இருந்து நாம தான் வெளியே வர முயற்சிக்கனும். அதிலேயே இருந்தோம்னா அந்த கவலையே நம்மை கொன்னுடும்.

எங்க கிட்ட மறைக்கிற அளவுக்கு நீ எந்த தப்பும் பண்ணியிருக்க மாட்டனு எனக்கு தெரியும். அந்த விதத்தில் உன் மேல நம்பிக்கை இருக்கு. அதனால் நீ எதுக்கும் கவலை படாதேமா… என்ன நடந்தாலும் உங்கூட உன் குடும்பம் இருக்கு. உன்னை வருத்திக்கிட்டு இருக்கிற அந்த விஷயத்தில இருந்து வெளியே வா… நமக்கு நாமே ஆறுதல் கூறும் மன தைரியம் இருந்தால் எந்த கஷ்டத்தையும் கடந்து போகலாம்… பழைய குட்டிம்மாவா நீ இருக்கனும்… ” என்று வெண்பாவின் கைகளை ஆதரவாய் பற்ற, விழியகல நோக்கியவள்,

“ஒன்றுமில்லை சித்தி. நான் நல்லா தான் இருக்கேன்… நீங்க நினைக்கிற மாதிரி எதுவும் இல்லை… நான் எப்பவும் உங்க குட்டிம்மாவா தான் இருப்பேன்” என்று முயன்று வரவழைக்கப்பட்ட புன்னகையுடன் கூற, அவளது புன்னகை தந்த மகிழ்ச்சியில் அவளை கட்டியணைத்து அவளை உறங்குமாறு கூறி விட்டுச் சென்றார்.

# என் கோடையில் மழையானவள்

விழித்திரை இரண்டும் கலங்க அத்தனை நேரம் அடக்கி வைத்திருந்த அழுகை அவளை முழுவதுமாக ஆட்கொண்டது. அவள் மீது கண்மூடித்தனமாக நம்பிக்கை வைத்திருக்கும் தன் உறவுகளை ஏமாற்றி விட்டேனே... என்ன செய்வேன்? எங்கே பிழை நேர்ந்தது? ஏன் ஏன்? என்று தன்னையே கேட்டுக் கொண்டவளுக்கு வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத ஓர் வலி தோன்ற இத்தனை நாட்களாக ஆடைக்குள் மறைத்து வைக்கப்பட்டு , அவள் நெஞ்சோடு உறவாடிக் கொண்டிருந்த தாலியை தொட்டுப் பார்த்தாள்.

அவள் நெஞ்சைப் போல அவள் விழிகளின் கீழிமைகள் துடித்தன. விழிகள் இரத்தமென சிவக்க, கண்ணீர் பெருக்கெடுத்தது. அவன் நினைவுகள் நிழலாய் துரத்த ஆற்றாமை தாங்காமல் அழுது கரைவதே அவளது தொழிலாய் ஆனது.

# அத்தியாயம் 11

“இங்கே பாரு பானு உனக்கு பிடிக்கலைங்குறதுக்காக என்னால அரசியலை விட முடியாது. அப்படி உனக்கு என்ன குறை வச்சிருக்கேன்னு சொல்லு?

“என்ன குறையில்லைனு கேளுங்க. நீங்க செய்றதெல்லாமே ரொம்ப தப்பா இருக்கு. அரசியலில் வேணும்னா இதெல்லாம் சகஜமாக இருக்கலாம் ஆனா அது நமக்கு வேணாம் தயவு செய்து இந்த அரசியலை விட்டுடுங்க… ” என்று வேதநாயகத்திடம் கெஞ்சி கொண்டிருந்தாள் அவரது மனைவி பானுப்பிரியா .

அவர் எவ்வளவு எடுத்துக் கூறியும் புரிந்து கொள்ளாமல் அரசியல் வாழ்க்கையை விட்டு விடுமாறு வற்புறுத்த அவருக்கு தன் மனைவியின் மேல் கட்டுக்கடங்கா கோபம் வந்தது. அவர் மிகவும் கஷ்டப்பட்டு அரசியலில் அடைந்திருக்கும் இந்த இடத்தை எதற்காகவும் விட்டுத் தர தயாரில்லை.

குருவின் தந்தை வேதநாயகம் பானுப்பிரியாவும் காதலிக்க, பானுப்பிரியாவின் முழு குடும்பம் அவர்களது காதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கவே வீட்டை விட்டு வெளியேறி திருமணம் செய்து

கொண்டனர். தன் மனைவி மற்றும் குழந்தையை எவ்விதத்திலும் குறைவில்லாமல் பார்த்துக் கொண்டார். பானுவிற்கு நல்ல கணவனாக குருப்பிரகாஷிற்கு நல்ல தந்தையாகவே இருந்தார்.

அப்படியே அரசியலில் குதித்து விட ஆரம்பத்தில் சிறந்த அரசியல் வாதியாகவே இருந்தார். அரசியல் மோகம் அவரை விட்டு விட வில்லை… அதனை தக்க வைத்துக் கொள்ளும் பொருட்டு சில தவறுகளையும் செய்ய ஆரம்பித்து விட அதை அவரது மனைவியால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

ஆரம்பத்தில் அன்பாய் கூறினார். கேட்கவில்லை. பிறகு சிறிது சிறிதாக சண்டை போட இன்று அது பெரிதானது.

“அரசியலை விடுவதா? நீ என்ன முட்டாளா? உளறாதே பானு… அரசியல் வாழ்க்கை இப்படி தான்… இந்த விஷயத்தில் நீ தலையிடாதே… ” என்று கறாராக கூற,

“நான் தலையிடக் கூடாதா ? இந்த அதிகாரம், சொத்து, அந்தஸ்து இருக்குனு பெருமையாக சொல்றதை விட என் கணவன் நல்லவர்னு சொல்றது தான் எனக்கு சந்தோஷம்… நீங்க தப்பு செய்வதை பார்த்து நான் சும்மா இருக்க முடியாது. இதுக்கு ஒரு முடிவு கட்டாம விடப் போறதில்லை. இந்த கேவலமான

வேலைகளை பார்ப்பதற்கு பதிலாக நீங்க ஜெயிலுக்கு போகலாம்… ” என்று அவர் ஆவேசமாக கத்த, மறுநொடி அவர் அறைந்திருத்தார்.

“என்னடீ… நானும் பார்க்குறேன் ரொம்ப கத்துற… அப்படி ஏதாவது ஐடியா இருந்தா இப்பவே மறந்துடு… இல்லை நானே உன்னை ஆக்ஸிடன்ட் செஞ்சு போட்டுத் தள்ளிட்டு அந்தப் பலியை எதிர்க்கட்சி காரர்கள் மேலே திருப்பி விட்டு அடுத்த மாத தேர்தலில் உன்னை வைத்தே அனுதாப வாக்குகள் வாங்கிடுவேன்… என்னை மிருகமாக்காதே… ” என்று அழுத்தமாக கூறியவர் அதற்கு மேலும் அங்கு நிற்காமல் சென்று விட்டார்.

தந்தையின் இந்தப் பேச்சை கேட்டு மின்சாரம் தாக்கியது போல் நின்றிருந்தான் குருப்பிரகாஷ். இத்தனை காலம் அன்பாக பேசும் பெற்றோர்களை பார்த்துப் பழகிய குருவிற்கு தந்தை தாயின் செயல் அதிர்ச்சியை அளித்ததென்றால் இறுதியாக தந்தையின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் அவனை அதிர்ச்சியின் உச்சத்திற்கே கொண்டு சென்றது.

மறுநாள் காலை பானுப்பிரியா கோயிலுக்கு சென்று திரும்பி வரும் வழியில் கார் விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே

உயிரிழந்தார். இந்தச் செய்தியை கேட்டு மயங்கி விழுந்தான் குரு.

வேதநாயகம் மனதளவில் உடைந்து போனார். அவர் கோபத்தில் சொன்னார் அதற்காக காதல் மனைவியையே கொல்லும் அளவுக்கு தரமிறங்கி விடவில்லை.

தந்தை தான் நேற்று சொன்னதை உண்மையிலேயே செய்து தன் தாயை கொன்று விட்டதாகவே கருதி தந்தையின் எல்லையற்ற கோபமும் வெறுப்பும் உருவானது. பானுப்பிரியா இறந்த செய்தியை கேட்டு வந்திருந்த தாத்தாவுடன் அவரது ஊருக்கே சென்று விட்டான்.

பத்து வருடங்களாக வேதநாயகம் இருந்த திசையே தலை வைத்து படுக்கவில்லை. அவர் உண்மையை கூற பலவாறு முயன்றும் அவரது பேச்சை கேட்க அவன் தயாரில்லை. தன் காதால் கேட்ட தந்தையின் பேச்சே அவனது வெறுப்பை மேலும் வளர்த்தது.

இதை செய்தது எதிர்கட்சி காரர்கள் தான் என்று நிரூபணமாகி விட அவர்களுக்கு தண்டனையும் வழங்கப்பட்டது. அப்போதும் அவன் தன் தந்தையை நம்புவதாய் இல்லை. அவன் தந்தையை வெறுத்தே வாழப் பழகினான்.

அன்று பல வருடங்களுக்கு முன் நடந்த சம்பவம் அவர் கண் முன் தோன்ற அவரறியாமலே அவர் கண்களில் கண்ணீர் வழிந்தது. கண்ணாடியை கழற்றி கண்களை துடைத்துக் கொண்டார் வேதநாயகம்.

“டாட்… டாட்… ” என்று கத்திக் கொண்டே அவர் முன் வந்து நின்றான் குரு.

“என்னப்பா… என்ன வேணும்”

“நிஷாவும் நானும் பொலன்னறுவை தாத்தா வீட்டுக்கு போறோம்… இப்போ அறுவடை காலம் வேற நானே போய் பார்த்துக்கனும் அப்படியே நிஷாவுக்கும் அந்த ஊரை சுத்திப் பார்த்த மாதிரி இருக்கும்… ” என்று அவன் விளக்க, சிறிது நேரம் யோசித்தவர் சம்மதம் தெரிவிக்க அவனும் நிஷாவை அழைத்துக் கொண்டு பொலன்னறுவை நோக்கி பயணம் செய்தான்.

அப்போது அவன் அறிந்திருக்க மாட்டான் இந்தப் பயணம் அவன் வாழ்க்கையில் எத்தகைய குழப்பத்தை உண்டாக்க போகிறதென்று.

அங்கு பொலன்னறுவையில தன் தந்தையின் மடியில்

படுத்திருந்தாள் வெண்பா. அவளது களையிழந்த அமைதியான தோற்றம் அவள் தந்தையை சிந்திக்க தூண்டியது.

வெண்பாவின் தாய் தந்தை பிரிந்து வாழ்ந்தாலும் அவளது கடமைகளை செய்ய இருவரும் தவறியதில்லை. அவளது தந்தைக்கு வேலை நிமித்தமாக பொலன்னறுவைக்கு மாற்றலாகி வந்திருந்தார்.

தந்தையோடு சில காலம் தங்கியிருந்து வருவதாக கூற அவளது தாய் தடுக்கவில்லை.

கடந்த ஒரு வாரமாக தந்தையின் அன்பும் அரவணைப்பும் அவளை ஓரளவு தேற்றியிருந்தது. முழுவதுமாக இல்லை. அது அவளால் முடியாததும் கூட.

ஒரு வேளை குருவின் தந்தை தான் அவனை ஏதாவது சொல்லி கட்டாயப்படுத்தியிருக்க வேண்டும்… ? கடவுளே குருவுக்கு எந்த பிரச்சினையும் இருக்கக் கூடாது… அந்த நிலையிலும் காதல் கொண்ட பெண் மனம் அவனுக்காக பிரார்த்திக்க,

காயம்பட்ட அவள் மனமோ இல்லையில்லை… அவன் என்ன சின்ன குழந்தையா கட்டாயப்படுத்தி திருமணம் செய்து வைக்க?

நாடகமாடி என்னை ஏமாற்றி விட்டான் என்றது.

“வெண்பாமா… ” என்ற தந்தையின் குரலில் சுயம் பெற்றவள்,

“ஹாங்… என்னப்பா?.” என்று கேட்டுக் கொண்டே அவர் மடியை விட்டும் எழுந்து அமர்ந்தாள்.

“நேரமாச்சு நான் கிளம்பட்டுமா? கமலா வந்ததும் உனக்கு பிடித்ததை சமைக்க சொல்லு… எங்கேயாவது போகனும்னா அவங்களை கூடவே கூட்டிட்டு போ மா… ” என்றவர் அவளிடம் விடை பெற்று கிளம்பினார்.

அன்று அவள் மனம் ஏனோ படபடத்துக் கொண்டே இருந்தது. ‘கடவுளே இருக்கும் துன்பம் போதாதென்று இன்னும் ஒன்றை தந்து விடாதே… அதை என்னால் தாங்கிக் கொள்ள முடியாது… ’ என மானசீகமாக வேண்டிக் கொண்டாள்.

பச்சை கம்பளம் விரித்தாற் போன்று எங்கும் பசுமையான வயல் வெளி. நீர் சலசலத்து ஓடும் அருவி. அருகே ஓர் சிறிய கற்பாறையின் மீது சோகச் சித்திரமாய் அமர்ந்திருந்தாள் வெண்பா.

அவளது செவிகளை தீண்டியது குருவின் அரிதான

சிரிப்பொலி. அது பிரம்மையோ… ? என்று தோன்றினாலும் அவள் உள்ளுணர்வு ஏதோ உறுத்த திரும்பி பார்த்தாள்.

ஆம் அங்கு யாருடனோ கைப்பேசியில் உரையாடியபடி சத்தமிட்டு சிர்த்த வண்ணம் வந்து கொண்டிருந்தது குருவே தான். இத்தனை நாட்களாட அவன் மீதிருந்த கோபமும் வெறுப்பும் அவனை கண்ட நொடி மாயமாய் மறைய இதயம் குத்தாட்டம் போட தாயை கண்ட குழந்தையின் உற்சாகத்துடன் அவனை நோக்கி ஓடி வந்தாள்.

குருவின் தோற்றத்தில் எத்தனை மாற்றம்? இது வரை ஓர் கல்லூரி மாணவனாக சாதாரணமான மிடில் கிளாஸ் தோற்றத்தில் காணப்பட்டவனது இன்றைய தோற்றம் அவளை வியக்க வைத்தது.

முன்பிருந்த அதே கம்பீரத் தோற்றம்… இல்லை அதை விட அதிகமாக. அந்த ஸ்லீம் பிட் டீ சர்ட்டில் முறுக்கேறித் தெரிந்த அவன் தசைகள். அதே ட்ரேட் மார்க் புன்னகை. அவனது மாநிறம் கூட சற்று வெளுத்திருந்தது. மொத்தத்தில் அவள் கண்களுக்கு ஆணழகனாகத் தெரிந்தான் அவன்.

“குரு… குரு… ” என்று மலர்ந்த முகத்துடன் அவன் முன்னே சென்று நிற்க, கைப்பேசியை காதில் வைத்த வண்ணமே திரும்பி

பார்த்தான்.

அவன் விழிகளில் அவளை போல் ஆர்வமில்லை. அவளை கண்ட மகிழ்ச்சியில்லை யார் என்பது போல் பார்த்தான். அதையெல்லாம் கண்டு கொள்ளும் நிலையில் அவள் இருக்கவில்லை.

“குரு எப்படி இருக்க? இவ்வளவு நாள் எங்கேடா போன? நீ இல்லாம எவ்வளவு துடிச்சு பேனேன் தெரியுமா ?” என்று அடுக்கடுக்காய் பல கேள்விகளை அடுக்கினாள். அப்போது கூட அவளுக்கு நிஷாவை பற்றி கேட்கத் தோன்றவில்லை. அதை அவள் மறந்தே போனாள்.

அவளது பேச்சை கேட்டு திகைத்தவன் , கைப்பேசியை அணைத்து பாக்கெட்டில் போட்டு விட்டு அவளை புரியாத பார்வை பார்க்க, அவளது பதற்றம் அதிகமானது…

“யார் நீ… ?”

"குரு… ???"அதிர்ந்தாள் வெண்பா

“ஆமா நான் குரு தான்… நீ யார்?”

‘என்னை பார்த்து நீ யார் என்று கேட்டு விட்டானே… ஐயோ என்னவாயிற்று என் குருவுக்கு… ? ஒரு வேளை தன்னுடன் விளையாடிப் பார்க்க முனைகிறானோ?’

"குரு நான் வெண்பா… விளையாடாதடா… "ஆவலாய் அவனையே பார்த்திருந்தாள்.

“எனக்கு வேற வேலை இல்லைனு நினைச்சியா உன் கூட விளையாடிக்கிட்டு இருக்க? அப்படி யாரையும் எனக்கு தெரியாது… தயவு செய்து வழியை விடு… ” என்று நகர முற்பட்டவனை கையை பிடித்து தடுத்து நிறுத்தி, அழுத்தமாக அவனை பார்த்தாள்.

“குரு நான் உன்னுடைய மனைவி… ” என்றாள்.

அவ்வளவு தான் 'பளார்" குருவின் கை அவள் கன்னத்தில் பதிந்தது. கலங்கிய விழிகளுடன் கன்னத்தை தாங்கியபடி மிரண்டு போய் அவனை பார்க்க, அவன் கண்களோ கோபத்தில் சிவந்திருந்தன.

“ச்சீ… என்ன மாதிரி பெண் நீ? இப்படி ரோட்ல போறவன் கையை பிடித்து இந்த மாதிரி கீழ்த்தரமாக நடந்துக்குற… இதுல நீ

என் மனைவினு சொல்ல உனக்கு எந்தளவு தைரியம் இருக்கனும்? இப்போதெல்லாம் பணத்துக்காக பட்டப்பகல்லேயே இந்த மாதிரி வேலையெல்லாம் செய்ய ஆரம்பிச்சிட்டீங்களா?" என்று கேட்டு அவள் மீது கேவலமான ஓர் பார்வை வீசினான்.

அவ்வளவு தான் அவள் மனம் உடைந்தாள். அடித்தது கூட வலிக்கவில்லை. குருவின் வார்த்தைகள் கூரிய அம்புகளாய் அவளுடைய இதயத்தை துளைத்தன. கழுத்தில் கிடந்த மஞ்சள் கயிறு இரும்புக் குண்டாய் கணக்க, எதிர்பாராத அந்த சூழ்நிலையை எப்படி எதிர்கொள்வது எனத் தெரியாமல் தவித்தாள் வெண்பா.

"ஹேய் ஹனி யார் கூட பேசிக்கிட்டு இருக்க?" என்று கொண்டே ஒயிலாக நடந்து அவன் அருகே வந்து நின்ற அல்ட்ரா மாடர்ன் பெண் ஒருத்தி அவன் கையோடு தன் கையை கோர்த்து நின்றாள்.

"தெரியாது நிஷா… இந்த மேடமுக்கு நான் புருஷனாம்… " அந்த புருஷன் என்ற வார்த்தையில் அழுத்தம் கொடுத்து எள்ளலாய் கூற,

“வாட்… ” என்று பொய்யாய் அதிர்ந்தவள், ஹாஹா என்று வாய் விட்டு நகைத்தாள்.

“குரு என்னை தான் கல்யாணம் பண்ணிக்க போறான். நிச்சயதார்த்தமே நடந்துருச்சி… இதுல உன் புருஷானாம்… வாட் அ ஜோக்… ? மீண்டும் அதே சிரிப்பு.

“பணக்காரப் பையன் ஒருத்தன் கண்ணுல பட்டுட கூடாதே. அப்படியே அவனை வளைச்சு போட்டுக்க பார்ப்பீங்களே. உன்னை மாதிரி ஆட்களுக்கெல்லாம் உன்னை மாதிரி அலையுற கேஸ் இருப்பாங்க அப்படி ஒருத்தனை ட்ரை பண்ணு… ” என்று அவளை அருவருப்பான ஓர் பார்வை பார்த்து வைத்தாள்.

அவளது வாத்தைகளில் எரிமலையின் அடிவாரத்தில் நிற்பது போல் தகித்தது அவளுக்கு. அந்த அருவருப்பான பார்வையில் அவர்கள் முன் ஆடையில்லாமல் நிற்பது போல் உடல் கூச குருவை ஏறிட்டு பார்த்தவள், அதற்கு மேலும் தாங்க மாட்டாமல் அழுது கொண்டே ஓடினாள்.

# அத்தியாயம் 12

அன்றைய சம்பவத்திற்கு பிறகு அவன் தான் நிம்மதியின்றி தவிக்கலானான். கலங்கிய விழி வழியே அவள் பார்த்த பார்வையில் என்ன இருந்ததென அவனால் கணிக்க முடியவில்லை ஆனால் அந்த கண்களில் பொய்யில்லை என்பது தெளிவாய் தெரிந்தது.

பின்னே எப்படி அவள் என் மனைவி என்பாள்? எவ்வாறாயினும் அவளை கீழ்த்தரமான பெண்ணாக மாத்திரம் எண்ண முடியவில்லை. அந்தப் பார்வை அவனை பலவாறு சிந்திக்கத் தூண்டியது.

அதன் பின் இரு வெவ்வேறு சந்தர்ப்பங்களில் அவளை காண நேர்ந்தது. ஒரு முறை கோவில் தூணில் கண்கள் மூடி சோகமாய் சாய்ந்தமர்ந்திருந்தவளை கண்டான். அன்று அவளை அப்படிப் பேசயிருக்கக் கூடாதோ? என அவளுக்காக அவன் மனம் அவனையே குற்றம் சாட்ட உடனே அங்கிருந்து விரைந்து சென்றான்.

மீண்டும் ஒரு நாள்...

அன்று வீதியில் தனியாக நடந்து சென்று கொண்டிருந்தாள் வெண்பா. அவள் மனம் ரணமாய் வலித்தது. அவன் சொன்னதும் சரிதானே... அவன் பலமுறை வேண்டாமென்று துரத்தியும், வலியச் சென்று காதல் செய்தது நான் தானே.

தேடித் தேடிச் போய் கொட்டிய அன்பு குப்பையை விட கேவலமானதாகி விடுகிறது.அன்று நிஷா உரிமையாய் அவன் கை கோர்த்து நின்ற போது அவள் மனம் பட்டபாடு அவளுக்குத் தானே தெரியும். உரிமை உண்டு எனினும் நமக்கு மதிப்பு இல்லையே என ஒதுங்கி இருக்க வேண்டியுள்ளது.

அழுதழுது கண்களில் கண்ணீரும் வற்றி விட்டது. மறத்துப் போனது அவள் இதயம். என்ன தான் முயன்றும் அவளால் அவன் நினைவுகளை மறக்க முடியவில்லை. அவன் இல்லாத ஒவ்வொரு நொடியும் யுகமாய் தோன்றியது.எதிர்காலம் அவள் கண்முன் தோன்றி கோரமாய் சிரித்தது.

என் ஒருத்தியின் சுயநலத்திற்காக என் மேல் நம்பிக்கை வைத்திருக்கும் குடும்பத்தையே ஏமாற்றி விட்டேனே... இது மட்டும் அவர்களுக்குத் தெரிந்தால்... ? இல்லை இது தெரியவே கூடாது... இது என்னுடனே போகட்டும் என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டவள் வழிந்திருந்த கண்ணீரை புறங்கையால்

துடைத்து விட்டாள்.

அடுத்து அவள் செய்ய வேண்டியதை முடிவு செய்தாள். ஆம் இந்த பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரே தீர்வு தான் உயிரை விட்டு விடுவது தான்.

மறுகணமே அதை செயலாற்ற எண்ணியவள் சுற்றும் முற்றும் நோட்டம் விட்டாள். தூரத்தில் அசுர வேகத்தில் வரும் பெரிய லாரியை கண்டவள் சிறிதும் யோசிக்காமல் அதை நோக்கி ஓடலானாள்.

இதோ நெருங்குகிறது. உன்னை உயிராய் உருகி காதலித்த பாவத்திற்காக என் உயிரையே விட்டு விடப் போகிறேன். இன்னும் கொஞ்சம் தான் நெருங்கி விட்டது. அந்த வேகத்தில் மோதினால் நிச்சயம் உடலில் உயிர் எஞ்சாது.

இன்னும் சில நொடிகளில் பேரிரைச்சலோடு வரும் லாரி அவளை மோதி தூக்கி வீசப் போகிறது. கண்களை இறுக மூடிக் கொண்டாள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவள் இடையை பற்றி யாரோ இழுக்க, இழுத்த வேகத்தில் கண்கள் மங்கி நிலை தடுமாறி அவன் மீதே மயங்கி சரிந்தாள். தரையில் அவன் இருக்க அவன்

நெஞ்சின் மீது பூமாலையாய் வீழ்ந்திருந்தாள் வெண்பா.

கடையொன்றினுள் இருந்து வெளியே வந்தவன் கண்ட காட்சியில் அதிர்ந்தவன் யாரென கூட பார்க்கத் தோன்றாது மின்னல் வேகத்தில் அவள் அருகே ஓடிச் சென்று சாலையை விட்டும் இழுக்க அவன் மீதே சரிந்தாள்.

அப்போது தான் அவளை முதல் முறையாக மிக நெருக்கத்தில் பார்க்கிறான். அதற்குள் கூட்டம் கூடி விட அவளை அப்படியே விட்டுச் செல்லவும் மனமின்றி தன்னிரு கைகளிலும் ஏந்திச் சென்று காரில் கிடத்தினான்.

அதிர்ச்சியில் ஏற்பட்ட சாதாரண மயக்கம் தான் எனவே தண்ணீரை முகத்தில் தெளிக்க சிறிது சிறிதாக மயக்கமும் தெளியவாரம்பித்தது. தனக்கு மிக அருகில் இருந்த குருவை கண்டு உதடுகள் மலர்ந்தவளுக்கு நிதர்சனம் உரைக்க மலர்ந்த வேகத்தில் முகம் வாடியும் போனது.

அவளது முகம் வாடியதும் அவன் உள்ளமும் வாட அது ஏனென்று அவனுக்கே புரியவில்லை.

“ரோட்ல நடக்கும் போது பார்த்து நடக்கமாட்டியா? அப்படி எந்த கோட்டையை பிடிக்க இந்த ஓட்டம்?” கடிந்து கொண்டான்

அவன்.

தலையை உயர்த்தி அவனை பார்த்தாள் அவள். அந்தப் பார்வையில் ஜீவனில்லை.

“செத்துப் போகலாம்னு தான்… ” என்றாள் சுர்த்தையற்ற குரலில்.

“வாட்… ?” அவன் முகத்தில் அப்பட்டமான அதிர்ச்சி தெரிந்தது. “செத்துப் போற அளவுக்கு உனக்கு என்ன பிரச்சினை?”

“நீ தான்… ”

“நானா? என்ன சொல்ற?”

“ஏன் குரு இப்படி செஞ்ச? உன்னை எப்படி எல்லாம் காதலிச்சேன்… நீ தானே கல்யாணம் பண்ணிக்கலாம்னு சொல்லி கல்யாணமும் பண்ணிக்கிட்ட. நான் என்ன தப்பு செஞ்சேன்… இப்போ ஏன் என்னை விட்டு விலகி போற… ? நீ இல்லாத வாழ்க்கையை என்னால வாழ முடியாது குரு… வாழவே முடியாது… நீ சொன்ன மாதிரி நான் அலையுற பொண்ணு இல்லை

குரு… ” என்று கூறி முடிக்கும் போதே அவள் குரல் உடைந்து அழ, அன்று போல் அவனால் அவள் மேல் கோபம் கொள்ள முடியவில்லை.

அவளது கண்ணீர் அவனை வாயடைக்கச் செய்தது. அன்று அவளை பார்த்து அவன் பேசிய வார்த்தைகளை அவள் வாயால் கேட்கும் போது ஓர் இனம் புரியாத வேதனை அவனை ஆட்கொண்டது.

“குரு இது நீ கட்டின தாலி தான்… ” என்று அழுகையினூடே அவள் தாலியை காட்ட ஏகத்துக்கும் அதிர்ந்து போனான். இந்த பெண் என்ன மனநிலை சரியில்லாதவளா? முன் பின் அறியாத பெண்ணொருந்தி அவள் கழுத்தில் இருக்கும் தாலியை காட்டி இப்படி கூறினால் அவளை வேறு எப்படி நினைக்கத் தோன்றும்? இத்தனை நேரம் அவளுக்காக இரங்கிய மனம் இந்த தாலி விஷயத்தில் சிறிது ஆட்டம் கண்டது.

“வெண்பா… உனக்கு என்ன பிரச்சினைனு எனக்கு தெரியாது. ஆனால் தற்கொலை முட்டாள் தனமானது… இதுக்கு முன்னாடி உன்னை நான் பார்த்ததே இல்லை அப்படியிருக்க எப்படி இது சாத்தியம்? இதற்கு மேலும் இந்த மாதிரி சொல்லிக்கிட்டு

இருக்காதே. அப்புறம் மனுஷனா இருக்க மாட்டேன்... ” என்று அடக்கப்பட்ட கோபத்துடன் கூறியவன், வீடு செல்லும் வழியை மாத்திரம் கேட்டு விட்டு அவள் புறம் திரும்பமாலே காரை செலுத்தினான்.

கார் அவளது வீட்டை அடையும் வரை இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அவளது பேச்சில் அவள் மீது கொலை வெறி வந்தாலும் எப்படியோ போ என அவனால் விட்டு வர முடியவில்லை.

அவளது வீடு வந்ததும் அவளை இறக்கி விட, இறங்கியவளது நடையில் சிறு தள்ளாட்டம் தென்பட அவள் தோளோடு கையிட்டு தாங்கிய வண்ணம் அவளை வீட்டினுள் அழைத்துச் செல்லும் வரை மௌனமாகவே இருந்தாள்.

வீட்டின் வரவேற்பறையில் சோபாவில் அவளை அமர வைக்க, அவனது கையை இறுக பற்றியவள் அவனை நோக்கி,

“குரு நிஜமாகவே என்னை யார்னு தெரியலையா?” அடிபட்ட குரலில் கேட்டவள், அவன் மார்பில் முகம் புதைத்து அழ, அவனால் அவளை விலக்கித் தள்ள முடியவில்லை. பெண்ணவளின் கண்ணீர் அவனுள்ளத்தை வலிக்கச் செய்ய

ஆறுதலாய் அவள் தலையை கோத,

அவள் விசும்பல் சத்தத்தில் தன்னுணர்வு பெற்றவன், தான் என்ன செய்து கொண்டிருக்கிறோம் ? என்று தன் மீதே கோபம் கொண்டவன் அவளை தள்ளி விட்டு எழ, புரியாமல் தலையுயர்த்தி அவனை பார்த்தாள்.

“என்னை விட்டு போயிடாதே குரு… செத்து போய் விடுவேன்… ” என்று குரல் தழுதழுக்க கூறியவள், அவன் விழிகளை நோக்க,

அப் பார்வையில் அவன் இதயம் சில்லு சில்லாய் உடைய, அவள் பார்வையை தாங்கிக் கொள்ளும் திராணியற்றவனாய், ஒரு நொடி கூட தாமதிக்காமல் அவ்விடம் விட்டு நகர்ந்தான். இல்லை ஓடினான்.

கடைசியாக அவள் சொன்ன வார்த்தை, அவன் உயிர் வரை சென்று தாக்க, அன்றே நிஷாவை அழைத்துக் கொண்டு கொழும்பு வந்து விட்டான். அதற்கு முன் வெண்பாவின் தந்தையை சந்தித்துப் பேச மறக்கவில்லை.

அவளை பார்க்க முடியாமல் ஓடி வந்து விட்டான் தான் ஆனால் அன்று முதல் அவன் தூக்கம் தொலைந்தது. நிம்மதி

வெகு தூரமானது போன்ற உணர்வு.

யாரென்றே தெரியாத ஒருத்திக்காக அவன் இப்படி இருக்கத் தேவையே இல்லை. பின்னர் ஏன் தான் இப்படி நடந்து கொள்கிறோம்? தன்னை கணவன் என்றதற்காக ஆரம்பத்தில் கோபப்பட்ட அவனால் அதன் பிறகு ஏன் கோபப்பட முடியாமல் போயிற்று?

ஒரு பெண்ணால் ஒருவனை இப்படியும் காதலிக்க முடியுமா… ? எப்பேற்பட்ட காதல் அது.

அவள் இந்நேரம் அழுது கொண்டு இருக்கிறாளோ. .? அல்லது மீண்டும் தற்கொலைக்கு ஏதும் முயற்சி செய்திருக்கக் கூடுமோ… ? அவளை எண்ணி மனம் கலங்க, முப்பொழுதும் அவள் கற்பனையில் .

ஒருத்தியை மனதில் வைத்துக் கொண்டு வேறொருத்தியின் பிரிவில் மனம் வாடும் விந்தையை குரு அப்போது அனுபவித்தான்.

நிஷாவை காதலித்த மனதில் ஏன் இந்தத் துயரம் வருகின்றது?

**ஆயிரம் வாசல் இதயம்…**

**அதில் ஆயிரம் எண்ணங்கள் உதயம்...**

**யாரோ வருவார்... யாரு போவார்...**

**வருவதும் போவதும் தெரியாது...**

**ஒருவர் மட்டும் குடியிருந்தால்...**

**துயரம் ஏதுமில்லை...**

**ஒன்றிருக்க... ஒன்று வந்தால்...**

**என்றும் அமைதியில்லை...**

அவன் மனதை படித்தது போல... பின்னனியில் கண்ணதாசனின் பாடல் ஒலிப்பது போன்ற பிரம்மை ஏற்பட தலையை தாங்கிய வண்ணம் அப்படியே அமர்ந்து விட்டான்.

அவன் இப்படி தன்னை எண்ணி குழம்பிக் கொண்டிருந்த நேரம், அவன் முதுகோடு கட்டிக் கொண்டாள் நிஷா. அவளது இந்த திடீர் அணைப்பில் கடுப்படைந்தவன் திரும்பி அவளை தள்ளி விட்டு எழ,

"என்னாச்சு குரு? ஏன் தள்ளி விட்ட?" என்ற அவளது கேள்விக்கு பதில் கூறாமல் திரும்பி நடக்க முனைந்தவனை

தடுத்து நிறுத்தியவள்,

“ஊருக்கு போய் வந்ததிலிருந்து நீ இப்படி தான் இருக்க… இதுக்கெல்லாம் காரணம் அந்த ப்ளடி ***** தான்… ” என்று கோபத்தில் நா கூசாமல் ஓர் கேட்ட வார்த்தையை கூறி முடிக்கும் போதே அவள் கண்களில் பூச்சி பறந்தது. குரு அறைந்திருந்தான்.

“நீயும் ஒரு பொண்ணா? இன்னொரு பெண்ணை இப்படியும் பேச முடியுமா? ச்சே இதுக்கு மேல அவளை பத்தி ஒரு பேசுன… உன்னை என்ன பண்ணுவேனு எனக்கே தெரியாது… கெட் லாஸ்ட்… ” என்று கழுத்து நரம்புகளை புடைக்க கத்த, சீறும் சிறுத்தையை ஒத்த அவனை கண்டு மிரண்டு விழித்தவள் நடை தள்ளாட அறையை விட்டும் வெளியேறினாள்.

‘ நிஷாவிடம் நான் ஏன் அப்படி நடந்து கொண்டேன்? ஐயோ அம்மா எனக்கு ஏன் இந்த சோதனை?’ தலையணையை விசிறி அடித்தவன், நீண்ட பெருமூச்செறிந்தவாறு நிஷாவை சமாதானம் செய்யும் நோக்குடன் அறையை விட்டு வெளியே வந்தவனது கைப்பேசி சிணுங்க அதை எடுத்துப் பார்த்தவனுக்கு என்னமோ ஏதோ மனம் பதற அழைப்பை ஏற்றான்.

“ஹலோ சார்... என்னாச்சு... ? அவரது பதற்றம் அவனை தொற்றிக் கொண்டது.

“வாட்... ??? வெண்பாவை காணவில்லையா?” சுவாசம் தடைபட, எத நிஷாவின் நினைவு சிறிதும் காரை நோக்கி ஓடினான். மறு கணம் அவன் கைகளில் கார் காற்றை விட வேகமாய், பொலன்னறுவை நோக்கி புறப்பட்டது.

# அத்தியாயம் 13

கொழும்பு வந்ததிலிருந்து வெண்பாவின் நினைவிலேயே இருந்தவனுக்கு மீண்டும் தற்கொலைக்கு முயலக் கூடுமோ என்ற சந்தேகம் வலுக்க அவளை கண்காணிக்கவென ஓர் ஆளை நியமித்திருந்தான்.

அவள் அவ்வாறு எந்த முயற்சியும் செய்யாது சாதாரணமாக இருப்பதாக தகவல் கிடைத்த பிறகே தினமும் அவனால் நிம்மதியாக உறங்க முடிந்தது. இன்று அவளை கண்காணிக்க நியமிக்கப்பட்டிருந்த ஆளான சுமன் அவனை தொடர்பு கொண்டு கூறிய விடயம் அவனை அதிர்ச்சியிடையச் செய்தது.

அதாவது வெண்பா கடத்தப்பட்டாள். தனியாளாக அந்த இடத்தில் இருந்த சுமனால் அப்போதைக்கு ஒன்றும் செய்ய முடியாத நிலை. உடனே குருவுக்கு அழைப்பெடுத்து கூற, அவனது உத்தரவின்படி தன் சகாக்கள் சிலரை அழைத்து தயார் செய்தான்.

அரிசி குடோன் ஒன்றில் கைகளிரண்டும் பின்னால் கட்டப்பட்ட நிலையில் நாற்டாலியொன்றல் அமர வைக்கப்பட்டிருந்தாள் வெண்பா.

அறை எங்கிலும் கும்மிருட்டு. பயத்தில் உடல் வியர்க்க, உதடுகள் நடுங்கியது. கண்ணுக்கு எட்டிய தூரம் வரை இருண்டு அவளை பயமுறுத்தியது. தன் பலம் கொண்ட மட்டும் இழுத்து கட்டை அவிழ்க்க முயன்றாள் முடியவில்லை.

“ஹலோ… யாராவது இருக்கீங்களா? ப்ளீஸ் ஹெல்ப் மீ… ” என்று கத்தவாரம்பிக்க, அந்த அறைக் கதவு படாரென திறக்கப்பட்டு அவ்வறையின் விளக்குகள் ஒளிர விடப்பட, இதயம் வேகமாய் அடித்துக் கொள்ள தலை நிமிர்ந்து பார்த்தாள்.

அது அவள் தானே? அவளே தான் நிஷா. அவள் உதடுகள் தானாக அவள் பெயரை உச்சரிக்க, ஓர் இடிச் சிரிப்புடன் அவளை நெருங்கி வந்தாள் அவள்.

அவள் அமர வைக்கப்பட்டிருந்த நாற்காலியை ஓர் சுற்று சுற்றி விட்டு அவள் முகத்தை கூர்ந்து, வெண்பாவின் விழிகள் பயத்தில் விரிய, அருகே வந்து பளார் என அறைய “அம்மா… ” என அலறியவளது கன்னம் திகுதிகுவென எரிந்தது.

“இன்னைக்கு உன்னால என்னை அடிச்சிட்டான் அந்த குரு… எல்லாம் உன்னால தான்டீ… ”

“என்னடீ அப்படி பார்க்குற… நான் நிஷாவே தான். உன் குருவை கல்யாணம் பண்ணிக்க போற நிஷா… நீ யார்னு தெரியாம வாழும் ஓர் லூசுப் பையன் அவன் ” என்றும் மீண்டும் சிரித்துக் கொண்டே அவள் தாடையை அழுந்தப் பற்ற, நிஷாவின் முகம் மிகக் கொடூரமாக காட்சி தந்தது.

அவள் பற்றிய இடம் வேறு அவளுக்கு வேதனையை தர, மிரண்டு போனவளாய் அவளை பார்த்துக் கொண்டிருந்தாள்.

“என்னடீ… உன்னை ஏன் இங்கே கடத்திட்டு வந்து இருக்கேன்னு தெரியாம குழம்பிப் போயிருக்கியா?” என்று நிதானமாக கேட்க, வெண்பாவின் தலை ஆம் என்பது போல் மேலும் கீழுமாக ஆடியது.

“ஏன்னா நான் உன்னை கொல்ல போறேன்… இன்னும் கொஞ்ச நேரத்தில் நீ சாகப் போற… ” என்று கூற அதிர்ந்து விழித்தாள் அவள்.

“பயப்படாதே ஏன் சாகப் போறனு உனக்கு தெளிவா சொல்றேன். இவ்வளவு நாள் நீ ஒரு பைத்தியக்காரி எதை

தேடினாயோ அதுக்கான பதில் உனக்கு இப்போ சொல்லப் போறேன் கேட்டுக் கோ... ” என்று அவள் கூற சட்டென தலையுயர்த்தி அவளை புரியாத பார்வை பார்க்க,

“ஹேய் பேபி... அப்படி பார்க்காதே உண்மை தெரிஞ்சிக்கிட்டு சந்தோஷமாக செத்துப் போ அப்போ தான் உன் ஆத்மா சாந்தியடையும்... ” என்றவள் கூறவாரம்பித்தாள்.

அன்று குருவும் சுகீர்த்தனும் அவனது காரில் கண்டியிலிருந்து கொழும்பை நோக்கி பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது எதிர்பாராத விதமாக அவ்வழியே வந்த பெரிய கண்டெய்னர் லாரி ஒன்று மிக வேகமாக அவர்களை நோக்கி வர அதை உணர்ந்தவன் நொடியில் சுதாரித்து திருப்ப முனைய அதற்குள் ஒரு பக்கத்தை மோதிய வேகத்தில் குரு தூக்கி வீசப்பட்டான்.

அவன் தலை ஓர் கல்லில் மோத அப்படியே மயக்கமடைந்தான். அந்த விபத்தில் சுகீர்த்தனுக்கு பலத்த அடி. இருவரும் மருத்துவமனையில் அவனுமதிக்கப்பட்டனர்.

சுகீர்த்தனது இடுப்புப் பகுதியில் பலமான அடி. அவனது பெற்றோர் மேலதிக சிகிச்சைக்காக கனடா அழைத்துச் சென்றனர்.

குருவிற்கு தலையில் பட்ட அடியின் காரணமாக மூன்று மாதங்கள் தன்னை மறந்த நிலையில் கோமாவில் இருந்தான்.

நினைவு திரும்பி எழுந்தவனுக்கு அந்த விபத்துக்கு முன் நடந்த எதுவுமே ஞாபகத்தில் இல்லை. அவனது தாத்தாவின் இறப்பை கூட மறந்திருந்தான். பழைய கோபம், வெறுப்பு எதுவுமின்றி சகஜமாக உரையாட குருவின் தந்தைக்கு அதுவே போதுமாயிருந்தது.

இந்த நிலையை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்த நினைத்த நிஷாவும் அவளது தந்தையும் வேதநாயகத்திடம் பேச, குருவும் நிஷாவுடனான திருமணத்திற்கு சம்மதித்தான்.

“நீயும் குருவும் காதலிச்சது எல்லாம் எங்களுக்கு தெரியும். முதலில் அந்த வேதநாயகம் இதுக்கு ஒத்துக்கலை குரு உன்னை லவ் பண்றான்னு என்னை வேணாம்னு சொல்லிட்டான் அவன் அந்தக் கோவத்துல நான் தான் குருவை ஆக்ஸிடன்ட் செஞ்சு கொல்ல சொன்னேன். ஆனால் பயபுள்ள தப்பிச்சிட்டான் என்ன பழசை எல்லாம் மறந்து லூசாகிட்டான் இதையே எனக்கு சாதகமாக பயன்படுத்திக்கிட்டேன்.” அவள் கூற, வெண்பாவுக்கு அதிர்ச்சி தான் குருவுக்கு கடந்த காலம் மறந்து விட்டதா?

அந்த விபத்தில் அவன் உயிருக்கு ஏதாவது நடந்திருந்தால்… ராட்சசி ஒரு பெண்ணால் இப்படியும் செய்ய முடியுமா? தன்னவனின் நிலையை எண்ணி கண்ணீர் உகுத்தாள் பெண்ணவள்.

அவளே தொடர்ந்து, "இதுல என்ன ட்விஸ்ட்னா அவன் உன்னை கல்யாணம் பண்ணி இருக்க விஷயம் மட்டும் தான் எங்களுக்கு தெரியலை. நீ சொன்னப்போ எனக்கே கொஞ்சம் அதிர்ச்சி தான்.

அந்த ஆக்ஸிடன்டுக்கு முன்னாடி ஒரு தடவை கலம்போ வந்தான்ல. அப்போ வேதநாயகம் என்னை கல்யாணம் பண்ணிக்க சொல்லி மிரட்டி இருக்காரு. அவன் நீ தான்னு முடிவா சொல்லிட்டு வந்து இருக்கான். அதுக்கப்புறம் தான் உன்னை ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணி இருக்கான் ரைட் ?" என்று அவளை பார்க்க,

அவளுக்கு அப்போது எல்லாம் புரிந்தது. அதனால் தான் அன்று அவ்வளவு அவசரமாக திருமணம் செய்து கொண்டானா? தன் மீதான அவனது காதலை எண்ணி உள்ளம் மகிழ, காதலும் பெருக, ஓர் நமட்டுப் புன்னகையுடன் அவளை ஏறிட்டாள்.

"குருவுக்கு இதெல்லாம் தெரிஞ்சா உன்னை சும்மா விடுவான்னு நினைச்சியா? நீ என்னை கொன்றால் கூட அவனோட

ஆழ் மனசுல இருக்க என் மீதான காதலை யாராலும் மாற்ற முடியாது… ” என்று உறுதியான குரலில் கூற, நிஷாவின் கோபம் அதிகரிக்க,

அவளை கொன்று விடும் வெறியில் கீழே கிடந்த இரும்புக் கம்பியை எடுத்து அவள் தலையை குறி பார்த்து ஓங்க, அதே நேரம் அந்த குடோனின் கதவு பாரிய சத்தத்துடன் திறக்கப்பட அவளது கை தானாக நின்றது. புயலென உள் நுழைந்தான் குரு. அவனை தொடர்ந்து சில பேர். எதிர்பாராத குருவின் வருகையினால் பெண்கள் இருவரும் திகைத்து நிற்க,

அங்கு அவன் கண்ட காட்சியில் இதயம் தாறுமாறாக துடிக்க, கை முஷ்டி இறுக, “நிஷா… ” என்ற உறுமலுடன் வேக எட்டுக்களுடன் அவளை நெருங்க, அவளுக்கோ அவன் தன்னை நெருங்குவதற்குள் அவளை கொன்று விடும் வேகம்.

மீண்டும் பலமாக அடிக்க ஓங்க, “நோ… ” என்ற கத்தலுடன் வெண்பாவுக்கும் நிஷாவுக்கும் இடையே புகுந்தவனது தலையை பதம் பார்த்தது அந்த இரும்புக்கம்பி.

உலகமே தலை குழாய் சுழல, கண்கள் மங்க,இரு கைகளாலும் தலையை தாங்கிய வண்ணம் நிலத்தில் சரிந்தான்

குரு.

“குரூ… ” என்ற அவளது அலறலில் அந்த ஊரே அதிர்ந்திருக்கும்.

அவனை தொடர்ந்து வந்த குருவின் ஆட்கள் நிஷாவையும் கடத்தலுக்கு உடந்தையானவர்களையும் பிடித்துக் கொண்டனர்.

☆☆☆☆☆

“டேய் சுகீ ஃபீல் பண்ணாதடா… நீ சீக்கிரம் எழுந்து நடக்க தான் போற. அப்புறம் உனக்கு சரக்கு வாங்கி தந்து உன் வாயாலேயே உன் ஹிட்லரை திட்ட வைக்கிறேனா இல்லையானு பாரு… ” என்று அவன் மனநிலையை மாற்ற எண்ணி கேலியாய் சிரிக்க , அவனும் மனம் விட்டு சிரித்தான்.

“தேங்க்ஸ்டா… நீ வந்தா மனசுக்கு ரொம்ப ரிலாக்ஸா இருக்கு… இப்படி நடக்க முடியாம ஒரே ரூம்ல அடைஞ்சி கிடக்கிறது ரொம்ப கஷ்டம் டா… ” என மனமுருகிய நண்பனை அணைத்தவன்,

“அதான் மச்சி சீக்கிரம் நீ திவ்யாவை கல்யாணம் பண்ணிக்கோ… ” கூலாக கூறினான் குரு.

“முட்டாள் மாதிரி பேசாதேடா… இப்போ நான் இருக்கும் நிலைமையில் கல்யாணம் ரொம்ப முக்கியம்… அவளை நான் உயிராக நேசிக்கிறேன்டா… அவ வேற யாரையாவது கல்யாணம் செய்துகிட்டு சந்தோஷமா இருக்கட்டும்… ” என்றான் வேதனை குரலில்.

“நீங்க நினைக்கிற மாதிரி எல்லாம் என் மனசை மாத்திக்க முடியாது சுகீர்த்தன். உங்க மனசுல நான் இருக்கேன்னு தெரிஞ்சு போச்சு… நீங்க எப்படி இருந்தாலும் உங்களை தான் காதலிப்பேன்… ” என்று கூறிக் கொண்டே அவனது அறையினுள் நுழைந்த திவ்யாவை அதிரந்து நோக்க, குருவோ பற்கள் பளீரிட சிரிக்க இது அவனது வேலை என புரிந்தது அவனுக்கு.

திவ்யா வேறு யாருமல்ல. வெண்பாவின் தோழி தான். அப்போதே இருவருள்ளும் காதல் இருந்தாலும் கூறிக் கொள்ளவில்லை. விபத்துக்கு பின்னான இவனது நிலையறிந்து அவனை விடாமல் சுற்றிக் கொண்டிருக்கிறாள் திவ்யா.

“குரு… இது உன் வேலை தானா… ?” என்று அவனை முறைக்க, அதை கண்டு கொள்ளாதவன்,

“தங்கச்சி இனி உன் டர்ன்மா… வீட்ல வெண்பா எனக்காக வெயிட் பண்ணிக்கிட்டு இருப்பா… அப்போ தான் கிளம்புறேன்… ” என்று புன்னகையுடனே வெளியேறினான்.

“திவ்யா நீ வீட்டுக்கு போ… ” எங்கேயோ பார்வையை பதித்தபடி அவன் கூற,

“ஏன் சுகீ… ? இனியும் நான் உங்களை பிரிந்து இருக்க மாட்டேன். இது தான் என் முடிவு… ” அவனருகில் வந்து அமர்ந்து அவன் முகத்தை அவள் புறம் திருப்ப, இருவர் பார்வைகளும் ஒன்றோடொன்று கலக்க, அவனை கட்டியணைக்க அந்த அணைப்பில் கரைந்தான் அவன்.

போர்டிகோவில் தனது பைக்கை நிறுத்தியவன் அவசரமாக உள்ளே நுழைந்தான். ஹாலில் சோபாவில் அமர்ந்திருந்த வேதநாயகம் அவனது வேகத்தை எண்ணி சிரித்துக் கொண்டார்.

“டாட் வெண்பா சாப்பிட்டாளா?” என்று கேட்க,

"இல்லையேப்பா... நீ வந்ததும் சாப்பிடறேன்னு சொல்லிட்டா... நீ என்னடான்னா பத்து மணிக்கு வர்ற... பிள்ளை தாச்சி பொண்ணு ரொம்ப நேரம் பசியில இருக்க கூடாது குரு... போ சீக்கிரம் என் மருமகளை சாப்பிட வை... " என்று அவனை அதட்டும் குரலில் விரட்டினார்.

நினைவு தெளிந்த பின் மீண்டும் தந்தையுடன் தன் கோபத்தை காட்ட ஆரம்பித்தவன் தன் காதல் மனைவியின் "குரு உங்க அப்பா மேல எந்த தவறும் இல்லை... அவர் கூட மனம் விட்டு பேசுங்க உங்களுக்கு புரியும்... " என்ற ஒற்றை வார்த்தைக்காக தன் தந்தையிடம் மனம் திறந்து பேச உண்மையை அறிந்து கொண்டவன் இத்தனை ஆண்டுகள் தந்தையை புரிந்து கொள்ளாமல் பிரிந்திருந்ததற்காக வருந்தினான். இதனாலேயே வேதநாயகத்திற்கு மருமகளின் மேல் அலாதி பிரியம்.

தன் மனைவி இன்னும் உண்ணவில்லை என்றதும் அவர்களது அறைக்கு ஓடினான். ஆனால் அவன் மனைவி அங்கே இல்லை. ஒவ்வொரு அறையாக தேடிப் பார்க்க அவளோ அவன் கண்களில் சிக்காது கண்ணாமூச்சி ஆட்டம் காட்டிக் கொண்டே இருந்தாள்.

“இவ எங்கே போனா இந்த நேரத்தில... ?” என்று எரிச்சலுடன் புலம்பியபடி தேடியவனுக்கு அப்போது தான் நினைவில் வந்தது. இன்று பௌர்னமி தினம் என்று.

வெண்பாவுக்கு முழு நிலவை ரசிப்பதில் அலாதி இன்பம். அதனால் கண்டிப்பாக மொட்டை மாடியில் தான் இருக்க வேண்டும் என்று தோன்ற மொட்டை மாடியை நோக்கி விரைந்தான் அவன்.

லேசாக உப்பித் தெரிந்த மணி வயிறுடன் கர்ப்பிணிப் பெண்கள் அணியும் ஃப்ராக் அணிந்து ஹேர் இன் பன் ஸ்டைலில் முடியை சேர்த்து கட்டியிருக்க, தாய்மை தந்த பூரிப்புடன் நிலவொளியில் மிளிர்ந்த அழகிய வதனத்துடன் நின்றிருந்த தன்னுயிரின் பாதியின் பக்கவாற்றுத் தோற்றத்தை கண்களால் பருகியவன் அவள் பின்னே சென்று அணைத்துக் கொண்டான்.

“ஏன்மா... பனியில் வந்து நிக்குற? நீ இன்னும் சாப்பிடலை பேபிக்கும் பசிக்கும்ல. வா மா சாப்பிட்டு வரலாம்... ” கனிவுடன் அழைத்தவன் அவள் வயிற்றை தடவ அந்த வித்தியாசத்தை உணர்ந்தான்.

“குழந்தையின் அசைவு புரியாத கணவன் அவளை புரியாமல் விழிக்க, அவளை திரும்பி அணைத்தவள், அவள் காதோரம் எம்பி,

“குரு நம்ம பேபி இப்போ உதைச்சான்... மம்மி இவ்வளவு நேரம் சாப்பிடாம வெயிட் பண்றாங்க நீங்க ரொம்ப லேட்டா வந்து இருக்கீங்கனு... ” என்று கிசுகிசுப்பான குரலில் கூறி கிளுக்கிச் சிரிக்க, அவளது கிசுகிசுக் குரல் தந்த போதையில் அவள் தன் புறம் இழுத்தான்.

இடையோடு கையிட்டு அணைத்து, அவள் முன் நெற்றியில் விழுந்திருந்த ஒற்றை முடியை கையால் விலக்கி, அவள் முகத்தில் ஒற்றை விரலால் கோலமிட, கணவனது தொடுகையில் உடல் சிலிர்க்க அவள் கன்னங்கள் இரண்டும் அந்தி வானமாய் சிவந்தன.

தன் மனையாளின் கன்னச்சிப்பை கண்டு இதழ்களில் இளநகை பூக்க அவள் இதழ்களை சிறை செய்தான் அந்தக் காதல் காதல் கணவன்.

நீண்ட முத்தத்தை அளித்து விடுவித்தவன் அவள் முகம் நோக்கி ,

“உன்னை அந்த மூனு மாதம் ரொம்ப கஷ்டப்படுத்தி இருப்பேன்ல?” அவன் குரலில் தெரிந்த வேதனை பெண்ணவளை தாக்க,

“குரு ப்ளீஸ் எத்தனை தடவை தான் இதையே சொல்லுவீங்க… அது உங்களையே அறியாம நடந்தது… ஆரம்பத்தில் நான் கூட கோவப்பட்டேன் தான் ஆனால் அந்த நேரத்தில உங்க பக்கத்தில இருக்க முடியாம போச்சேன்னு அதை விட அதிகமாக வருத்தப்பட்டேன்… நீங்க எனக்கு முழுசா கிடைச்சிருக்கீங்க… எனக்கு அது போதும் குரு நான் ரொம்ப சந்தோஷமா இருக்கேன்… ” என்று அவனை நெருங்கி இறுக அணைத்து ஆறுதலாய் அவன் முதுகை தடவ அவன் கண்களில் கண்ணீர் அரும்பியது.

“டேய் குரு… நான் எதுக்காக இங்கே வந்தேன்… நீ என்னடான்னா எமோஷனல்லா பேசி நான் வந்த வேலையை மறந்துட்டேன்… அங்கே பாருடா அந்த நிலாவை எவ்வளவு அழகா இருக்குனு… ” என்று சூழ்நிலையை மகிழ்ச்சியான தருணமாக மாற்ற எண்ணி அணைப்பிலிருந்து விலகி நிற்க,

அவள் இடையை பற்றி தன் புறம் இழுத்தவன், நெற்றியோடு நெற்றி முட்டி,

“அதைவிட இந்த நிலா ரொம்பவே அழகாக இருக்கு… ” என்று ஹஸ்கி குரலில் கூறி அவனது ட்ரேட் மார்க் புன்னகையை சிந்த, அதில் சிவந்தவள் அவன் மார்பில் சாய்ந்து அவனை ஆரத் தழுவிக் கொண்டாள்.

# முற்றும்